யுனெஸ்கோ கூரியர்

டிசம்பர் 1984—தனிப்பிரதி ரூ. 2-00

நாடோடிகள்



ஒளிப்படம்: எர்னஸ் ஷைடகர் ரொஃபேர் பாரிஸ்

வாழ்வேண்டிய காலம்...

பௌத்த சமயத்தில் மடாலயங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. அவை அறிவொளி பெறும் சாதனங்களாகக் கருதப் படுகின்றன. பௌத்தத் துறவிகள் ஆழ்ந்த கல்வியறிவு பெறுகின்றனர். சிலவேளை 'ஹீனயானம்' (சிறிய சாதனம்) எனப்படும். 'தேரவடா' (பெரியோர் வழி) பௌத்தம் தழைத்தோங்கும் தென், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் துறவிகள் சமய, உலகியல் கல்வியும் கற்பிக்கின்றனர். மேலே: படிப்பில் பர்மியத் துறவிகள்.

தமிழ் நாட்டில் நாடோடிகள்

வி. கணபதி

நாடோடிகள் என்போர் ஓரிடத்தில் நிலையாக தங்காது ஊர் ஊராகச் செல்பவர் ஆவர். தமிழ் நாட்டில் பழங்காலத்திலும் சிலர் நாடோடிகளாய் வாழ்ந்திருக்கிறார்கள். அந் நாடோடிகளைப் பற்றியும் அவர்கள் வாழ்ந்த, வாழும் வாழ்க்கை பற்றியும் இலக்கியங்கள் பேசுகின்றன.

பழந்தமிழ் நாட்டில் சிலர் நாடோடிகளாய் வாழ்ந்தனர் என்பதனை ஒரு சில இலக்கியக் குறிப்புகளால் அறிகிறோம். அவர்களுள் பாணர் கூத்தர் என்பாரைக் குறிப்பாகக் கூறலாம். பாணர் என்போர் இசை பாடுவோர் ஆவர். இசை பாடிச் செல்வோர் இசைப்பாணர் என்றும், பெரிய யாழ் வைத்துப் பாடிச் செல்பவர் பெரும் பாணர் என்றும் கையில் சிறிய யாழ் வைத்துப் பாடிச்செல்பவர் சிறுபாணர் என்றும், மண்டை ஓடு கொண்டு பாடி இரந்து செல்பவர் மண்டைப் பாணர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இவரைப் போன்று பாடிக் கொண்டு ஆடியும் செல்பவர் கூத்தர் எனப்பட்டனர். இவர்கள் நிலையாக ஓரிடத்தில் இல்லாது ஊர் ஊராகச் செல்பவர் என்பதனைப் பத்துப்பாட்டில் சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்னும் பாட்டுகள் மூலம் நாம் உணரலாம்.

ஓர் ஊரில் பரிசு பெற்று வேறூர் செல்லும் பாணன் எதிர்ப்படுகின்ற பாணனுக்கு வழிகூறிச் செல்வதாக அமைவதே ஆற்றுப்படையாகும். இன்னின்ன ஊர் சென்றால் இன்னின்ன பெறலாம் என்றும் (சிறுபாணாற்றுப்படை வரிகள் 146 முதல் 195 வரை) இன்னின்ன இடர்ப்பாடுகள் உள்ளன, அவற்றை இன்னின்னவாறு கடத்தல் வேண்டும் என்றும் கூறுகிறான். (கூத்தராற்றுப்படை வரிகள் 193 முதல் 403 வரை) இக் குறிப்புகளிலிருந்து அவர்கள் நாடோடிகளாய் வாழ்ந்தனர் என நாம் உய்த்துணரலாம். சங்க கால நூல்களில் நாம் இவ்வகையான குறிப்புகளைக் காண்கிறோம்.

பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் அமைந்த சிற்றிலக்கியங்களான குறம், குறவஞ்சி போன்ற நூல்களும் குறவன் குறத்தியர் ஓரிடத்தில் நிலையாக இராது நாடோடிகளாய் இருந்தனர் என்னும் செய்திகளை நாம் அறிய உதவுகின்றன. சிங்கன் என்னும் குறவன் தன் துணைவியாகிய சிங்கியைப் பார்த்து அவள் அணிந்துள்ள நகைகளைப் பற்றிக் கேட்க அவள் சேலத்து நாட்டில் குறி சொல்லிப் பெற்றது எனவும், பாண்டியனார் மகள் தந்தது எனவும், குட்டத்து நாட்டார் கொடுத்தது எனவும் பல நாடுகள் பற்றிக் கூறுகிறாள். இவற்றிலிருந்து இவர்கள் நாடோடி வாழ்கை உடையவர் என்பதனை நாம் ஓரளவு அறியலாம்.

தற்போது தமிழ்நாட்டில் பலவித நாடோடிகள் உள்ளனர். அவர்களும் குடுகுடுப்பைக்காரர், பூம்பூம் மாட்டுக்காரர், லண்டர், பைராகி, மணியாட்டிக்காரர், நரிக்குறவர் ஆகியோரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

குடுகுடுப்பைக்காரர்

இவர்கள் ஏறத்தாழ 5000 பேர் உள்ளனர். இவர்களுள் பெரும்பலோர் மார்கழி மாதம் இரவில் குடுகுடுப்பை யாட்டிக்கொண்டுவீடு வீடாகச்சென்று குறி சொல்லிச் செல்வர். பகலில் வந்து பணம் யாசிப்பர். கிழிந்த துணிகளையும் பழைய ஆடைகளையும் பெற்றும் செல்வர். இவ்வினத்தவரின் பெண் பாலார் துணிப்பைகள் தைத்து வீடு வீடாகச் சென்று விற்பதுடன், பாட்டுப் பாடிப் பணம் கேட்பர். கிலுகிலுப்பை செய்து விற்பர். சில பெண்டிர் ஓலைச் சுவடி வைத்துக் குறி சொல்வர். இவர்களுள் பத்துப் பேரே படித்தவர் என்று கூறும் நிலை உள்ளது. படித்தவர் மிகச் சிலரே எனினும் அவர்களுள் ஒருவர் வங்கியில் பணியாளராகவும், ஒருவர் ஆசிரியராகவும் ஒருவர் பேருந்து நிறுவனத்தில் நடத்துநராகவும் பணியாற்றுகின்றனர். நகரப் பகுதிகளில் வாழும் குடுகுடுப்பைகாரர் சிலர் தற்போது பழம் ஆடைகளுக்குப் பண்டமாற்றாகப் பாத்திரம் விற்கும் தொழிலில் ஈடுபட்டு நிலையாக வாழத் தொடங்கியுள்ளனர்.

பூம்பூம் மாட்டுக்காரர்

இவர்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2000 பேர் உள்ளனர். அழகிய காளை ஒன்றும், சிறிய பசு ஒன்றும் வைத்திருப்பர். அவற்றை ஆடை அணிகளால் அலங்கரிப்பர். இரண்டுக்கும் திருமணம் செய்வதாக நிகழ்ச்சி செய்து காட்டுவர். பாட்டுப் பாடி பிச்சை எடுப்பர். இறைவனுக்குப் பிரார்த்தனையாகிவிடும் காளைகளை இவர்கள் பெற்று அவற்றுக்குப் பயிற்சியளிப்பர் இவர்களுள் படித்தவர்களே இல்லை எனலாம்.

லண்டர்

இவர்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1000 பேர் உள்ளனர். நெற்றியிலும், உடம்பிலும் நாமம் போட்டுக் கொண்டு ஜல்லடையில் ஒரு சிறு குழந்தையைப் போட்டு அதைக் கைகளில் ஏந்திக் கொண்டு இடுப்புத் துணி தவிர வேறு ஆடையின்றித் தரையில் புரண்டு செல்வர். நாராயணா, நாராயணா எனக் கூவுவர். கையில் மணியடித்துக் கொண்டும் செல்வர். லண்டு லண்டு என ஒலி எழுப்பிச் சென்றதால் இவர் லண்டர் எனப்பட்டனர் போலும்! இவர்களுள்ளும் படித்தவர்களே இல்லை.

பைராகி

இவர்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1000 பேர் உள்ளனர். கையில் தம்புரா வைத்துக் கொண்டு பாட்டுப் பாடிக் குறி சொல்லுவர். இவர்களைச் சேர்ந்த பெண்டிர் குழந்தையுடன் வீடு வீடாகச் சென்று பாடுவர்; யாசிப்பர் இவர்களுள்ளும் படித்தவர்களே இல்லை.

மணியாட்டிக்காரர்

இவர்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 800 பேர் இருப்பர். இவர்கள் ஒரு கையில் மணி வைத்திருப்பர். மற்றொரு கையில் சாட்டை வைத்திருப்பர். திருநீறும் பொட்டும் அணிந்திருப்பர். அரையாடை தவிர வேறு ஆடையணியாது சாட்டையால் தம் உடல் மீது அடிப்பர். கத்தியால் கீறி இரத்தம் காட்டி இரப்பர் இவர்களைச் சேர்ந்த பெண்டிர் சிறு குழந்தைகளுக்குக் கால்களிலும் இடுப்பிலும் சதங்கை மணி கட்டி ஆடச் செய்வர். இவர்கள் பாடுவர். கையில் தம்பட்டம் வைத்துக்கொண்டு அடிப்பர். வீடு வீடாகச் சென்று யாசிப்பர். இவர்களுள்ளும் படித்தவர்களே இல்லை.

நரிக்குறவர்

இவர்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 50,000 பேர் உள்ளனர். இவர்கள்

நரிவேட்டை ஆடியும், ஊசி, பாசி மணி விற்றும் பிழைப்பவர். இவர்கள் சாலையோர மேடைகளிலும், மரங்களினடியிலும் தங்குவர்.. திறந்த வெளியிலும் ஜர்புக் குடிசை (ஒரு வகைப் புல்) அமைத்தும் தங்குவர். கோவணம் தவிரப் பிற ஆடைகளின்றி கழுத்தில் நிறைய மணிமாலைகளுடன் திரிவர். பெண்கள் சிறிய பாவாடை சட்டையுடன் நிறைய மணிமாலைகளை அணிந்திருப்பர்.

தமிழ்நாட்டில் உள்ள நாடோடிகளில் இவர்களே அதிக எண்ணிக்கையினர். எனவே இவர்கள் நிலையை மேம்படுத்தவும், ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வாழ்க்கை நடத்தவும் அரசு திட்டம் வகுத்து உதவி செய்கிறது. அவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு நிலம் கொடுத்துச் சிறு வீடுகளும் கட்டிக் கொடுக்கின்றனர். திருச்சிமாவட்டத்தில் தேவராயனேரி, பூலாங்குடி, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரக்காடு, வயலூர், சேலம் மாவட்டத்தில் அம்மன் பாளையம், புதுக்கோட்டையில் ரங்கம்மாசத்திரம் ஆகிய இடங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவ்விடங்களில் குடியிருக்க வீடும், நிலமும் கொடுத்தும் நரிக்குறவர் அங்கு நிலையாக வாழவில்லை. விவசாயம் அவர்களுடைய பரம்பரை தொழிலன்று. மேலும் அவர்கள் மன நிலை, எதிலும் உடனடியாகப் பலன் பெறவேண்டும் என்பதாகும். கையில் உணவு கிடைத்தாலும் அதனை உடனடியாக அப்படியே உண்பர். விவசாயம் செய்து நீண்ட நாள் காத்திருத்தல் அவர்கள் இயல்புக்கு இயைந்ததில்லை. மேலும் அவர்கள் ஊர் ஊராகச் சுற்றும் இயல்பினர். எனவே இத்திட்டங்கள் முழுமையான வெற்றி அளிக்கவில்லை. குடியிருப்புகளில் இருப்பினும் பலர் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அரசினர் உதவி தவிர சில கிறித்துவ நிலையங்களும் சமூகத்தொண்டு அடிப்படையில் நரிக்குறவர் குடியிருப்புகளுக்குச் சென்று தொண்டாற்றுகின்றனர். குடிநீர் வசதிக்காகக் கிணறு வெட்டியும், வியாபாரத்திற்கு நிதியுதவியும் அவர்கள் நிலையுயரப் பாடுபட்டனர். அவர்களும் இந்நரிக்குறவர் இனத்தை ஓரிடத்தில் நிலையாக இருக்கச் செய்வதில் வெற்றி பெறவில்லை

இந்நரிக்குறவச் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்று தனிப்பட்டவர்களும் முயற்சி மேற்கொண்டுள்ளனர். திரு. ரகுபதி என்பார் அத்தொண்டில் ஈடுபட்டு நரிக்குறவர் அனைவரையும் ஒன்று திரட்டி நாடோடிகள் நல்வாழ்வுச் சங்கம் என ஓர் அமைப்பு ஏற்படுத்தினார்.

அரசு உதவியுடன் வீட்டு வசதியும் நிலங்களும் நரிகுறவர்களுக்கு கிடைக்க வழி வகுத்தார். மரங்களினடியில் வாழ்ந்தவர், வீடுகளில் வாழ்கின்றனர் என்ற நிலை தவிர வேறு மாறுதல் அவர்கள் வாழ்க்கையில் ஏற்படவில்லை. அச்சமுதாயம் தம்மை ஏற்றுக்கொள்வதற்காக அவர் நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த ஞானசுந்தரி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். தம் தங்கையை ஒரு நரிக் குறவனுக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர்களுடன் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஒரக்காடு குடியிருப்பில் தங்கினார். சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டார். அப்பொழுதுதான் நரிக்குறவர் சமுதாயத்தின் குழந்தைகளைப் படிக்க வைப்பதே அவர்களை உயர்த்தும் வழி என முடிவு செய்தார்.

பள்ளிக்குச் சென்று வரும் குழந்தைகள் பெற்றோருடனேயே இருந்ததால் சுகாதாரமற்ற நிலையிலும், உடல் நலக்கேடு உண்டாக்கும் நிலையிலும் வாழ்வதைக் கண்டார். அதனால் நரிக்குறவர் குழந்தைகளுக்குத் தனியாக ஓர் இல்லம் அமைத்தல் அவசியம் என உணர்ந்தார். அதன்படி 1972-ஆம் ஆண்டில் சைதாப்பேட்டையில் நரிக்குறவர் மாணவர் இல்லம் ஒன்று நிறுவினார். இந்தியாவிலேயே நரிக்குறவர்களுக்காக அமைந்த இல்லம் இஃதொன்றேயாகும். நரிக்குறவர் குழந்தைகள் பிற குழந்தைகளோடு கலந்து பழகுவதற்காகத் திக்கற்றோர் இல்லம் தொடங்கிக் குழந்தைகளை ஒன்றாக வாழச் செய்தார். பெற்றோரை நோக்கி ஓடிவிடும் சிறுவரையும், குழந்தைகளை அழைத்துச் சென்றுவிடும் பெற்றோரையும் கண்ட இவர் இல்லத்தைப் பெருஞ் சிக்கலுடன் நடத்தி வந்தார். இவர் தம் விடாமுயற்சியும் பேருழைப்பும் பலன் தந்தன.

தற்போது திருச்சி தேவராயனேரியிலும், செங்கற்பட்டு களியாம்பூண்டியிலும் சென்னை சைதாப்பேட்டையிலும், காஞ்சிபுரத்திலும் இல்லங்கள் நிறுவி நரிகுறவர் சமுதாயத்தை உயர்த்தப் பாடுபட்டு வருகிறார். காஞ்சிபுரத்தில் உள்ள இல்லம், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் வயது வந்த பெண்களுக்காக அமைந்ததொன்றாகும்.

நரிக்குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் இப்பள்ளிகள் மூலமாகப் படித்து வருகின்றனர். இச்சமூகத்தினரில் ஒருவர் மதுரை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் பணியாளராக உள்ளார். அரசுப்பணியில் உள்ளவர் இவர் ஒருவரே ஆவர். நரிக்குறவர் பள்ளிகளில் படித்துச் சென்றவர்களில் ஒருவர் அசோக் லேலண்டு நிறுவனத்திலும், ஒருவர் கரூர் வைசியா வங்கியிலும், பெண்டிரில் ஒருவர் சமூகக் காடுகள் துறையிலும் பணியாற்றுகின்றனர்.

இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ள நாடோடிகளில் பெரும்பான்மையோருக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் ஓரளவு பயனளித்து வருகின்றன. நாடோடி மக்களை உயர்த்தி அவர்களை நாகரிகமுடையவர்களாக்க அச்சமூகத்தினரின் குழந்தைகளை இல்லங்களில் தங்க வைத்துக் கல்விப் பயிற்சியளிப்பதே சிறந்த வழியாகும்.

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடை செய்தது. ஒரு சட்டம், இவர்கள் மற்றச் சமுதாயத்தினருக்கு மத்தியில் வாழவேண்டுமென வற்புறுத்தியது. மற்றவர்களுடன் இவர்கள் கலந்து வாழ்வதற்கு மற்றொரு சட்டம் தடை விதித்தது. நாடோடி இனத்தை அடியோடு அற்றுப்போகச் செய்யும் நோக்கத்துடன் ஆண்களும் பெண்களும் தனித்தனி இடங்களில் வாழவேண்டுமென ஒரு சட்டம் விதித்தது. இவர்களுடைய குழந்தைகளை இவர்களிடமிருந்து பிரித்துத் தனி இல்லங்களில் வைக்க ஒரு சட்டம் வகை செய்தது. இவர்களை அமெரிக்காவுக்கு நாடு கடத்த ஒரு சட்டம் ஆணையிட்டது. இன்னொரு சட்டம் இவர்கள் அங்கு செல்லத் தடைவிதித்தது, 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐந்தாம் ஃபிலிப் ஆட்சிக் காலத்தில் தேவாலயங்களில் எந்தக் குடிமகனும் தற்காலிகமாக அடைக்கலம் தேடிக் கொள்ளலாம் எனச் சட்டம் இருந்தது. ஆனால் அந்த தேவாலயங்களில் நாடோடிகள் நுழைய அனுமதியில்லை. இதே போன்றதொரு சட்டம் இதற்கு முன்னர் பிரிட்டனிலும் நடைமுறையிலிருந்தது. நாடோடிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடங்களுக்கு வெளியே அவர்கள் காணப்பட்டால் அவர்களைச் சுட்டுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. நாடோடிகளுக்கெதிரான இந்த அடக்கு முறை 18ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது. அப்போதுதான், அண்டலூசியாவில் முதலாவது ஃப்ளாமெங்கோ பாடல்கள் கேட்கலாயின.

முதலில் தோன்றிய இந்த எளிய பாடல்கள், 19ஆம் நூற்றாண்டின் வியத்தகு புதிய வடிவங்களையும் பாணிகளையும் பெற்று ஓர் அற்புதக் கலையாக வளர்ச்சியடைந்தது. இக்கலை நாடோடி மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களின் வெளிப்பாடாக அமைந்திருந்தது, ஆழ்ந்த அவலங்களையும் சகோதரத்துவத்தை வளர்க்கும் அற்புதக் கலை வடிவங்களாக மாற்றிவிடும் மனிதனின் ஆற்றலுக்கு இது ஒரு சான்றாக அமைந்தது.

இந்த இணையற்ற கலை வடிவம், கடந்த காலத்தை நினைவு கூர்ந்து, மனிதன் மனச்சாட்சியைத் தட்டியெழுப்புவதற்குஉதவுவதாகவும் விளங்குகிறது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மானுவல் டிஃபல்லா, ஃபெடரிக்கோ கார்சியா லோர்சா என்ற படைப்பாற்றல் கலைஞர்கள் இந்தக் கலையைத் தீவிரமாகப் பரப்பினார்கள். இந்தக் கலையில் சிறந்து விளங்கிய டியா ஆனிக்கா லா டார்னிக்கா என்ற நாடோடிப் பாடகியிடம் "பாடும்போது உங்களுக்கு என்ன உணர்ச்சி ஏற்படுகிறது?" எனக் கேட்டதற்கு, "என் மனம்போல் பாடும்போது, என் வாயில் குருதி கொப்பளிக்கிறது" எனக் கூறினார். மரினா விட்டோ எல் டி மரியா என்ற மற்றொரு நாடோடிப் பாடகரிடம், "நீங்கள் ஏன் பாடுகிறீர்கள்?" எனக் கேட்டதற்கு, அவர் "நான் வாழ்ந்ததை நினைவுகூர்கின்ற காரணத்தால்" என்று விடையளித்தார்.

தமிழில்: இரா. நடராசன்

யுனெஸ்கோ கூரியர்
உலகைக் காட்டும் பலகணி

ஆசிரியர் மடல்

டிசம்பர் 1984

மக்கள் நாடோடிகளைச் சரியாகப் புரிந்துகொள்வதில்லை; அவர்களைப் பழிக்கின்றனர்; தவறாகக் கருதுகின்றனர்; துன்புறுத்துகின்றனர். நாடோடிகள் சிறுபான்மையினர். அவர்களது நீண்ட துயரார்ந்த வரலாற்றில் அவர்களைப்பற்றி மிகவும் தவறான எண்ணம் நிலவிவந்துள்ளது.

நாடோடிகளின் சமுதாயம் தனது ஒருமைப்பாட்டையும் மரபான வாழ்க்கையையும் அழிக்கவல்ல பிற பண்பாடுகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டு, அதனால் இன்று அது உலக முழுவதும் புதிய சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகளை எதிர் நோக்கி நிற்கின்றது. ஆகவே, நாடோடிகளின் தனித்தன்மையின் உண்மை இயல்பையும், அவர்களது கடந்த, நிகழ்காலங்களையும் பற்றி அறிவிப்பது முக்கியமாகும். அப்போதுதான் நாடோடிகளுக்கும் பிறருக்குமிடையே ஒப்புரவையும் கூட்டுறவையும் நிலைநாட்ட முடியும்.

உலக முழுவதும் நாடோடிகள் தம் சங்கங்களை நிறுவியுள்ளனர். அவற்றின் வாயிலாக அரசாங்கங்களுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தம் கருத்துகளை வெளிப்படுத்துகின்றனர். சிறுபான்மையினரான நாடோடிகளின் பிரச்சினைகளை நீண்ட காலமாகவே உணர்ந்துள்ள ஐ. நா. சங்கம் 1979இல் ரொமானி சங்கத்திற்கு அறிவுரை வழங்கும் நிலையை அளித்துள்ளது. மேலும் யுனெஸ்கோவுடன் தொடர்புடைய, அரசாங்கச் சார்பற்ற நிறுவனமாகிய நாடோடி இயல் சங்கம் ''எத்தியூத் சிகான்'' (நாடோடி இயல்) எனும் காலாண்டு இதழை வெளியிடுகின்றது. அது நாடோடிச் சமுதாய நலன், அவர்களுடைய பிரச்சினைகள் ஆகியவைபற்றி உலகம் தழுவிய செய்திகளைத் தருகின்றது.

நாடோடிகளின் ஆளுமைபற்றி உலகம் அறிந்து உணரச் செய்வதே 'யுனெஸ்கோ கூரிய'ரின் நோக்கம். நாடோடிகள், அல்லது அவர்களைப்பற்றி ஆராய்ந்தவர்கள், அவர்களோடு வாழ்ந்தவர்கள் இக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றனர்.

நாடோடிகள் பலர் தம்மை 'ரோம்' என்றழைக்கின்றனர். ஐ. நா. வும் அவர்களை அவ்வாறே குறிப்பிடுகின்றது. ஆயினும், உலகின் பல பகுதிகளில் அவர்களுக்கும் பல பெயர்கள் உள்ளன. ஆங்கிலம் பேசும் பகுதிகளில் 'ஜிப்சிகள்' அல்லது ரொமானிகள் என்றும், ஃபிரெஞ்சு பேசும் பகுதிகளில் சிகான்கள் என்றும், ஸ்பானிய மொழி பேசும் நாடுகளில் கித்தானோஸ் என்றும் பல பெயர்கள் உண்டு. பல வகையான, ஆனால் ஒன்றுபட்ட இம்மக்களைக் குறிப்பிடுவதற்கு நன்கு தெரிந்த இப்பெயர்களையே இங்கு பயன்படுத்தியிருக்கிறோம்.

அட்டை : போலந்தில் நாடோடிகளுடன் வாழ்ந்த போலந்து நாட்டுத் தொழிலாளி ஸ்பிஸ்லா பைலெக்கி தீட்டிய ஓவியத்தின் ஒரு பகுதி.

நிழற்படம்: © ஜோக்கிம் ஸ்வாக்கோவ்ஸ்கி, த்யூசெல்தோர்ஃப்

தலைமை இதழாசிரியர் : எதுவார்து கிளிசான்



நிழற்படம் © ஜோக்கிம் ஸ்வாக்கோவஸ்கி த்யூசெல்தோர்ஃப்

4 நாடோடிகளின் குறிக்கோள்
–அமது மஹ்தார் எம்'போ

5 உலகம் அவர்களது உறைவிடம்
–ஃபிரான்சுவா தெ வோ தெ ஃபோலெத்தியர்

8 நாடோடிக் கொல்லர்கள்
–எஸ்த்பான் கோபாஸ் பேந்த்

11 பண்பாட்டு இடைவெளியை இணைத்தல்
–ஷர்க்குலின் சார்லமான்

15 ஐரோப்பாவின் நாடோடிக் கைவினைஞர்
–மிக்லோஸ் டோம்கா

18 பகிர்ந்து பாசம் காட்டும் குடும்பம்
–ரோசா டைகோன் ஜானுஷ்

21 'அலையும் குரல்'
–கியூலியோ சோராவியா

24 நாஜி கொடுமைக்குப் பலியான ஐந்து இலட்சம் நாடோடிகள்
–மிரியாம் நோவிட்ச்

26 கூடாரக் களியாட்டத்திலிருந்து நாடக மேடைக்கு
–நிக்கோலாய் ஸ்விச்செங்கோ

29 ஃப்ளாமெங்கோ '...வாயில் குருதிச் சுவை'
–ஃபெலிக்ஸ் கிராந்த்

32 பிரேசில் நாடோடிகள்
–ஆத்திக்கோ விலாஸ்-போஸ் தா மோத்தா

2 வாழவேண்டிய காலம்...
பர்மா: அறிவொளிப் பாதை

ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ மாதந்தோறும் 27 மொழிகளில் வெளியிடும் இதழ்.

7 பிளேஸ் தெ போந்தனோ, 75700 பாரிஸ்

தமிழ், ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், ஜெர்மன், அராபிக், ஜப்பானிஸ், ஹிந்தி, பல்கேரியன், பெர்சியன், டச்சு, போர்த்துகீஸ், துர்க்கிஸ், மலேசியன், கொரியன், சுவாஹிலி, ஹீப்ரு, கிரோடே-செர்ப், மாசிடோனியன், ஸ்லோவேன், கட்டலான், செர்போ-கிராட், சீனம், இத்தாலியன், உருது

தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர்
மீ. முகம்மது முஸ்தபா
(மணவை முஸ்தபா)

ISSN 30304-3177
No.12.

நாடோடிகளின் குறிக்கோள்

அமது மஹ்தார் எம்'போ

நாடோடிகள் தமது உழைப்பாற்றலாலும் இடையறாத உறுதியினாலும் தமது அலைச்சல்களின்போது தம் இனத்தின் தனித் தன்மையையும் ஆளுமையையும் பேணிக் காத்து வந்துள்ளனர்.

பயணங்களின் பயனாக அவர்கள் பல்வேறு நாட்டு மக்களுடன் தொடர்பு கொண்டனர். ஆயினும் அவர்களுடன் முற்றிலும் கலந்துவிடவில்லை. நிலத்தில் வேரூன்றிவிடாதது மட்டும் இதற்குக் காரணமன்று. அவர்கள் உள்ளத்திலும் சமூக, மனிதப் பண்பு நெறிகளிலும் மாறவில்லை. எத்தனை மாற்றங்கள் நேர்ந்த போதிலும், அவர்களுடைய உலகளாவிய பயணங்கள் இடையறாத 'தொடர்ச்சியின் இயக்கமாக இருந்தன. தனித் தன்மையும், உலகப் பயணங்களின் பயனாகப் பூன்னாட்டு இயல்புமுடைய அவர்களின் வரலாற்றில் இவ்விரு காரணங்களுக்காக, யுனெஸ்கோ அக்கறை கொண்டுள்ளது. யுனெஸ்கோவின் செயல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ள கொள்கைகளுக்கு எடுத்துக்காட்டாக அவ் வரலாறு விளங்குகிறது.

எல்லா நாடுகளின், சமுதாயங்களின் பண்பாட்டுத் தனித் தன்மையை ஏற்று,'பண்பாடுகளிடையே உறவுகளை வளர்த்து நாகரிகங்களுக்கிடையே உரையாடலைப் பரவலாகப் பெருக்கி ஊக்குவிக்க 'யுனெஸ்கோ விழைகின்றது. யுனெஸ்கோ எதையும் இரண்டாந்தரப் பண்பாடாகக் கருதுவதில்லை. அரசியல் பொருளாதார, மக்கள் தொகை அளவு எவ்வாறு இருப்பினும், ஒவ்வொரு நாடும் எல்லா வகை இன, மொழி வேறுபாடுகளிலிருந்தும் விடுதலை பெற்று. தனது பண்பு நெறிகளை ஏற்று, மதிக்கும் முழு உரிமை பெற்றுள்ளது. பெரும்பான்மைப் பண்பாடுகளுக்கும். சிறுபான்மைப் பண்பாடுகளுக்குமிடையே உயர்வு தாழ்வு ஏற்படுத்த முடியாது: ஏனெனில், தாழ்வாகக் காணப்படும், பலரறியாத பண்பாட்டில் மற்ற எல்லாப் பண்பாடுகளுக்கும் தேவையான உண்மைகள் பொதிந்திருக்கலாம்.

ஆஃப்ரிக்க நாட்டவன் எனும் முறையில் இப் பொதுக் கருத்துகளுடன். நாடோடிப் பண்பாட்டின் வாய்மொழி மரபுகளையும் அரிய பண்பு நெறிகளையும் பற்றி இன்னும் பல சொந்தக் கருத்துக்களையும் கூற விரும்புகிறேன்.

வாய்மொழி மரபானது ஆஃப்ரிக்க நாடுகளின் ஆற்றலில் பெரும் பங்கு பெற்றுள்ளது, அவற்றின் உள்ளுயிரைப் பேணி மாண்பை இடைவிடாது பாதுகாத்து வந்துள்ளது. நாடோடி பண்பாட்டின் இதயமாக விளங்கும் வாய்மொழி மரபு வரலாற்றின் தாக்குதல்களிலிருந்து அதைக் காத்திருக்கக்கூடும் மரபான பண்பாடுகளுக்கெல்லாம் பொதுவான புகுமுக முறைகள் போன்ற வழிகளில் தலைமுறை, தலைமுறையாகப் பரவும் வாய்மொழி மரபு நாடோடிகள் தம் தனித் தன்மையைப் பாதுகாக்க உதவுகின்றது.

ஆஃப்ரிக்க சாஹெலிலும் பரவலாக காணப்படும் நாடோடிகள் அங்கு "நிலையாக வாழும உழவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். இத்தொடர்பு நிலையாக வாழும் சமுதாயங்களுடன் பரிமாற்றமாகவும் சிலவேளை இணைந்து வாழ்வதாகவும் அமைந்துள்ளது. மேலும், இது பண்பாட்டுத் தனித்தன்மைக்கும் சுதந்திரத்திற்கும உறுதியளிக்கின்றது.

இவர்கள் தம் தனித்தனமையைக் காத்துவருவதால், பழங்கதை மரபு சூழ்ந்த இவ்வினத்தவர் தம் வரலாற்றைத் தாமே வகுத்து வருகின்றனர் இவர்களின் வாழ்க்கை முறை மாற வேண்டிய நிலை ஏற்பட்டாலும், இவர்களின் மரபு நிலைநிற்கும். இது அறப் பண்பு நெறிகளுக்கும, வாழ்க்கை விதிக்கும் ஆதாரமாகவும், மனித இனத்தின நலத்தில் பெரும் பங்கேற்கும் பண்பாட்டிற்கு இடையறாத ஊக்கமாகவும் திகழ்கின்றது.

நிழற்படம் எச் டபிள்யூ, சில்வெஸ்டர் © ரா:ஃபோ, பாரிஸ்

உலகம் அவர்களது உறைவிடம்

ஃபிரான்சுவா தெ வோ தெ ஃபோலெத்தியர்

பல நூற்றாண்டுகளாக நாடோடிகளின் தொடக்க வரலாறு மறைபொருளாகவே இருந்தது. இன்றிருந்து நாளை செல்லும், புரியாத பழக்கங்களுள்ள இக் கரு நிற நாடோடி கூட்டங்களைப் பற்றி அறிவதற்கு, ஓரிடத்தில் நிலையாக வாழ்ந்த மக்கள் ஆவல் கொண்டனர். பல எழுத்தாளர்கள் அவர்களைப்பற்றிய புதிரை விளக்குவதற்காகப் பல நம்பத் தகாத கருத்துக்களைப் புனைந்தனர்.

19ஆம் நூற்றாண்டில் அறிவியல் ஆராய்ச்சி அதற்கு விடை அளித்த போதிலும், இன்றும் பல கற்பனைக் கதைகள் உலவிவந்தன.

நாடோடிகளின் மொழிபற்றிய ஆழ்ந்த ஆய்வுக்குப் பிறகு, ஊக மூட நம்பிக்கைகளும், நம்ப முடியாத கற்பனைகளும் மறைந்துபோயின. மறுமலர்ச்சிக் காலத்திலேயே அறிஞர்கள் அம்மொழிபற்றி ஓரளவு அறிந்திருந்தனர். ஆனால் அவர்கள் அது எம்மொழிக் கூட்டத்தைச் சேர்ந்தது என்பதையோ, எங்கே தோன்றியது என்பதையோ உறுதியாகக் கூறவில்லை. ஆயினும் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிவியல் சான்றின் அடிப்படையில் நாடோடிகளின் தொடக்கவரலாற்றை அவர்கள் திட்டமாக அறிந்துகொள்ள முடிந்தது.

அதன் பிறகு இந்த அறிஞர்களின் ஆராய்ச்சியைத் தலைசிறந்த மொழியியல் வல்லுநர்கள் உறுதிப்படுத்தினர்.

நாடோடிகள் பேசிய மொழியின் இலக்கணமும் சொற்களும் சமஸ்கிருத மொழியிலுள்ளவை போலவும், காஷ்மீரி, இந்தி, குஜராத்தி, மராத்தி, நேப்பாள் போன்ற பேச்சு வழக்கிலுள்ள மொழிகளிலுள்ளவை போலவும் இருக்கின்றன.

நாடோடிகள் தொடக்கத்தில் இந்தியாவில் இருந்தவர்கள் என்பதைப் பற்றி இன்றைய அறிஞர்கள் இப்போது ஐயுறுவதில்லை. ஆயினும் அவர்களுடைய இனத் தொகுதி, சமூக வகுப்பு, முதலில் குடிபெயர்ந்த காலம் ஆகிய கேள்விகளுக்கு இன்றும் விளக்கம் அளிக்கப்படவில்லை.

நாடோடிகளின் தொடக்க வரலாற்றைக் அறிவதற்கு மொழியியலே மிகச் சிறந்த இயல்பாகும். ஆயினும் மனித இனவியல், மருத்துவம், இனவியல் ஆகியவையும் இதற்கு உதவக் கூடும்.

மேற்கு நோக்கி நாடோடிகள் குடிபெயர்ந்ததிலிருந்து அவர்களைப் பற்றி ஓரளவு திட்டவட்டமான செய்திகள் கிடைக்கின்றன. குறிப்பாக கற்பனையும் வரலாறும் விரவிய இரு பாரசீக ஆதாரங்கள் உள்ளன பாரசீகத்திலிருந்து 12,000 'லாட்' இசைவாணர்கள் வந்ததாக இஸ்ஃபஹானைச் சேர்ந்த ஹம்ஸா 10ஆம் நூற்றாண்டின் மத்தியில் எழுதினார். 'தி எப்பிக் ஆஃப் தி கிங்ஸ்' எனும் நூலை எழுதிய பாரசீக செய்தித் தொகுப்பாளரும், கவிஞருமான ஃபிர்தவ்சி அரை நூற்றாண்டுக்குப் பிறகு இக்கதையையே கூறுகிறார்.

இக்கதை பெரும்பாலும் கற்பனையாக இருக்கலாம். ஆனால் அது, இந்தியாவிலிருந்துவந்த பல நாடோடிகள் பாரசீகத்திலிருந்தனர் என்றும், வேளாண்மையை விரும்பாமல் நாடோடிகளாகத் திரிந்து, சிறு களவும் செய்து வந்தனர் என்றும் தெரிவிக்கிறது.

ஆசியாவின் வழியே நாடோடிகள் அலைந்து திரிந்ததைப்பற்றிக் கூறும் பண்டைய எழுத்து ஆதாரம் இவைதாம். மொழியியல் சான்றுகள் இன்றும் ஆதாரங்களைத் தருகின்றன.

பாரசீகத்தில் நாடோடிகள் புதுச் சொற்களைக் கற்றுக்கொண்டனர்.



நிழற்படம் ப்ருஸ் டேல் © தேசிய புவியியல் சங்கம், வாஷிங்டன்

'குதிரை இல்லாத நாடோடி நாடோடியல்ல' என்பது ஒரு ஹங்கேரியப் பழமொழி. பாஸ்பரஸ் ஜலசந்தி முதல் அட்லாண்டிக் வரை ஐரோப்பா முழுவதும் நாடோடிகள் குதிரை வாணிகம் செய்து வந்தனர். இன்று கூட ஒரு நாடோடிக்கு குதிரையானது சவாரி செய்யும் அல்லது சுமைதாங்கும் விலங்காகவோ. விற்பனைப் பொருளாகவோ மட்டும் இராமல், உண்மை நண்பனாகவும் இருக்கிறது. மேலே: உலகப் புகழ் மிகு குதிரைக் கண்காட்சியில் இங்கிலாந்தில் வெஸ்ட்மோர்லாண்டிலுள்ள ஆப்பிள்பியின் தெருவில் ஒரு நாடோடி தன் குதிரையின் ஓட்டவேகத்தைக் காட்டுகிறார்.

இவை பிந்திய ஐரோப்பிய பேச்சு வழக்குகளில் காணப்படுகின்றன. அவர்கள் இரு கிளைகளாகப் பிறகு சென்றனரென ஆங்கிலேய மொழியியலார் ஜான் சாம்ஸன் கருதுகிறார். சிலர் மேற்கிலும் தென்கிழக்கிலும் தொடர்ந்து சென்றனர்; மற்றவர்கள் வடமேற்கு நோக்கிச் சென்றனர். பிந்தியவர்கள் அர்மீனியா வழியாகச் சென்றனர். பிறகு அவர்கள் காக்கஸஸ் வழியாகச் சென்றபோது ஒசெட்டுகளிடமிருந்து புதிய சொற்களைக் கற்றுக் கொண்டனர்.

இறுதியாக அவர்கள் ஐரோப்பாவையும் பைசாண்டிய உலகையும் அடைந்தனர். அது முதல் நாடோடிகளைப் பற்றிப் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக பாலஸ்தீனத்திற்குச் சென்ற ஐரோப்பியப் பயணிகள் எழுதிய விவரங்கள் உள்ளன,

1322இல் ஸைமன் சிமியோனிஸ், அறியார்ந்த ஹ்யூ ஆகிய இரு சிறு துறவிவரும் ஹாம் இனத்தோராகக் கருதப்பட்ட கிரீட்டில் இருந்ததைக் கண்டனர். அம் மக்கள் கிரேக்க வைதீக முறையில் வழிபட்டனர். அராபியரைப் போல் தாழ்ந்த கருங் கூடாரங்களில் அல்லது குகைகளில் வாழ்ந்தனர். கிரீஸில் அவர்கள் 'அட்கிங்கானோஸ்' அல்லது 'அட்ஸிங்கானோஸ்' எனப்பட்டனர். இது இஸைபாடி, குறி சொல்லும் ஒரு பிரிவினரின் பெயர்.

மோரியாவின் மேற்கு கரையின் அரண் அமைந்த நகரும் முக்கிய துறைமுகமுமான மோடன், வெனிஸிலிருந்து ஜாஃபாவுக்குச் செல்லும் கப்பல்கள் தங்கும் முக்கிய துறைமுகம். அங்கு ஐரோப்பியப் பயணிகள் மிகுதியான நாடோடிகளைக் கண்டனர். எத்தியோப்பியரைப் போல் கறுத்த, அவர்கள் கொல்லர்களாகக் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். அவ்விடம் "சிறிய எகிப்து" எனப்பட்டது. நைல் நதிக் கழிமுகம் போல், அதுவும் வறண்ட பகுதியின் நடுவிலிருந்த செழிப்பான நிலமாகையால் அப் பெயர் பெற்றது போலும், ஆகவேதான், அவர்கள் 'ஈஜிப்தியர்', ஜித்தர்', 'ஜிப்ஸி' என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் தலைவர் சிறிய எகிப்தின் கோமகன் அல்லது பெருமகன் எனப் பெயர் பெற்றார்.

நாடோடிகள் கிரீஸில் பல புதிய சொற்களைக் கற்றுக் கொண்டனர். எல்லாவற்றிற்கு மேலாக, எல்லா கிறித்துவ நாடுகளிலிருந்தும் அங்கு வந்த யாத்திரிகளிடமிருந்து புதிய வாழ்க்கை முறைகளைக் கற்றுக் கொண்டனர். யாத்திரிகர்கள் தனிச் சலுகைகளுடன் பயணம் செய்ததைக் கண்ட நாடோடிகள் தாமும் யாத்திரிகர்களைப்போல் பயணம் செய்தனர்.

கிரீஸிலும், அண்மை நாடுகளை ருமேனிய அரசுகளிலும், செர்பியாவிலும் நீண்ட காலம் தங்கிய பிறகு பல நாடோடிகள் மேற்கே சென்றனர். பைசாண்டிய, துருக்கியப் படைகள் அடிக்கடி போர்புரிந்து, பலமுறை கைப்பற்றி திரும்பக் கைப்பற்றிய மாநிலங்களில் நாடோடிகள் வசதியாக வாழ முடியவில்லை. அவர்கள் பிறகு வெளியேறி, சமய அல்லது அரசாங்க அதிகாரிகளின் நம்பிக்கையைப் பெற முயன்று சென்றபோது எழுதிய குறிப்புகளில் இதற்குச் சான்றுகள் காணலாம், எகிப்திலிருந்து வெளியேறிய பிறகு, முதலில் கிறித்தவராக இல்லை என்றும், பிறகு கிறித்தவராக மதம் மாறினர் என்றும், திரும்பவும் உருவங்களை வழிபடத் தொடங்கினர் என்றும், மறுபடியும் அரசர்களின் வற்புறுத்தலினால் கிறித்தவராக மாறினர் என்றும் அவர்கள் கூறினர். உலக முழுவதும் நீண்ட பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதென்றும் அவர்கள் கூறினர்.

1418இல் பெருங் கூட்டங்கள் ஹங்கேரி, ஜெர்மனி வழியாகச் சென்றன. அங்கு பேரரசர் சிகிஸ்மண்ட் அவர்களுக்குப் பாதுகாப்புக் கடிதங்கள் கொடுக்க இசைந்தார். அவர்கள் வெஸ்ட்ஃபேலியா, வட பகுதிச் சுதந்திர நகர்கள், பால்டிக் கரைப்பகுதிகள் ஆகியவற்றிற்குச் சென்று, பிறகு திரும்பவும் தெற்கே திரும்பி, லீப்ஸிக், மெய்ன் நதிக் கரையிலுள்ள ஃப்ராங்ஃபர்ட் ஆகிய நகரங்கள் வழியாக சுவிட்ஸர்லாந்து சென்றனர்.

1419இல் அவர்கள் இப்போது ஃபிரான்ஸாக இருக்கும் எல்லைப் பகுதியைக் கடந்தனர். ஆகஸ்ட் 22இல் ஷாட்டியோன்-ஆன்—தோம்பிலும், இருநாட்கள் கழித்து மாகோனிலும், அக்டோபர் 1இல் சிஸ்தரோனிலும் அவர்கள் பேரரசரிடமிருந்தும், சவாய் கோமகனிடமிருந்தும் பெற்ற கடவுச்சீட்டுகளைக் காட்டியதாகத் தெரிகின்றது. மூன்று ஆண்டுகள் கழித்து பிற கூட்டங்கள் நெதர்லாந்துக்குச் சென்றன.

கிறித்தவ நாடுகளின் வழியே தடையின்றிப் பயணம் செய்யவேண்டுமானால் அனைவரும் ஏற்றுக்கொண்ட போப்பாண்டவரின் பாதுகாப்பைப் பெற வேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்தனர். ஜூலை 1492இல் ஆந்திரே கோமகன் பொலேரீனோ, ஃபோர்லி வழியே பெருங்கூட்டத்துடன் சென்றார். அப்போது போப்பாண்டவரைப் பார்க்கப்

போவதாக அறிவித்தார்.

ஆயினும், கிறித்தவ உலகின் தலை நகருக்கு அவர் சென்றதாக ரோமானிய நிகழ்ச்சிக் குறிப்புகளிலோ, வத்திக்கான் காப்பகத்திலோ சான்று இல்லை.

ஆகஸ்ட் 1427இல் நாடோடிகள் முதல் முறையாக பாரிஸ் வாயிலில் நுழைந்தனர். அதை அப்போது ஆங்கிலேயர் கைப்பற்றியிருந்தனர். நாடோடிகள் லா ஷாப்பெல் சான் தெனியில் முகாமிட்டனர். அவர்களைப் பார்க்க மக்கள் ஆவலுடன் கூடினர்.

அப்போது விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் சில நடைபெற்றன. குறிசொல்வோர் கைரேகை பார்க்கும்போது, பணப்பைகள் மறைந்தன. பாரிஸ் ஆயராகிய தலைமைக் குருகுருட்டு நம்பிக்கையுள்ள கிறித்தவர்களைக் கடிந்தார். ஆகவே நாடோடிகள் அங்கிருந்து வெளியேறி போந்துவாஸ்சாலை வழியே சென்றனர்.

விரைவில் இக்கூட்டத்தினர் ஃபிரான்ஸ் முழுவதும் சென்றனர். சிலர் தாம் சான்டியாகோ தெ கோம்பெஸ் தெலாவுக்குத் திருப்பயணம் செய்வதாகக் கூறி அரகான், கட்டலோனியா வழியே சென்றனர். அவர்கள் காஸ்டிலைக் கடந்து அண்டலூசியா சென்றனர். அங்கு காஸ்டிலின் முன்னாள் தலைமைக் காவலரும் அமைச்சருமான மிகேல் லூக்காஸ் தெ இரான்ஸோ, கோமகன் ஜேனிலிருந்த தமது அரண்மனையில் நாடோடிகளின் பெருமக்களையும் அன்புடன் வரவேற்றார்.

நாடோடிகள் எகிப்திலிருந்து புறப்பட்டு, ஆஃப்ரிக்க கரையோரமாகப் படகுகளில் வந்து அண்டலூசியாவை அடைந்தனர் என்று பல நூலாசிரியர்கள் சான்று எதுவுமின்றி கூறுகின்றனர். ஆயினும் ஸ்பானிய நாடோடிகள் அராபியச் சொற்கள் எதையும் பயன்படுத்தவில்லை. அவர்களது பயண வழிகளும் விவரமாக கொடுக்கப்பட்டன. அவர்கள் அண்டலூசியாவை அடைந்ததும், போப்பாண்டவர், ஃபிரான்ஸ் அரசர், காஸ்டில் மன்னர் ஆகியோரின் பாதுகாப்பை நாடினர்.

நாடோடிகள் நீண்டகாலம் கிரீஸில் தங்கியபோது 'சிறிய எகிப்து' எனும் பகுதியில் வாழ்ந்தனர் (ஆகவே ஐரோப்பாவில் அவர்களை 'ஈஜிப்தியர்' 'ஜித்தர்' 'ஜிப்ஸிகள்' என்றனர்) அப்போது பாலஸ்தீனத்திற்கு அவ்வழியாகச் சென்றயாத்திரிகர்கள் தனிச்சலுகைகள் பெற்றதை அவர்கள் கண்டனர். பிறகு நாடோடிகள் மேற்கு நோக்கிச் சென்றபோது யாத்திரிகர்கள் போலவே சென்றனர். இவ்வாறாக 15ஆம் நூற்றாண்டில் சிறிய எகிப்திலிருந்து ஸ்பெயினுக்குப் புறப்பட்ட நாடோடித் தலைவர்கள் தம்மை கம்போஸ்டெலாவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் எனக் கூறினர். மேலே: வடமேற்கு ஸ்பெயினிலுள்ள சாண்டியாகோ தெ கம்போஸ்டெலா பேராலயம். இது ஜெர்மானியக் கலைஞர் மைக்கில் வோஹில்ஜிமத் (1434-1549) 1491இல் மரத்தில் செதுக்கிய ஓவியம்.

அயர்லாந்தில் குடியேறிய எகிப்தியருக்கு இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. அங்கு பழைய உலோகப் பொருள்களைப் பழுதுபார்ப்போர் ஏராளமாக இருந்தனர். அவர்கள் புதிதாக வந்தவர்களைத் தம்மோடு போட்டியிடுவோராகக் கருதி, அவர்களை விரட்ட முயன்றனர்.

சிறிய எகிப்தைச் சேர்ந்த அந்துவான் காகினோ கோமகன் 1505இல் ஒரு ஸ்காட்லாந்தின் மன்னரான 4ஆம் ஜேம்ஸ் அவரை டென்மார்க் அரசர் ஜானுக்கு அறிமுகம் செய்து பரிந்துரைத்தார். செப்டம்பர் 29, 1512இல் அன்டோனியஸ் கோமகன் என்பார், ஸ்டாக்ஹோமினுள் ஆரவாரத்துடன் நுழைந்தார். அங்குள்ள மக்கள் இதைக் கண்டு பெருவியப்படைந்தனர்.

இவ்வாறாக, 15 முதல் 18ஆம் நூற்றாண்டுகள் வரை ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் நாடோடிகள் சென்றனர். ஆஃப்ரிக்க, அமெரிக்க குடியேற்ற நாடுகள் வரை அவர்கள் சென்ற போதிலும், முற்றிலும் விரும்பிச் செல்லவில்லை.

ஸ்பெயின் நாடோடிகள் பலரை அட்லாண்டிக் கடலுக்கப்பால் அனுப்பியது. பிறகு 16ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து போர்ச்சுக்கல் ஏராளமான 'ஜிகானோ'க்களை அங்கோலா, சாவ டோமே, வெர்டுமுனை, பிரேசில் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பியது.

17ஆம் நூற்றாண்டில் ஸ்காட்லாந்திலிருந்த நாடோடிகள் ஜமெய்க்காவுக்கும் பார்படாஸுக்கும் தோட்டவேலைக்காக அனுப்பப்பட்டனர்; 18ஆம் நூற்றாண்டில் வெர்ஜீனியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்க முதல் ஏராளமான நாடோடிகள் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா சென்றுள்ளனர். அவர்கள் ஐரோப்பியாவில் செய்வது போலவே அதே தொழில்களைச் செய்து, அதே வகையில் வழிபட்டு வருகின்றனர். எங்கிருந்தாலும் கவலையற்று வாழ்கின்றனர். ஏனெனில் தாம் இருக்குமிடத்தை தாயகமாகக் கருதுகின்றனர்.

தமிழில் : வள்ளுவன் கிளாரன்ஸ்



நிழற்படம் © கிளாஸ்கோ அருங்காட்சியகமும், கலைக்கூடமும் கிளாஸ்கோ

பல நூற்றாண்டுகளாக நாடோடிகள் பலவகை பயண வண்டிகளையும் கூடாரங்களையும் பயன்படுத்தினர். ஆனால் 19ஆம் நூற்றாண்டின் நடுவில் தான் இங்கிலாந்தில் கூண்டுவண்டி முதலில் தோன்றியது. இன்று அது உந்து வண்டியாக மாறியிருப்பினும், இன்னும் பலநாடுகளில் குதிரை பூட்டிய கூண்டு வண்டி பயன்படுகின்றது. 1875-1920இல் இங்கிலாந்தில் பெர்க் ஷயரிலுள்ள ரெடிங்கில் பெற்ற 'ரெடிங் வண்டி' எனும் பெரிய வகையாள வாழும் வண்டி பயன்பட்டது. மேலே உள்ளது போன்ற வசதியுள்ள வண்டிகள் செதுக்கு வேலைகளால் அழகு படுத்தப்பட்டிருந்தன.



நிழற்படம் ப்ருக் டேடல் © தேசிய புவியியல் சங்கம், வாஷிங்டன்

நாடோடிகள் முதலில் இந்தியாவிலே தோன்றினர் என இன்று வல்லுநர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஆயினும் நாடோடிகள் மேற்கு நோக்கி நீண்ட பயணம் தொடங்கிய காலம் பற்றி அவர்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை. (பொதுவாக கி.பி. 1000 எனக் கருதப்படுகிறது) நாடோடிகள் ஐரோப்பா முழுவதும், பிறகு உலகெங்கும் பரவினர். கீழே; சிந்து நதியின் இடக்கரை அருகிலுள்ள காதர்பூர் கிராமம் (பாகிஸ்தான்).

ஃபிரான்சுவா தெ வோ ஃபோலெத்தியர்

ஃபிரெஞ்சு ஆவணக் காப்பாளர், வரலாற்றிஞர்; சேன், பாரிஸ் நகர ஆவணக் காப்பகங்களின் இயக்குநர். நாடோடி வரலாற்று மாணவரான இவர், நாடோடிகளுடன் வாழ்ந்து அவர்களுடன் பயணம் சென்றவர். "மில் ஆன் ஹிஸ்துவார் தே சிகான்" (1970), 'லே ஜெஹேமியன் 19 சியேக்கில்' (1981) ஆகியவை நாடோடிகள் பற்றி இவர் எழுதிய நூல்களுள் சில. 1983இல் பாரிஸிலுள்ள பெர்ஷர்-லெவ்ரோ வெளியிட்ட லே மோந்த் தே சிகான்' எனும் இவரது அண்மை நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.

காடுலியா லோகார்கள்: இந்திய



நாடோடிகள் இந்தோ—ஆரிய மரபில் தோன்றியவர்கள்என்பதை மொழியியல், மனித உடலியல், மனித இனவியல் போன்ற துறைகளில் நடத்திய ஆராய்ச்சிகள் அறுதியாக உறுதி செய்துள்ளன. எனினும், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் நாடோடிக் குழுமங்களுக்கும், வடமேற்கு இந்தியாவிலுள்ள பல்வேறு குழுமங்களுக்குமிடையிலான உறவு நிலையின் துல்லியமான தன்மையை இன்னும் அறுதியிட இயலவில்லை. இராஜஸ்தானிலுள்ள'காடிலியா லோகார்' என்ற நாடோடிக்குழுமத்திற்கும் ஐரோப்பாவிலுள்ள வேறு குழுமங்களுக்குமிடையில் பல ஒற்றுமைகள் காணப்படுவதால், இக்குழுமத்தை இந்தியாவிலும் ஐரோப்பாவிலுள்ள வல்லுநர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். மொழி, குடும்ப மற்றும் சமூகக் கட்டமைப்புகள், ஆடையணிகள், சிலவகை நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் ஆகியவற்றில் இந்த ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

''லோகார்'' என்றால் கொல்லர் என்று பொருள் ''கர்டுலியா'' என்பது இவர்கள் பயன்படுத்தும் எருது இழுக்கும் ஒருவகை வண்டி. ஜனவே, ''காடுலியா லோகார்'' என்பதை ''அலைந்து திரியும் கொல்லர்'' என மொழி பெயர்க்கலாம். இதே மண்டலத்தில் நிலையாகும் *மாரு* மற்றும் *மால்வியா* சாதிகளைச் சேர்ந்த கொல்லர்களிலிருந்து இவர்கள் வேறுபட்டவர்கள்.

காடுலியா லோகார்கள் தோன்றிய மண்டலம் இராஜஸ்தான். இவர்கள் தங்களைப் புகழ்பெற்ற இரஜபுத்திர மரபைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். பல கர்ண பரம்பரைக் கதைகள் இதற்கு ஆதாரமாக வழங்குகின்றன. இன்றுள்ள காடுலியா லோகார்கள் இரசபுத்திர அரசர்களுக்கு ஆயுதங்கள் செய்து கொடுத்தவர்களின் வழித் தோன்றல்கள். இதனால், இவர்கள் 1567-1568 வரையில் சிறந்த மதிப்புடன் திகழ்ந்தார்கள். ஆனால், அதன் பின்பு சித்தூர் கோட்டை மீது அக்பர்பல முறை படையெடுத்து, இரஜபுத்திரர் ஆட்சியை வீழ்த்தினார். தாங்கள் தயாரித்த ஆயுதங்கள் இரஜபுத்திரருக்குத் தோல்வியைத் தேடித்தந்ததை லோகார்கள் பெருத்த இழுக்காகக் கருதினார்கள். அதனால் ஆயுதம் தயாரிக்கும் தொழிலுக்கே முழுக்குப் போட முடிவு செய்தார்கள். எனினும், வேளாண்மைக் கருவிகளையும், வீட்டுக் கருவிகளையும் தயாரித்து தங்கள் பழம்பெருமையை மீண்டும் நிலை நாட்டிக் கொண்டார்கள். பெருமளவில் மக்கள் வாழும் மையங்களில் கொல்லத் தொழிலில் நிலைபெற்றுவிட்ட மற்றச் சாதிகளைச் சேர்ந்த கொல்லர்களுடன் பூசல் ஏற்படாமல் தவிர்க்கும் நோக்கத்துடன், நெடுஞ் சாலைகளிலிருந்து வெகுதூரத்திலுள்ள நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்று பணியாற்ற இவர்கள் முடிவெடுத்தார்கள்.

நெடுந்தொலைவுகளைக் கடப்பதற்காகப் பயன்பட்டுவந்த காடுலியா என்ற வண்டியை இவர்கள் பயன்படுத்தலானார்கள். 16-ம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்ட இந்த வண்டியை இன்றும் வட இந்தியச் சாலைகளில் காணலாம். பாத்திரங்கள், கருவிகள், உணவு ஆகியவற்றைவைத்துச் செல்வதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ள இந்த வண்டியின் வடிவமைப்பு மாறவில்லை. எனினும் இந்த வண்டி இன்று போக்கு

நாடோடிக் கொல்லர்கள்

எஸ்த்பான் கோபாஸ் பேந்த்

வரத்துக்கு மட்டுமே பயன்படுகிறது; குடியிருப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை.

காடுலியா வண்டி வலமரத்தில் செய்யப்பட்டது. இது மற்ற வகை வண்டிகளைவிட வலுவானது; கனமானது. இதன் முன்பகுதி அகன்று முக்கோணப் பெட்டி வடிவில் அமைந்திருக்கும். இப்பகுதியை ஒரு கூண்டு மூடியிருக்கும். வண்டியின் பின்பகுதி திறப்பாக இருக்கும். அதன் இருபுறங்களிலும் பொட்டிப்புகள் அமைக்கப்பட்டிருக்கும். காங்குராவிலும், பார்மரிலும் உள்ள ஒருசில கைவினைஞர்கள் மட்டுமே இந்த வண்டிகளைச் செய்கின்றனர். கூண்டுப் பெட்டிக்குப் புறமாகவுள்ள பக்க அடைப்புகளிலும் சக்கரங்களிலும் மரத்தில் வெண்கலத் தகடுகளைப் பதித்து அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்படுகின்றன. பக்க அடைப்புகள் 16 பகுப்புகளைக்கொண்ட 4 பிரிவுகளாகப் பிரித்து, பூவேலைப்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தப் பூவேலைப்பாடுகள் தாம் ஒவ்வொரு குடும்பத்தின் வண்டிக்கும் தனித்தோற்றப் பொலிவைக் கொடுக்கிறது. இந்த வேலைப்பாடுகள் சதுரங்களாகவும், சாய்சதுரங்களாகவும், விண்மீன் வடிவங்களாகவும், மலர் உருவங்களாகவும் அமைந்திருக்கும். மாடு பூட்டப்படும் நீண்ட ஏறுகால், பின்னலிட்ட தோல் வார்ப்பட்டைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

முன்புற முக்கோணக் கூண்டுப்பெட்டியில் பணம், நகை, இனிப்புப் பண்டங்கள், வெண்ணெய், நூல், முகம்பார்க்கும் கண்ணாடி போன்ற பொருள்களை வைக்கலாம். இப்பெட்டியைக் குடும்பத்தின் கருவூலப் பெட்டி எனலாம். இந்தப் பெட்டிக்கு ஒரு கதவு உண்டு. பொருள்களை உள்ளே வைத்து, இக்கதவைச் சாத்திப் பூட்டி விடலாம். வண்டியின் திறப்பான பகுதியின் மையத்தில் அரிசி மூடைகள், அவரை விதை, மாவு ஆகியவை வைக்கப்பட்டிருக்கும். சமையற் பாத்திரங்கள் ஒருபுறமும், கொல்லர் கருவிகள் ஒருபுறமும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மூடைகளுக்கும் கூண்டுப் பெட்டிக்குமிடையில் குடும்பத்தினரின் ஆடைகள் வைக்கப்பட்டிருக்கும். முகாம் தொடங்கியதும், இந்த வண்டியின் கீழும், அதைச் சுற்றியும் குடும்ப வாழ்க்கை தொடங்குகிறது. பாய்விரிப்பு, வெயிலுக்கும், மழைக்கும் பாதுகாப்பாக அமைகிறது.

சித்தூர்க்கோட்டை வீழ்ச்சிக்குப்பிறகு லோகார்கள் இடம்பெயர்ந்து சென்று தங்கிய இடத்தின் சூழலைப் பொறுத்து அவர்களுடைய புதிய நடவடிக்கைகள் அமைந்தன. மனிதனுக்கும் இயற்கைக்கும், இயற்கைக்கும் செயற்கைக்குமிடையிலான உறவுகளின் அடிப்படையில் அமைந்த ஒரு சமநிலைப் பொருளாதார முறையை அவர்கள் வகுத்துக் கொண்டனர். எடுத்துக்காட்டாக, மழைக்காலத்தில், இடம்பெயர்வது கடினம். அதனால். லோகார் குழுமங்கள் நிலையான முகாம்களை ஏற்படுத்தினர். இன்றுங் கூட, லோகார்கள் மே முதல் செப்டெம்பர் வரையில் இத்தகைய முகாம்களிலேயே வசிக்கின்றனர். மே முதல் ஜூலை வரையிலான காலத்தில் இவர்கள் ஓய்வெடுக்கிறார்கள். திருமணம் நடத்துகிறார்கள்; ஆட்சிக் குழுவின் கூட்டங்களை நடத்துகிறார்கள். ஜூலை முதல் செப்டெம்பர் வரையில், உள்ளூர் கால்நடைச் சந்தைகளுக்குச் சென்று தேவையான ஆடு மாடுகளை வாங்கிக் கொள்கிறார்கள்.

மீதமுள்ள எட்டு மாதங்கள் இவர்கள் பயணத்தில் செலவிடுகிறார்கள். இந்தப் பயணம், 16ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு ஒரு திட்டமிட்ட முறையிலேயே நடைபெறுகிறது. இப்பயணத்தின்போது ஒவ்வொரு குழுமத்தினரும், ஒரு குறிப்பிட்ட மண்டலத்தைக் கடக்கின்றார்கள். ஒவ்வொரு குழுமத்தினரும் அந்த வட்டாரத்திலுள்ள குடியானவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வுறவு பல தலைமுறைகளாகஇருதரப் பினராலும் நன்குபேணப்பட்டு வருகிறது.

காடுலியா லோகார்கள், மக்கள் மிகுதியாக வாழும் மையங்களில் நீண்டகாலம் தங்குவதில்லை. பெரும்பாலான நேரத்தைப் பயணத்திலும், குடியானவர்களுடன் தொடர்பு கொள்வதிலுமே அவர்கள் கழிக்கின்றார்கள்; வேளாண்மைக்குப் பணிபுரிவதென இவர்கள் முடிவு செய்ததிலிருந்து, முன்னூறு ஆண்டுகளாகியும், இவர்களுடைய ஆடையணியும், அணி கலன்களும், தலையலங்காரமும் சிறிதும்மாறவில்லை. அதே போன்று, இவர்களுடைய குடும்ப பழக்கவழக்கங்களும் பிறப்பு இறப்புதிருமணச் சடங்கு முறைகளும் மாறவில்லை.

இந்த காடுலியா லோகார் இளைஞன் உடல்நலமும், செல்வமும், செழிப்பும், இன்பமும்தரும் காவல் தெய்வம். ராம்திபோஜியின் பெயரால் ஒரு தாயத்தைக் கழுத்தில் கறுப்பு நூலில் கட்டியிருக்கிறான். ஆண்கள் அணியும் 'முர்க்கி' எனும் காதணியும், இடக்காதின் உச்சியில் மகளிர் அணியும் வளையமும் அணிந்திருக்கிறாள். அருகிலுள்ள பெண் தான் மணமானவள் எனக் காட்ட, தந்த, வெள்ளி வளையல்கள் அணிந்திருக்கிறாள். அவளது காதில் கனமான வெள்ளி வளையம் அணிந்த அடையாளத்தைக் காணலாம். பிற நகைகளைப்போல் இதுவும் கடன் ஈட்டுப் பொருளாகப் பயன்படுகிறது.

நிழற்படம் : ... கோபாஸ், யுனெஸ்கோ

பொதுவாக காடுலியா லோகார்கள் திறந்த வெளியிலுள்ள உலைகளில் தீயை வளர்க்க ஆட்டுத்தோல் துருத்தியைப் பயன்படுத்துவர். ஆனால் இன்று சிலர், அமர்ந்து பணியாற்றும் கைவினைஞர் பயன்படுத்தும், கப்பியுடன் இணைந்த இந்த சைக்கிள் சக்கரம் போன்ற இக்கால இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். கொல்லனின் மனைவி அல்லது மகள் மிதிகட்டையைக் கைப்பிடியாகப் பயன்படுத்தி, சக்கரத்தைச் சுழற்றுகிறாள்' பின்புறம் காடுலியா வண்டி இருக்கிறது. இதன் பெயரால் இந்த இந்திய நாடோடிகள் காடுலியா எனப்படுகின்றனர். 16ஆம் நூற்றாண்டு முதல் இவ்வண்டியின் வடிவம் மாறவில்லை. நீண்ட சதுரப் பக்க பலகைகளிலுள்ள வேலைப்பாடுகள் குடும்பத்தின் தனிச் சின்னமாகும்.

நிழற்படம் ஈ. கோபாஸ், யுனெஸ்கோ

இந்தியாவின் பண்பாட்டுச் சித்திரத்தில் காடுலியா லோகார்கள் ஒரு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறார்கள். இந்த மண்டலத்தின் சமூகப் பண்பாட்டுக் கட்டமைப்பில் இவர்கள் ஓர் இன்றியமையாத அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நிலையாக வாழும் கொல்லர்களுடன் இவர்கள் போட்டி போடவில்லை இரு குழுமத்தினருக்கும் தனித்தனி வாடிக்கையாளர்கள் உள்ளனர். 3.0 ஆண்டுகளுக்கு மேலாக இந்நிலைதான் நிலவியது. இந்த நூற்றாண்டில் தான், கனரகத் தொழில் வளர்ச்சியினால், இந்தியாவின் பொருளாதார' முறையில் மாறுதல் ஏற்படலாயிற்று.

இந்த மாற்றத்தின் விளைவாக, காடுலியா லோகார்களின் பல குழுமங்கள்,

பணியாற்றும் கொல்லர் கனசதுர வடிவஃகுப்பட்டடைக்கல் திருமகளின் உறைவிடமரகவும் தெய்வீக ஆற்றலுள்ளதாகவும் கருதப்படுகின்றது. குடும்ப கருவூலமாகிய அக்கல்லைப் பிறருக்கு கொடுக்கவோ, உருவாக வேலைதவிர வேறொன்றிற்குப் பயன்படுத்தவோ கூடாது. அதனருகில் அமர்ந்துள்ள குடும்பத் தலைவர் 'ஹட்டோடா' எனும் சுத்தியைப் பயன்படுத்துகிறார். இப்படத்திலிருப்பது போலல்லாமல், பொதுவாக மனைவியே 'கான்' எனும் பெரும் சுத்தியுடன் கணவன் முன் நிற்பாள். அவளுக்குப் பதிலாக மகள் நிற்கலாம். ஆனால் மருமகன் உலைக்களத்தில் வேலை செய்யக்கூடாது.

தங்களுடைய வழக்கமான பாதைகளை விடுத்து. மற்ற வட்டாரங்களில் புதிய வாடிக்கையாளர்களை நாடிச் செல்லலானார்கள். அண்டைப் பகுதிகளில் மற்ற நாடோடி அல்லது நிலையான கொல்லர்களுடன் போட்டி போடுவதும், பழைய தொடர்புகளை விட்டுவிடுவதும், தங்கள் குழுமத்தின் உறுதிப்பாட்டைச் சீர்குலைக்கும் மற்றப் பண்பாடுகளை எதிர்நோக்குவதும் இந்த நாடோடி கொல்லர்களுக்குப் பெருஞ் சோதனையாக அமைந்தது. மேற்கு நோக்கிய சாலைகள், வேளாண்மைக்கு தகுதியற்ற சிந்துப் பாலைப் பகுதிகளுக்கு இட்டுச் சென்றன. கிழக்கு நோக்கிச் சென்ற சாலை மட்டுமே வளத்திற்கும் வளமைக்கும் வழிகாட்டியது. பல குழுமங்கள் இத்திசையில் இடம் பெயர்ந்தன. மற்றக் குழுமங்கள் தங்கள் பழைய பாதைகளிலேயே பிடிவாதமாகச் சென்றனர். அவ்வாறு சென்றவர்கள், தொழிற்சாலைப் பொருள்கள் இந்த வட்டாரத்தின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய பெரும் மாறுதல்களினால் மிகுந்த அவதிக்குள்ளாயினர்.

இவர்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு கடந்த 20 அல்லது 30 ஆண்டுகளில் அதிகாரிகள் முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றனர். மற்ற இடங்களிலும், மற்றக் காலங்களிலும் கருதப்பட்டது போலவே, இங்கும் இவர்களை நிலையாகக் குடியமர்த்துவது தான் இச்சிக்கலைத் தீர்க்க ஒரே வழி எனக் கருதப்படுகிறது. இந்தியாவின் சிறந்த சமூகவியலறிஞரும், காடுலியா லோகார்கள் பற்றிய முன்னணி ஆராய்ச்சியாளருமாகிய சத்தியபால் ருகேலா நிரந்தரமான மலனயிடங்களில் குடியிருப்புகளை அமைத்து மறுவாழ்வளிப்பதற்கான ஆட்சியாளர்களின் திட்டங்களை ஆழ்ந்து ஆராய்ந்து, இத்திட்டங்களில் பெரும்பாலானவை தோல்வியுற்றதற்கான காரணங்களை விளக்கியுள்ளார். இந்தக் குழுமத்தினரின் நாடோடி இயல்பின் உள்ளார்ந்த உளவியல் ' காரணிகளையும், குடியிருப்பு, பட்டறை தொடர்பான புராணக் காரணிகளையும் இந்தத் திட்டங்கள் முற்றிலும் புறக்கணித்து விட்டன. அனைத்திற்கும் மேலாக, இக்குழுமத்தின் குடும்பங்களைப் பரவலாகக் குடியமர்த்துவதாலும், இவர்களைக் குடியானவர்களாக்கும் முயற்சியில் நிலத்தைக் கண்டபடி பகிர்ந்தளிப்பதாலும். இக்குழுமங்களுக்கும் குடும்பங்களுக்குமிடையிலான ஒட்டுறவு போன்ற பல சமூகப் பண்பாட்டுக் காரணிகளின் சமநிலை அழிக்கப்பட்டு விட்டன.

தங்களுடைய மரபு மார்க்கங்களைப் படிபப்படியாக மாற்றி விரிவாக்கிக் கொண்ட மற்ற காடுலியா லோகார் குழுமங்கள் மற்றப் பண்பாட்டுக் குழுமங்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு.

(தொடர்ச்சி மூன்றாம் உள் அட்டை பார்க்க)

எஸ்த்பான் கோபாஸ் பேந்த் கியூபா நாட்டவர்; நாடோடி ஆய்வுச் சங்க உறுப்பினர். அரசாங்கச் சார்பற்ற இச்சங்கம் யுனெஸ்கோவுடன் தொடர்புடையது. பல்துறை ஆராய்ச்சியாளர்கள் இதன் உறுப்பினர்கள். இந்திய காடுலியா லோகார்கள் (நாடோடிக் கொல்லர்) பற்றி இச்சங்கத்திற்காக இவர் செய்த ஆய்வைத் தழுவியது இக்கட்டுரை. இவர் 1979-லிருந்து வட இத்தாலிய சிந்தி நாடோடிகள்பற்றியும், குறிப்பாக மிலான் பகுதியில் ஓரளவு தங்கி வாழ்ந்த சமுதாயங்கள் பற்றியும் ஆராய்ச்சி செய்து வருகிறார்.

நிழற்படம் ச. கோபால் புனேக்கர்

நிழற்படம்: ஏ[illegible] சில்வெஸ்டர் © ராஃபோ பாரிஸ்

பண்பாட்டு இடைவெளியை இணைத்தல்

நகரில் தங்கி வாழும் குடும்பங்களில் கூட இளம் நாடோடிப் பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறி திருமணம் புரிய விரும்புகின்றனர். பெரும்பாலும் அவர்கள் வீட்டு வேலைகளைச் செய்தும், சிறு தம்பி தங்கையரைக் கவனித்தும் வருகின்றனர். நாடோடிக் குடும்பங்களில் இளம் பெண்கள், கிரீஸிலுள்ள நாடோடிக் கூடாரத்திலுள்ள இப்பெண் போல், கடினமாத நீண்ட நேரம் இப்பணிகளைச் செய்கின்றனர்.

ஷாக்குலின் சார்லமான்

நாடோடி மக்கள் பல்வேறு குழுமங்களாகப் பிரிந்துள்ளனர். ஒவ்வொரு குழுமமும் ஒவ்வொரு பெயரால் வழங்கப்படுகிறது. எனினும், இந்தப் பெயர்களில் எதுவும், இவர்களை முழுமையாகவும் துல்லியமாகவும் விவரிக்கவில்லை.

ஃபிரான்சில் எல்லா வகை நாடோடி மக்களையும் "ஜித்தன்" என்று குறிக்கிறார்கள். ஆனால், ஜித்தன் என்பவர்கள் உண்மையில் ஒரு குறிப்பிட்ட இன மரபுக் குழுமத்தினர் ஆவர். இவர்கள் ஸ்பெயினிலும், தென் ஃபிரான்சிலும் குடியேறியவர்கள். நாடோடிகளின் சமூக அமைவனங்கள், பயணத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், நாடோடிகள் அல்லாதவர்கள் (கட்ஜே), நாடோடிகளைப் "பயணிகள்" என்றே அழைக்கின்றனர்.

ரோம், மனுஷ் அல்லது சிந்தி, ஜித்தன் போன்ற இனமரபுக் குழுமங்களாகவும், உட் குழுமங்களாகவும் பிரிவுபட்டிருக்கும் நாடோடிகள் ஒருபுறமிருக்க

தென் ஃபிரான்ஸிலுள்ள காமார்க் சதுப்பு நிலத்தில் கழுதை இழுக்கும் வண்டியில் (வலக்கோடி) செல்லும்போதும், ஆங்கிலேய நகரின் சுற்றுப்புறத்தில் தற்கால வசதிகளுடன் அமைந்த பளபளப்பான புதிய வண்டியில் (வலப்புறம் நடுவில்) செல்லும்போதும், யூகோஸ்லாவியக் குகையில் குளிருக்காக ஒதுங்கியிருக்கும் போதும் (எதிர்ப்பக்கம்), அவிக்ஞான் நகர அதிகாரிகள் கட்டிக் கொடுத்த வீடுகளிலோ (வலப்புறம்) நகர்ப்புறச் சேரிகளிலோ வாழும் போதும், நாடோடிகளுக்குத் தாம் இருக்குமிடமே தாயகமாகும். தம் நீண்ட வரலாறு முழுவதும் அவர்கள் தம்மை மாற்றிக் கொள்ளும் திறமையை வளர்த்துள்ளனர். இதனால் ஒதுக்கப்பட்ட சிறுபான்மையினருக்கு ஏற்படும் இன்னல்களை அவர்களால் சமாளிக்க முடிந்தது.

நிழற்படம் எச். டபிள்யு. சில்வெஸ்டர் © ராஃபோ பாரிஸ்



ஜெர்மானிய ஐரோப்பாவிலிருந்து வந்த ‘‘யேனிஷ்’’ போன்ற வேறு குழுமங்களும் உள்ளன. இவர்களும் நாடோடி வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆனாலும், இவர்கள் முற்றிலும் வேறு வகையைச் சேர்ந்தவர்கள்.

வாழ்க்கை முறைகளிலிருந்தும் பல்வேறு நாடோடிக் குழுமங்களை வேறுபடுத்திக் காட்ட முடிகிறது. ஃபிரான்சிலுள்ள நாடோடிகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இன்றும் நாடோடி வாழ்வே நடத்துகின்றார்கள். மற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட மண்டலத்திற்குள் மட்டுமே இடம் பெயர்கிறார்கள்.

நாடோடிகள் பல்வேறு தொழில்கள் செய்கிறார்கள். எனினும் அவர்களுடைய நடவடிக்கைகள், ஈயம் பூசுதல், கூடை முடைதல், உடைந்த உலோகங்களைச் சேகரித்தல், இசை போன்ற மரபு வழியிலேயே அமைந்துள்ளன. இவை தவிர, திராட்சை பறித்தல், பழம், காய்கறிகள் அறுவடை செய்தல் போன்ற பருவகாலப் பணிகளையும் இவர்கள் செய்கிறார்கள். இவர்கள் ஊர் ஊராகச் சென்று வாணிகம் செய்பவர்களாகவும், கைவினைத் தொழில் புரிபவர்களாகவும் இருக்கின்றனர். ஒரு சிலரே ஊதியம் பெறும் தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

இவர்களின் வாழ்க்கை நிலைமைகளும் மாறுபடுகின்றன. இவர்கள் குடியிருப்பதற்குப் பெரும்பாலும் பயன்படுத்துவது கூண்டு வண்டிதான். நிலையாக வாழ்கின்றவர்கள் பெருநகர்களின் புறப் பகுதிகளிலும், தரிசு நிலங்களிலும், சந்தை நகரங்களிலும் கூண்டு வண்டி போன்ற தற்காலிக குடிசைகளை நிறுவி வாழ்கின்றார்கள். சிலர் கூடாரங்களிலும், குகைகளிலும், மரக்குடிசைகளிலுங் கூட வசிக்கிறார்கள்.

இந்த நாடோடிகளின் பெரும்பாலோர் கூண்டு வண்டிகளில் செல்கின்றனர். ஒரு சிலர் பார வண்டிகளைப் பயன்படுத்துகின்றனர். நாடோடிகள் அடிக்கடி இரயில்களிலும் பயணஞ் செய்கின்றனர். நாடோடிகள் சில சமயங்களில் வீடுகளை விலைக்கு வாங்குகிறார்கள். ஆனால், அந்த வீடுகளில் அவர்கள் குடியிருப்பதில்லை. நிலையாக வாழ்கின்றவர்கள் சிலசமயம் சந்தை நகரங்களிலும், பழைய இரயில் பெட்டிகளிலும் சுகாதாரமற்ற குடிசைகளிலும் படுமோசமான சூழலில் வாழ்கின்றனர். நிலையான வாழ்க்கை கட்டாயமாக உள்ள மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில், இவர்கள் வீதிகளிலும் மாவட்டங்களிலும் செறிந்து வசிக்கின்றனர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து சென்று உலகெங்கும் பரவிய இந்த மக்கள் குழுமங்கள் எப்போதும் தங்கள் தற்பண்பினைப் பாதுகாத்து வந்திருக்கின்றனர். மற்ற மக்களின் மனப்போக்குகள் தங்கள் தனி வாழ்க்கையைப் பாதிக்காமல் இவர்கள் கவனமாகப் பார்த்துக் கொள்கின்றார்கள். நாடோடிகளின் வாழ்க்கை முறையிலோ, குடியிருப்புகளிலோ, பயண முறைகளிலோ, பேசும் மொழிகளிலோ, ஆடையணிகளிலோ, சடங்கு முறைகளிலோ பொதுப்பண்பு காணப்படவில்லை. அவர்களுடைய பழக்கவழக்கங்கள் குழுமத்திற்குக் குழுமம், நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இந்த நாடோடிகள் எந்த நாட்டிலிருந்தாலும், எந்த மக்களிடையே வாழ்ந்தாலும், அந்த மக்களுடன் இணைந்துவிடாமல் தனித்து வாழவே விரும்புகிறார்கள். இதுவே நாடோடிகளிடம் காணப்படும் தலையாய பொதுப்பண்பு.

பல நூற்றாண்டுகளாக, நாடோடிக் குழுமங்கள், பிச்சையெடுத்தும் திருடியும் வாழ்கின்றவர்களாகவோ, அல்லது கடுமையாக வேலை வாங்குவதற்குரிய அடிமைகளாகவோ தான் கருதப்பட்டு வந்தனர், ஹங்கேரி, ருமேனியா நாட்டு கதைகள் அவர்களை இவ்வாறு தான் சித்திரிக்கின்றன. நாடோடிகளுடன் இணைந்து வாழ்வதை அதிகாரிகளும் ஐயக்கண்கொண்டு பார்த்தனர்.

நிலையான நாடோடிகள், தலைச்சுமை வாணிகம், கூடைமுடைதல், சூனிய வித்தை போன்ற தங்கள் பரம்பரைத் தொழில்களை 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கிராமச் சமுதாயங்களில் நடத்துவது எளிதாக இருந்தது. போக்குவரத்து பெருகியுள்ள இந்நாளில் பல்வேறு பொருள்கள் மலிவான விலையில் விரைவில் கிடைக்கின்றன. இதனால், நாடோடிகளின் வாணிகத்திற்கு வாய்ப்புக் குன்றிவிட்டது. அவர்கள் சமுதாயத்தின் எளிய பிரிவினருடனான வாணிபத்தை நம்பியே வாழவேண்டியுள்ளது. இதனால், தங்களுடைய தனிவாழ்வுக்கும் தற்பண்புக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் அஞ்சுகிறார்கள். பண்பாடுகளிடையே சுமுக உறவு ஏற்படவேண்டுமென ஆட்சியாளர்கள் அறிவித்தபோதிலும், இன்றும் இத்துறையில் சகிப்புணர்வு ஏற்படவில்லை. சொந்த நாட்டுச் சமுதாயத்தினர் தங்கள் பண்பாடுகளில் நாடோடிப் பண்புகள் புகுந்துவிடாமல் கவனமாகப் பாதுகாத்து வருகிறார்கள். அதேசமயம், நாடோடிகளோ தங்களுடைய தனி ஆளுமையைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தங்கள் பழைய வழிகளை நாடிவருகிறார்கள்.

நாடோடிகளின் சட்டத் தகுநிலையும் அவர்களுடைய பாதுகாப்பின்மையை ஊக்குவிக்கிறது. ஃபிரான்சில், 1960 ஜனவரி 3இல் இயற்றிய சட்டத்தின் மூலம், ஒழுங்கான தொழில் நடவடிக்கையுடையவர்களுக்கு ஒருவகைப் போக்குவரத்து ஆவணமும், ஒழுங்கான தொழிலோ வாணிகமோ கைவினையோ சீரான வருமானமோ இல்லாதவர்களுக்கு ஒரு வகைப் போக்குவரத்து ஆவணமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் வகை ஆவணங்களை மாதந்தோறும் அதிகாரிகளிடம் காட்ட வேண்டும். மேலும், நிலையான குடியிருப்பிடத்தைக் கொண்டிராதவர்கள், உள்ளூர் அதிகாரிகளிடம் பதிவுசெய்து கொள்ளவேண்டும். கூடாரங்கள் அமைப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கு முறைகள், நாடோடி மக்களுக்குப் பெருஞ்சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன.

மற்ற ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் நாடோடிகளை நாட்டுச் சமுதாயங்களுடன் ஒருங்கிணைப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்கள், நாடோடிகளின் மனப்போக்கை அறிந்து கொள்ளாமல், ஒரு தரப்பாக இயற்றப்பட்டுள்ளன. பெல்ஜியத்தில் ‘உறுதியற்ற நாட்டுரிமை’ என்ற விதிமுறை, நாடோடிகளின் பல உரிமைகளைப் பறிக்கிறது. ஸ்பெயினில், அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டதிலிருந்து, நாடோடிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜெர்மனியில், நாஜி அடக்கு முறைக்குப் பலியானவர்களுக்கான சரியீடு இன்னும் நாடோடிகளுக்குக் கிடைக்கவில்லை. நார்டிக் நாடுகளில் மக்களிடையே கல்வியறிவைப் பெருக்குவதற்கு அரசில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதால், நாடோடிகளின் வாழ்க்கை நிலைமை சாதகமாக இல்லை. கிழக்கு ஐரோப்பாவில், சமதருமம் நிலைபெறவே நாடோடிகளின் ‘‘சமூகச் சிக்கலு’’க்குத் தீர்வு காணப்பட்டது. அவர்கள் நிலையான வாழ்வில் குடியமர்த்தப்பட்டார்கள். எனினும் அவர்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்குத் தனிவசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

பல நாடுகளில் சமூகவியல் கொள்கை வகுப்பவர்கள், மறந்துவிட்டார்கள். எடுத்துக்காட்டாக, ஃபிரெஞ்சுச் சட்டத்தின்படி, நாடோடிக் குழந்தைகளும் கட்டாயமாகப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. இக்குழந்தைகள் பள்ளி செல்லும் நாட்களை பொறுத்தே நாடோடிக் குடும்பத்திற்குப் படித்தொகைகள் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு கட்டாயக் கல்வியானது, தேசியக் காப்பீட்டு நலன்களை நாடோடிகள் நம்பி வாழவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பள்ளிகளின் கல்வி வசதிகளும் நாடோடிக் குழந்தைகளுக்கு ஏற்புடையனவாக இல்லை. நாடோடிப் பெற்றோரைப் பொறுத்தவரையில், குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பினால் தங்களுடைய மரபு நெறிகள் அற்றுவிடுமோ என அஞ்சுகிறார்கள். பள்ளிகளில், இக்குழந்தைகளுக்கு ஏற்ற கல்வி

நிழற்படம் எச். டபிள்யு. சில்வெஸ்டர் © ராஃபோ, பாரிஸ்



நிழற்படம்: ஜோசஃப் கூடெல்கா, பாரிஸ்



நிழற்படம்: எச். டபிள்யூ சில்வெஸ்டர் © ராஃபோ பாரிஸ்



கற்பிக்கப்படவில்லை; அதற்கெனத் தனிப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இல்லை. இதனால், இக்குழந்தைகள் கல்வியில் பின் தங்கியிருப்பதால். இவர்களைச் சுற்றுப்புறச் சமுதாயத்தினர் ஒதுக்கி வைக்கின்றனர்.

நாடோடிகள் நிலையான வாழ்க்கைக்கு பழக்கப்பட்டுவிட்டபோதிலும் வீட்டு வசதித் திட்டங்கள் அவர்களைத் தனிமைப்படுத்தி வருகின்றன. குறைந்த வாடகை வீடுகளில் குடியமர்த்தப் பட்டுள்ள நாடோடிக் குடும்பங்கள், தங்கள் பாரம்பரிய சமூகக்கட்டமைப்பை இழந்துவிடுகின்றனர். ஏனெனில், இத்தகைய சூழலில் அவர்கள் தற்பண்பை நிலைநாட்ட முடிவதில்லை. இவர்களுடைய பரம்பரைத் தொழிலும் மாறிவருகின்றன. உதாரணமாக, போதிய இட வசதியின்மையால், இவர்கள் உடைந்த உலோகங்களைச் சேகரிக்க முடியவில்லை.

நாடோடிக் குடும்பங்களுக்கு கூண்டு வண்டிகள் மிகுந்த சமூகப் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். ஆனால், கூண்டு வண்டிக் குடியிருப்பாளர்களுக்குச் சட்டத்துறை அதிகாரிகள் எவ்வித வசதிகளும் செய்து கொடுப்பதில்லை. கூண்டுவண்டி, ஒரு குடியிருப்பு இல்லமாகக் கருதப்படுவதில்லையாகையால், கூண்டு வண்டிகள் அமைப்பதற்கான கடன் கோரிக்கைகள் ஏற்கப் படுவதில்லை. கூண்டு வண்டி சேதமடைந்து விட்டாலோ அல்லது குடியிருப்பதற்குத் தகுதியற்றதாகிவிட்டாலோ அதில் வசிக்கும் குடும்பங்கள் பயணத்தைக் நிறுத்தி விடவேண்டியதுதான். பணப் பற்றாக் குறையினால், அந்த வண்டிகளை அவர்கள் சாலை வழியாகக் கொண்டு செல்லவும் முடிவதில்லை. இவ்வாறு ஓரிடத்தில் நிலையாகத் தங்கி, தங்கள் அன்றாட வாழ்வுக்கு வழிதேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நாடோடி இளைஞர்களில் பெரும்பாலோர் பள்ளிகளை வெறுக்கிறார்கள். பெரும்பாலானவருக்குச் எழுதப்படிக்கத் தெரியவில்லை. இவர்களில் எவரும் 14 வயதுக்குப் பின்னர் பள்ளியில் நீடிப்பதில்லை. ஆண்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும், பதிவு நாடாக்களில் இசை கேட்பதிலும், மோட்டார் சைக்கிள்களில் ஊர் சுற்றுவதிலும் நேரத்தைக் கழிக்கிறார்கள். இளம் பெண்கள், வீட்டு வேலைகளைச் செய்வதிலும், தங்களுடைய தம்பி தங்கையரைக் கவனிப்பதிலும் ஈடுபடுகிறார்கள். இளைஞர் மையங்கள், பண்பாட்டுக் கழகங்கள் போன்ற அமைவனங்களின் நடவடிக்கைகளில் பெரும்பான்மைச் சமுதாயத்தினரின் பண்பாடு ஆதிக்கம் செலுத்துவதாக இவர்கள் கருதுவதால், அந்த நடவடிக்கைகளில் இவர்கள் பங்கு கொள்வதில்லை.

இந்த இளம் நாடோடிகளிடம் 'எதிர்காலத்திட்டம் என்ன?' எனக் கேட்டதற்கு, 'நான் ஓட்டுநர் தேர்வில் தேர்ச்சி பெற விரும்புகிறேன்' என்று ஆடவர்களும், 'குடும்பத்தை விடுத்துத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்' என்று பெண்டிரும் கூறினார்கள். மரபு வாழ்விலும், 'குடும்பப் பயணத்திலும் இவர்கள் இன்னும் ஊறிப் போயிருக்கிறார்கள் என்பது இந்த பதில்களிலிருந்து தெரிய வருகிறது.

இளம் நாடோடிகளில் பெரும்பாலானோர் தங்களை ஒரு பண்பாட்டுச் சிறுபான்மையினர் என்றும், தங்களுடைய பண்பாடு மற்றச் சமுதாயத்தினரின் பண்பாட்டைப் போலவே முக்கியமானது என்றும் கருதுகிறார்கள். இந்தத் தற்பெருமை அவர்களுடைய ஆடையணிகளிலேயே வெளிப்படுகிறது. ஆனால், இந்த இளைஞர்கள் பற்றியிருக்கும் நாடோடித் தற்பண்பு, அவர்களுடைய மூதாதையருடையதைப் போன்று இல்லை. பொதுவான கட்டமைப்பு அப்படியே இருந்தபோதிலும் வாழ்க்கை முறையும் மொழியும் பாதுகாக்கப்பட்டு வந்தபோதிலும் ஆதிக்க சமுதாயத்தினரின் சமூகக் கொள்கைகளும் கட்டாய விதிமுறைகளும் இவர்களுடைய பண்பாட்டில் வேற்று அம்சங்களைப் புகுத்தியுள்ளன. இத்தகைய முரண்பட்ட செல்வாக்குகளின் காரணமாக இவர்கள் தங்களுடைய சொந்தப் பண்பாட்டிலிருந்தே விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால் இவர்கள் மற்றச் சமுதாயத்தினருடன் தொடர்புகொண்டு படிப்படியாக அவர்களுடன் இரண்டறக் கலந்து வருகிறார்கள்.

இந்த ஒருங்கிணைப்பைத்தான் கடந்த பல நூற்றாண்டுகளாக நாடோடிகள் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறார்கள். இந்த எதிர்ப்பு இப்பொழுது தனது முடிவை எட்டிவிட்டது எனலாமா? இரு பண்பாடுகளும் சந்திப்பதற்கான ஓரிடத்தைக் கண்டாலன்றி—இரு உலகங்களும் ஒருங்கே வாழ வழி கண்டாலன்றி— இந்த எதிர்ப்பு இறுதிக் கட்டத்தை எட்டி விட்டது என்றுதான் கூறவேண்டும்.

'"... இவ்விளைஞர் பின்பற்றும் நாடோடிகளின் தனித்தன்மை முதியோர் கொய்தது போலில்லை......'.



இப்போது சிறுபான்மைக் குழுமங்களின் மொழிகள், பண்பாடுகள், விழாக்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுக்கு ஊக்கமளிக்கும் மனப்போக்கு தோன்றியுள்ளது. நாடோடி இனத்தைச் சேர்ந்த பலர், தங்களுடைய கடந்த காலத்திலும் மொழியிலும் ஆர்வம் செலுத்தி வருகிறார்கள். நாடோடிகள் பற்றிப் பல இதழ்கள் வெளிவருகின்றன. பத்திரிகைகளிலும், வானொலியிலும், பொதுவாழ்விலும் சில நாடோடிகள் இடம்பெற்று வருகின்றனர். மேலும், நாடோடிகளிடையே பல சமூகப் பண்பாட்டு அமை

(தொடர்ச்சி 3ஆம் உள் அட்டை பார்க்க)

ஷாக்குலின் சார்லமான் ஃபிரான்ஸ் நாட்டவர். ஃபிரான்ஸில் நாடோடிகளின் சட்டபூர்வமான நிலை பற்றிப் பல ஆண்டுகளாக ஆராய்ந்தார். இவ்வம்மையார் ஃபிரெஞ்சு நாடோடி ஆராய்ச்சி நிலையம் தேசிய நாடோடிச் சமூக சேவை நிலையங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர் 'எத்தியூத் சிகான்' (நாடோடி ஆராய்ச்சி) எனும் இதழின் எழுத்தாளர். 'போப்புலாசியோன் நோமாத் எ போவ்ரெத்' (நாடோடி மக்களும் வறுமையும்) எனும் இவரது நூல் இவ்வாண்டு வெளியானது. இது ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயத்தில் நாடோடிக் குடும்பங்களின் தனிமையையும் ஒதுக்கப்பட்ட நிலையையும் ஆராய்கின்றது.

நிழற்படம்: ஜே. சே © மாஜும், பாரிஸ்

நிழற்படம்: எச். டபிள்யூ சில்வெஸ்டர் © ராஃபோ, பாரிஸ்

ஐரோப்பாவின் நாடோடிக் கைவினைஞர்

மிக்லோஸ் டோம்கா

ஒரு சார்புள்ள இன்றைய ஆய்வுகளின் படி, ஐரோப்பியர் நாடோடிகளை, வேலைக்கு அஞ்சும் இழிமக்கள் எனவும் உலோக வேலை, மரச்செதுக்கல், கம்பள, குதிரை வாணிகம் போன்ற மரபான தொழில்களைச் சில சமயங்களில் மட்டும் செய்யும் சோம்பேறிகள் எனவும் கருதுகின்றனர். அதே நேரத்தில், அவர்கள் ஐரோப்பாவில் கடந்த 600 ஆண்டுகளாக சமூகத்தின் ஓரத்திலே ஒதுங்கி வாழ்ந்து வேலை செய்து வருகின்றனர் எனவும் கருதுகின்றனர். அதற்கு மாறாக, பல நூறு ஆண்டுகளாக நாடோடிகள் தமது முதல் ஐரோப்பிய இல்லிடமாகிய மத்திய, கிழக்கு ஐரோப்பாவில் வரவேற்கப்பட்டு. பெருமதிப்புடன் தொழில் புரிந்துவந்தனரெனவும், முதலாளித்துவத் தொழிற்புரட்சிக்கும் பிறகுதான் சமூகத்தின் ஓரத்திற்குத் தள்ளப்பட்டனரெனவும் கருதுகிறோம். மேலும், மேற்கு ஐரோப்பாவில் தொடக்கத்திலிருந்தே நாடோடிகளைப் பற்றி வேறுபட்ட கருத்துகள் நிலவிவந்தன. அவை வெவ்வேறு வகையான இரு பொருளாதார, வாழ்க்கை முறைகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளினால் விளைந்தன எனவும் நம்புகிறோம்.

ஸ்பெயினிலிருந்தவர்களைத் தவிர பிற ஐரோப்பிய நாடோடிகள் அனைவரும் ஒரு வேளை மத்திய, கிழக்கு ஐரோப்பா வழியாகச் சென்றிருக்கக் கூடும். இன்றும் இப்பகுதி நாடோடி மக்களுள் $\frac{3}{4}$ பகுதியினரின் தாயகமாக இருக்கின்றது. 14 முதல் 17ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியில் மக்கள்தொகை குறைவாகவே இருந்தது, ஒரு சில நகர்களே இருந்தன; போர்கள், எல்லைப்புறத் தகராறுகளின் காரணமாக மக்கள்தொகை தொடர்ந்து நலிந்து வந்தது. அரசியல் நிறுவனங்கள் வட்டார அளவில் தொடக்க நிலையிலே இருந்தன.

இனப் பன்மையாலும், பக் நதிக்கும் கார்ப்பேத்திய மலைக்கும் கிழக்கிலுள்ள மக்களுடனும் பண்பாடுகளுடனும் ஏற்பட்ட தொடர்புகளினாலும், சில வேளை ஆசிய, மேற்கு ஐரோப்பியத் தொடர்புகளினாலும் நிலமானியப் பண்பாட்டின் முக்கிய இயல்பு தோன்றியது. மக்களின் இடப் பெயர்ச்சிக்கும், அயல் மொழி பேசி அயல் உடையணிந்த வேறு தோற்றமுள்ள மக்களின் தொடர் பயணத்திற்கும் ஏற்ற சமூக முறை அமைந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தொழில் வளர்ச்சியடைந்ததாலும், ஊர்திகளும் விவசாய இயந்திரங்களும் மிகுதியாகப் பயன்பட்டதாலும், நாடோடிகள் பலர் தம் மரபான தொழில்களை விட்டு விட்டு ஆலைத் தொழிலாளரானார்கள்; அல்லது போதிய ஊதியமின்மையினால், பருவ வேலைகளைத் தேடினர். மேலே: கிழக்கு பிரான்ஸில் திராட்சைத் தோட்டத்தில் அறுவடையின்போது உழைக்கும் நாடோடி.

நிழற்படம் © டையோன் டாய், நியூயார்க்



நிழற்படம் © ரோஷர் வியோல், பாரிஸ்

வணிகர், தூதுவர், துறவியர், அரச, பெருமக்கள் அவையோர், ஒவ்வோரிடமாகச் செல்லும் கைவினைஞர், கூலிப் படையினர் ஆகியோரின் கூட்டத்திலும், எல்லாவற்றிற்கு மேலாக தொடர்ந்து நடைபெற்ற குடியேற்ற நிகழ்ச்சிகளிலும் நாடோடிகள் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கவில்லை. அவர்கள் தம்மை யாத்திரிகர்கள் அல்லது நோன்பிகள் எனக் கூறியதை மக்கள் நம்பினர்.

சிலவேளை அவர்களின் கூட்டங்கள் மிகப் பெரியதாக இருந்தபோதிலும், மக்கள் அவர்களை அன்பாக வரவேற்றனர். உரிமையாளர் இல்லாத நிலங்கள் பெருகி வந்ததால், அவர்கள் அங்கு வாழ்ந்த மக்களின் எதிர்ப்பின்றி படிப்படியாக அங்கு ஊடுருவ முடிந்தது. பண்பாட்டுப் பூசல்களும் எழவில்லை. ஏனெனில் இனங்கள் இடம் பெயர்ந்து வந்தது அப்போதுதான் அடங்கியிருநதது. புதியவர்கள் வந்து குடியேறியதை இன்றும் பலர் மறக்கவில்லை.

புதிதாக வந்தோர் வட்டார மொழியைக் கற்று, ''சரியான'' மதத்தைத் தழுவியது போன்ற செயல்களை மக்கள் ஏற்றுக் கொண்டதுபோல், சமய, மொழி, பழக்கவழக்க வேறுபாடுகளையும் சாதாரணமாகவே ஏற்றுக்கொண்டனர். அக்காலத்தில் தேசிய, பண்பாட்டுத் தனித்தன்மை முக்கியமாகக் கருதப்படவில்லை; சமூக—பண்பாட்டு இணைப்பிற்கு அது தடையாகவும் இருந்ததில்லை. புதிதாக வந்தோர் எவ்வாறு தொழில் செய்து பிழைப்பார்கள் என்பதுதான் முக்கிய கேள்வியாக இருந்தது. கொள்கையளவில் எல்லாப் பாதைகளும் அவர்களுக்குத்திறந்திருந்தன. அவற்றை ஒரே நேரத்தில் அவர்கள் பயன்படுத்தினர். இடையர்களாக அல்லது உழவர்களாக வாழ்ந்த நாடோடிக் குடும்பங்களையும் கிராமங்களையும் பற்றி நிலமானிய ஆவணங்கள் கூறுகின்றன.

குடும்பங்களுக்குப் பிரபுக்கள் வழங்கிய பட்டயங்களில் சிகானி அல்லது ஸிகானி எனும் பெயர் பொறிக்கப்பட்டிருப்பது, நாடோடிகள் தொடக்க காலத்திலே போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, சமூகத்துடன் முற்றிலும் இணைந்திருந்தது மட்டுமின்றி, ஆளும் இனத்துடன் தனிப்பட்ட முறையிலும் சேர்ந்திருந்தனர் என்பதைக் காட்டுகின்றது. தொடக்கத்திலிருந்தே நாடோடிகள் தங்கம் அரிப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டதால் நிலமானியப் பிரபுக்களுடனும் நாடோடிகளல்லாத கிராம மக்களுடனும் படைத்துறை நிறுவனங்களுடனும் பிற சமூகப் பண்பாட்டு அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர் கொண்டனர். இத்தொடர்புகள் அவர்களது தொழிலின் உள்ளாற்றலையும் செல்வாக்கையும் வளர்த்ததனால் அவர்கள் பொருளாதார, சமூக வாய்ப்புகளைப் பயன்படுத்த விரும்பி நாளடைவில் சமூகத்துடன் முற்றிலும் ஒன்றுபட்டனர். பல குடும்பங்களும் கிராமங்களும் தம் நாடோடி மரபை முற்றிலும் மறந்தன.

இரும்பு ஆணிகள், துளைகருவி கொதிகலம் மரத்தொட்டி, தொட்டி, தட்டு, கரண்டி, பிரம்புக் கூடை, வண்டி உடற்பகுதி, நாணற்பாய், துடைப்பம் ஆகியவை பண்ணை வாழ்க்கைக்கு மிகத் தேவையாக இருப்பினும், பல சிறு கிராமங்களில் அவற்றைச் சேர்ந்த கொல்லர், தொட்டி செய்வோர், கூடை முடைவோர் இருந்ததில்லை. மேலும், உரிமையற்ற பண்ணையாட்களும் உரிமையுள்ள ஏழைகளும் பணம் கொடுக்க முடியாமல், பொருளாகவே கொடுத்ததால், நகர கைவினைஞர் அவர்களைப்பற்றி அக்கறை காட்டவில்லை. ஆகவே பல நூற்றாண்டுகளாக இத்தகைய பொருள்களையும், செங்கற்களையும், உலோகம் உருக்கும் கட்டைகரியையும், மந்தைகளுக்கான மணிகளையும் பெரும்பாலும் நாடோடிகளே செய்து வந்தனர்.

கிராமங்களும் அவற்றின் தேவைகளும் பெருகியதால், பல கைவினைஞரின் குடும்பங்கள் நிலையாகக் குடியேறி, கிராமக் கொல்லர்களாகவும் பெரும் நிலக்கிழார்களின் கொல்லர்களாகவும், அரண்மனைகளில் போர்க்கருவி செய்வோராகவும் பணியாற்றினர். அவர்கள் மரக்கரண்டிகள் செய்து, சுற்றுப்புறக் கிராமங்கள் செங்கற்கள் விற்றுவந்தனர். தொட்டி செய்வோர் அரிய நீண்டநாள் உழைக்கக்கூடிய பொருள்களைச் செய்து வந்தனர். இவர்கள் நாடோடிகளாய் வாழ்ந்துவந்தனர். பிறரைப் போலவே இவர்களும் முக்கிய பணியாற்றி வந்தனர். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, மத்திய, கிழக்கு ஐரோப்பாவில் நாடோடிக் கைவினைஞர்கள் இன்றியமையாதவர்களாக இருந்தனர்.

18ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நகர கைவினைஞருடன் அல்லது அவர்களுடைய வாணிகக் கழகங்களுடன் பிணக்கம் ஏற்படவில்லை. தொழில்துறை வளர்ந்து அதனால் கைத்தொழில் செய்வோருக்கு இடையூறு ஏற்பட்டபோது பிணக்கங்கள் கடுமையாயின. ஆயினும் நிலையாகக் குடியேறியிருந்த சில நாடோடிக் கைவினைஞர்கள், சமூகத்துடன் ஏற்கெனவே இணைந்துவிட்டதால், அவர்கள் கைத்தொழிலை விட்டுவிட முடியவில்லை, தொழில்துறை வளர்ச்சியின் விளைவாக, அவர்கள் ஆலைத் தொழிலாளராயினர், அல்லது வேலையில்லாமலிருந்தனர். அல்லது வெளியேறினர். சமூகத்துடன் முற்றிலும் இணையாதவர்களைச் சமூகம் வெளியேற்றியது. ஏனெனில், சமூகமே ஒரு புதிய ஊழியை உருவாக்கும் வேதனைத் துடிப்பிலிருந்தது. அவர்கள் தம் பிழைப்பை இழந்ததனாலும், மக்கள் தம்மை ஒதுக்கியதாலும், தம் இனத்தாருடனே ஒதுங்கினர். நாடோடிகளல்லாதாரிடமிருந்து பிரிந்த அவர்கள் தம் குடும்பப் பிணைப்புகளை நாடி, ஓர் எதிர் சமூக அமைப்பாக மாறினர்.

பழைய நாடோடிக் கைத்தொழில்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. ஆயின் அவை போதுமான வருமானம் அளிக்கவில்லை. வறுமை வளரவும் சமூகத்திலும் அவர்கள் ஒதுக்கப்பட்டனர். வறுமையின் விளைவாக உடல் நலம் கெட்டு, மழலை இறப்பு வீதம் உயர்ந்தது. முன்னால் பெரிதும் மதிக்கப்பட்ட தொழில்கள் இப்போது நூதனமாகத் தோன்றின. அவற்றைச் செய்தவர்கள் ஒதுக்கப்பட்டனர். பழைய தொழிலில் கிடைத்த வருமானம் போதாமையால் நாடோடிகள் புதிய பிழைப்பு வழிகளைக் கற்க வேண்டியிருந்தது. ஆகவே அவர்கள் முற்றிலும் ஒதுக்கப்பட்டனர்.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் மத்திய, கிழக்கு ஐரோப்பாவில் ஒரு நாடோடிப் பிரச்சினை எழுந்தது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் அது வரவர குற்றவியல் பிரச்சினையானது. எடுத்துக்காட்டாக, 1900இல் ஹங்கேரியில் நாடோடிகளின் குற்ற வீதம் பிறருடையதைவிட 1.7 மடங்கு அதிகமாக இருந்தது; 15 ஆண்டுகள் கழித்து 4.3 மடங்கு ஆனது; அதாவது ஏறக்குறைய 3 மடங்கு உயர்ந்தது. உண்மையில் குற்றவீதம் உயர்ந்ததா,



நிபற்படம்: ப்ருஸ் டேல் © தேசிய புவியியல் சங்கம், வாஷிங்டன்

மர. உலோக, கூடை வேலைகள் நாடோடிகளின் மரபான கைத்தொழில்களாகும். வலப்புறம்: ஐரிஷ் தகரக் கொல்லர்வாளியைப் பழுதுபார்க்கிறார். மேலே இடப்புறம்: கிரீஸில் தெசலோனிக்கியில் ஒருவர் கூடை முடைகிறார். ஆயினும் பல நாடோடிகள் தாம் வாழும் சமூகத்துடன் இணைந்து புகழ்மிகு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். பெல்ஜியத்தில் பிறந்த இசைவாணரும், இசையமைப்பாளருமான ட்ஜாங்கோ ரெய்ன்ஹார்ட் எனும் ஃபிரெஞ்சு நாடோடி (1910—1953) (மேலே நடுவில்) இவர்களுள் ஒருவர். இவரது ஆரவார இசையில் நாடோடி உணர்ச்சி வேகத்தைக் காணலாம். மற்றொருவர் சாபியோர்டனாஃப் (மேலே) இங்கு பல்கேரியாவில் ஸ்பெயினிலுள்ள மருத்துவமனையின் ஆய்வகத்தில் காணப்படுகிறார்.

காவலரின் கவனம் அதிகரித்ததா என்பது இங்கு கேள்வி அன்று. நாடோடி பிரச்சினை விரைவாக வளர்ந்தது என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரு புதிய பிரச்சினை தோன்றியது. வேளாண்மைக்கு இயந்திரங்களையும் உந்துவண்டிகளையும் பயன்படுத்தியதால் குதிரைகள் தேவையில்லாமல் போயின. ஆகவே குதிரை வணிகர்கள் கடந்தகால மனிதர் ஆயினர். தனித்த நாடோடிக் கூட்டங்கள் இன்னும் தம் கைத்தொழில்களைச் செய்துவருகின்றனர். ஆனால் மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பெரும்பான்மையான நாடோடிகள் பழைய கைத்தொழில்களை விட்டுவிட்டு ஆலைத் தொழிலாளராகவும் கட்டடத் தொழிலாளராகவும் மாறிவருகின்றனர். புதிய வீடுகளை அல்லது பழைய பண்ணை வீடுகளை வாங்கி, சில ஆண்டுகள் பள்ளியில் பயில்வதால், அவர்கள் நாடோடிகளல்லாத சமூகங்களில் எளிதாக இணைய முடிகின்றது. பழைய தொழில்களைச் செய்வதனாலன்று, அவற்றை விட்டுவிடுவதாலே அவ்வாறு இணைய முடிகின்றது. ஆகவே இப்போது நாடோடிகளின் கைத்தொழில்கள் கிராமியக் கலை மாணவர்களை மட்டுமே கவர்கின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நாடோடிகள் வந்தபோது அவர்கள் அன்பாக வரவேற்கப்பட்டனர். ஏனெனில் அவர்கள் நல்ல பரிந்துரைக் கடிதங்கள் கொண்டுவந்தனர். மக்கள் அவர்களைக் குடியேற வந்தவராகக் கருதாமல் தங்கிச் செல்ல வந்த அந்நியராகவே கருதினர். (இக்கடிதங்களுள் சிலபோலிக் கடிதங்களென இப்போது தெரிகின்றது). அவர்கள் நீண்டநாள் தங்கியதும், யாருடைய நிலத்தில் அவர்கள் வாழ்வார்கள், எந்த வருமானத்தைக் கொண்டு பிழைப்பார்கள் என்ற கேள்விகள் எழுந்தன. மக்கள்நெருக்கமும், பின்னிப் பிணைந்த அரசியல் நிறுவன அமைப்பும், வளர்ச்சியடைந்த பொருளாதாரமும் குடியேற்றங்களுக்கும், போதிய வருமானத்திற்கும் இடமளிக்கவில்லை.

தொழில் வளர்ச்சியடைந்தசமூகங்கள் மனித உரிமைகளில் அக்கறை கொண்டபோதிலும், கடந்த காலத்திலும் நாட்டங் கொண்டன- 'இது ஒரு புதிய சூழ்நிலையைக் காட்டுகிறது. பொதுநலச் சமூகத்தில் ஊர்திகளிலோ, கப்பல்களிலோ வாழ்க்கை நடத்துவது முதல், பழைய முறைக் கைவினைப் பொருள்களை விற்பது வரை' நம்பத்தகாத செயல்கள் நடைபெறக்கூடும். ஆகவே சில நாடோடிக் குடும்பங்கள் தம் பழைய வாழ்க்கை முறையையும், தொழில்களையும் பின்பற்ற முடிகின்றது. உண்மையில் பழைய தொழில்களா; அல்லது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் தொழில்கள்தாமா எனும் கேள்வி எழக்கூடும்.

மிக்லோஸ் டோம்கா ஹங்கேரிய பொருளியல், சமூகவியல் அறிஞர்; புதாபெஸ்டிலுள்ள மக்கள் செய்தித் தொடர்பு ஆய்வு நிலையத்தில் ஆராய்ச்சி செய்கிறார்; 'எயோத்வோ லோரான்' பல்கலைக்கழக விரிவுரையாளர்; புன்னாட்டு சமூகவியல் சங்கத்தின் சமய ஆய்வு சமூகவியல் குழுவின் துணைத் தலைவர்; இனச் சிறுபான்மையினரின் பிரச்சினைகளில் வல்லுநர்.





நாடோடி உண்மை எங்கே?
நான் அன்பையும் பாசத்தையும்
நீதியையும் நல்வாய்ப்பையும் நாடி
காலமெல்லாம் என் கூடாரத்துடன்
உலகமெலாம் உலவி வந்தேன்.
வாழ்வில் வயதேறிவிட்டது,
உண்மை அன்பைக் காணவில்லை,
உயரிய சொல்லைக் கேட்கவில்லை,
நாடோடி உண்மை எங்கே?

ராசிம் செட்ஜிக்

பகிர்ந்து பாசம் காட்டும் குடும்பம்

ரோசா டைகோன் ஜானுஷ்

இடப்புறம்: ஸ்வீடனைவிட்டு ஃபிரான்ஸ் செல்லும் இத்தாலிய நாடோடிகளின் நுழைவுச் சீட்டைச் சரிபார்த்தல்.

மேலே: ஸ்வீடன் பனியில் நாடோடிக் கூடாரம்.

1960ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் நானும் எனது சகோதரி காடரினா டைகோனும், எங்களுடைய கணவர்களான பெர்ண்ட் ஜானுஷ், ப்யான் லாங்காமர் ஆகியோருடைய உதவியுடன் நாடோடி மக்கள்பால் சமுதாயம் கொண்டிருந்த கருத்துக்களை மாற்ற முயன்றோம். ஸ்வீடனிலும் மற்ற நாடுகளிலும் நாடோடி மக்கள் குடியிருப்பு, பள்ளி வசதிகள் ஏதுமின்றி சமூகப் பாதுகாப்பு ஏதுமின்றி வாழ்க்கையின் அடி மட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

நாடோடி மக்கள் ஏன் சமுதாயத்தின் ஒதுக்குப்புறத்தில்வாழ்கின்றனர்என்றோ அவர்களுடைய குடும்ப வாழ்க்கையை இவ்வாழ்வு முறை எவ்வாறு பாதிக்கிறது என்றோ யாரும் ஆராய்ந்ததில்லை. நெருப்புக் கோழிகளைப் போல அனைவரும் தங்கள் தலையை பூமிக்கடியில் புதைத்துக் கொண்டனர். அவர்கள் எதையும் பார்க்கவோ கேட்கவோ, உண்மைகளை ஆராயவோ விரும்பவில்லை. வாய்ச்சொல் வீரர்களாக, 'நாடோடி மக்கள் வண்ண மயமான பரம்பரையினர் வீட்டுக்குள் கட்டுப்பட்டிருக்க விருப்பமற்றவர்கள், பறவைகளைப் போல் சுதந்திரமாக திரிவதில் விருப்புடையவர்கள். நடிப்பதிலும் பாடித் திரிவதிலும் இன்பம் காண்பவர்கள்' என்று மேலெழுந்த வாரியாகக் கூறி வருகிறார்கள்.

உண்மையில் நாடோடி மக்கள் வாழ்கின்ற நிலையும், அவர்களது சூழ்நிலைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தேவையும், அவர்களது குடும்ப அமைப்புகளை மாற்றி அமைத்துள்ளன. 'நாங்கள் நாடோடிகள்' என்ற நூலில், காடரினா டைகோன் எழுதியுள்ளபடி 'நாடோடிகள் கிரீஸிலிருந்து ஐரோப்பிய நாடுகளின் பல பகுதிகளுக்குச் சென்றனர். சிலர் வடக்கே மால்டாவியா, வாலாசியா-

ருமனேிய நாட்டுப் பகுதிகளுக்குச் சென்றனர். ஆனால் பெரும்பாலோர் அடிமையாக மாறினார்கள்".

இந்த அடிமை வாழ்வு 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நீடித்தது. 1845இல், புகாரெஸ்ட் செய்தித்தாளில், ரொமானிய செல்வந்தருக்குச் சொந்தமான இருநூறு நாடோடிக்குடும்பங்களின் விற்பனை பற்றிய விளம்பரம் வெளியாயிற்று. 1851இல், மால்டாவிய செய்தித்தாளில் நாடோடி இனத்தைச் சேர்ந்த 85பெண்டிர் 86 சிறுவர், 94 ஆண்கள், 84 சிறுமியர் காலஞ்சென்ற அமைச்சர் அலெகுஸ்டுர்ஸா என்பவருக்குச்சொந்தமான 'பொருள்களின்' ஒரு பகுதியாக விற்பனைக்கு வந்தது பற்றிய விளம்பரம் வெளியானது.

15ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பா முழுவதும் 'நாடோடி' இனத்தவரை ஒடுக்க மேற்கொள்ளப்பட்ட முறைகளை காடரினா டைகோன் வரிசைப்படுத்துகிறார். உண்மையை உணர விரும்பாதவர்கள் 'இவையெல்லாம் என்றோ நிகழ்ந்தவை. இன்று நாடோடிகளின் நிலை என்ன?' என்று கேட்கிறார்கள். நான் வரலாற்றுத் துறையைச் சேர்ந்தவன் அல்லன். எனினும் நான் பிறந்த 1926ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு விவரங்களிலிருந்து ஒரு பகுதியை விளக்குகிறேன். 1926இல் வெளியான ஓர் அறிக்கையில், நாடோடிகளுக்காக மேற்கொள்ளப்படவேண்டிய பயனளிக்கும் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாடோடிகளின் குழந்தைகளுக்கென கல்விக் கூடங்களை அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டது. இளமைப் பருவத்திலேயே இக்குழந்தைகளை இவ்விடுதிகளில் சேர்த்து, சமூகக் கோட்பாடுகளுக்குள் கொண்டு வரவேண்டும் என்று இவ்வறிக்கை வலியுறுத்தியது.

ஓர் இனத்தைச் சார்ந்த மக்களை ஒடுக்க மேற்கொள்ளப்பட்ட அநியாய அடக்கு முறைகளைப் புரிந்துகொள்ள ஒருவர் உளவியல் வல்லுநராக இருக்க வேண்டுவதில்லை. குடும்பம் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருந்தன. எனவே அடக்குமுறை அதிகமாக ஆக, இப்பிணைப்புகள் வலுப்படுத்தப்படவேண்டியிருந்தன. நாடோடி மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தமக்கென தனிச்சமுதாயத்தை அமைத்துக் கொண்டு, வாய்மொழியாக தங்களுக்கென சட்டங்களை இயற்றிக் கொள்ள வேண்டியிருந்தது.

நாடோடிகளிடையே அவர்களது முகாமில் நிலவும் 'பங்கீடு' முறை நான்கண்டவற்றுள் தலைசிறந்த ஜனநாயக முறையாகும். அந்த இனத்தில் வெவ்வேறு மனிதர் ஈட்டிய பொருள் அனைவருக்கும் சமமாகப் பங்கிடப்பட்டுள்ளது. ஒருவன் நோயுற்றுப் பொருளீட்ட முடியாத நிலையில் இருந்த பொழுதிலும், மற்றவர்களைப்போலவே சமபங்கு கிடைத்தது. அவனுடைய குடும்பத்தினரை மற்றவர்கள் பார்த்துக் கொண்டனர். ஒரு குடும்பம் என்பது தந்தை, தாய், மக்கள் மட்டுமல்ல. தந்தை அல்லது தாயின் தமக்கை அல்லது சகோதரரும் குடும்பத்தினராகக் கருதப்பட்டனர்.

குடும்பத்தில் பாட்டியார் குடும்பத்தை கவனித்துக் கொள்வார், குழந்தைகள் ஒருபோதும் தனித்துவிடப்பட்டதில்லை, குழந்தையின் பெற்றோர் வெளியே பணிபுரியச் சென்றிருக்கும்போது குழந்தைகளைப் பாட்டியார் கவனித்துக்கொள்ள வேண்டும். ஒரு குடும்பத்தில் வயதுக்கு வந்த பெண்களிருப்பின், மூத்த மகள்

நிழற்படம் © ப்யோன் லாங்காமர் ஸ்டாக்ஹோம்

நாடோடிகள் பலர் இன்றைய கருவிகளையும் நுட்பங்களையும் பயன்படுத்தி மரபான தொழில்களைச் செய்கின்றனர் மேலே: நகை வடிவங்கள். உச்சியில் வெள்ளிக் கச்சையின் கொளுவி. இக்கட்டுரையாளர் ரோசா டைகோன் ஜானுஷ் இதைச் செய்கிறார்.

முதலில் மணம் புரிந்து கொள்ளவேண்டும். மூத்த மகள் திருமணமாகாது வீட்டில் இருப்பது குடும்பத்திற்கு அவமானம் என்ற கருத்து நிலவியது.

இளைஞர்களின் திருமணத்தைப் பெரியவர்கள் முடிவு செய்தனர். தந்தை மகனுக்காகப் பெண் கேட்பார். சில நாட்களுக்குப் பிறகு திருமணம் நடைபெறும். திருமணத்திற்கு நெடுந்தொலைவிலிருந்து உறவினரும் நண்பரும், வருவர், விருந்தினரை மிகச் சிறந்த பாடகர்களும் நடனமணிகளும் மகிழ்விப்பர். மணமகனின் தந்தை ஒரு குறிப்பிட்ட அளவு பணம் கொடுத்து, பெண்ணைப் பெற்றுக் கொள்வர். இது நாடோடி இனத்துக்கு மட்டும் உரியது அல்ல. மணப்பெண் தூய்மையானவளாக அதாவது கன்னியாக இருத்தல்வேண்டும். திருமண இரவுக்குப் பிறகு, படுக்கை விரிப்புகளை மூதாட்டியார் ஆய்ந்து, மணப்பெண்ணின் கன்னித் தன்மையை அறிந்து கொள்வார்கள். அதன் பின்னர் நடைபெறும் விருந்து, திருமணத்தைப் போலவே முக்கியமானது.

நாடோடி இனத்தில் ஏன் பெண்கள் மிக இளவயதிலேயே மணம் புரிந்து கொள்ளவேண்டும் என்று பலர் கேட்கிறார்கள். இந்தியாவில் இன்னமும் நிலவுகின்ற இம்முறைக்குஓர் அடிப்படைத் தத்துவம்உள்ளது. ஒருபெண் ஒருமுறை மட்டுமே மணம் புரிந்துகொண்டு, வாழ்நாள் முழுவதும் கணவனுடன் வாழ்கிறாள். முதலில் இளமையில் மணம் புரிந்த பெண்டிர் கணவரின் பெற்றோருடன் வாழ்கிறார்கள். அப்போது வாழ்க்கைக்கு நடைமுறையிலும் கருத்தளவிலும் தேவையான ஆதரவு அவர்களுக்கும் கிடைக்கிறது. இளைஞர்கள் தாங்களே வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்கிறார்கள். இத்திருமணங்கள் பெரும்பாலும் வெற்றியடைவதில்லை.

முகாமில் ஒரு குழந்தை பிறக்கும்போது தாயின் அருகில் அவளது கணவனையும். மூதாட்டியரையும் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. குழந்தை பிறந்தபின் இரண்டுவாரங்களுக்கு, தாய் தூய்மையற்றவளாகக் கருதப்படுகிறாள். அவளுக்கென்று தனி உணவு, உடை, படுக்கை விரிப்புகள், கைகழுவும் தட்டு ஆகியவை ஒதுக்கப்படுகின்றன. இரண்டு வாரங்களுக்குப் பின்னர், அவள் பயன்படுத்திய பொருள்களை வெளியே எறிந்து விடுகிறார்கள்.

இந்த இனத்தில் வயதானவர் மரணமடையும்போது, அனைவரும் கூடி அவருக்கு விடையளிக்கவும், அவரது ஆசியைப் பெறவும் கூடுவர்.

நாடோடிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, அவர்கள் சிறந்த வீட்டு வசதி, கல்வி வசதி இவற்றை அடையும்போது அவர்களுடைய உயர்ந்த மரபு மறையத் தொடங்குகிறது. இளைஞர்கள் தங்கள் சமூகத்தின் உன்னதப் பழக்கங்களை மறந்து புதிய கருத்துக்களையும் சட்டங்களையும் மேற்கொள்கிறார்கள். எனினும் எங்கள் இனப் பெரியோரிடம் நாங்கள் காட்டும் மரியாதை, அன்பு, மதிப்பு இவையெல்லாம் எங்கள் கல்வியின் அடிப்படையாக இருப்பதால், அவை என்றும் மறைவதில்லை.

பல நூற்றாண்டுகளாக நாடோடி இனத்தவருக்கு இழைக்கப்பட்ட அநீதியால் எங்களுக்கும் எங்கள் முன்னோருக்கும் சமுதாயத்தில் உரிமைகள் மறுக்கப்பட்டன. 1960-ல் காடரினா டைகான், இந்த இன வேற்றுமை, புறக்கணிப்புக்கு எதிராகப் போராட முன் வரவில்லை என்றால் இந்நிலை நீடித்திருக்கும். அவர், பல நூல்களையும், செய்தித் தாட்களில் பல கட்டுரைகளையும் எழுதி விழிப்புணர்வு ஊட்டினார். பிரதம அமைச்சரையும், அரசாங்கத்தையும், அரசியல் கட்சிகளையும், நாடாளுமன்றத்தையும் நாடி உதவி கேட்டார்.

பெரியவர்களின் உள்ளத்திலிருந்து எங்களுக்கு எதிரான எண்ணங்களை அழிப்பது எளிதல்ல என்பதை உணர்ந்த அவர், குழந்தைகளுக்காக காடிஸி கதைகளை எழுதி, குழந்தைகள் இந்த சிறுபான்மை இனத்தவரைப் பற்றிப் புரிந்து கொள்ள உதவினார். ஆனால் இந்த உழைப்பு காரணமாக அவர் இதய நோய் வாய்ப்பட்டு, 1982 முதல் மயக்க நிலையில் இருக்கிறார்.

அவர் எழுதிய காடிஸி கதைகள் மொழி பெயர்க்கப்பட்டு, பல நாட்டுக் குழந்தைகளாலும் படிக்கப்பட்டு வருகின்றன. கடந்த இருபது ஆண்டுகளில் அவர் ஆற்றிய தொண்டும் தன் இனத்தவரிடமும் மற்றவரிடமும் இவர் காட்டிய பரிவும் இக்கதைகள் மூலம் இன்னும் வாழ்கின்றன.

காடரினாவின் பணியால், நாடோடி இன மக்கள், சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து அதனைத் தம் கலையாலும் கலாசாரத்தாலும் மேலும் சிறப்படையச் செய்யக்கூடும்.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

ரோசா டய்க்குகான் ஜானஷ் ஸ்வீடனில் வெள்ளிக் கொல்லர் குடும்பத்தில் பிறந்தார். இவ்வம்மையார் 38ஆம் வயதில் முதல் முறையாக கல்விக்கூடத்தில் சேர்ந்தார். ஸ்டாக்ஹோம் கலைத் தொழில் பள்ளியில் பயின்று இன்றைய உலோக வேலைப்பாட்டுத் தொழிலைக் கற்றார். குடும்ப கைத்தொழிலைச் செய்துவரும் . இவர் ஸ்வீடனில் இட்டர் ஹோத்டாலில் வெள்ளிக் கொல்லராகப் பணியாற்றுகிறார்.

‘அலையும் குரல்’

கியூலியோ சோராவியா

நிழற்படம் © டைபேன் டாங், நியூயார்க்

கிரீஸிஸ் தெசலோனிக்கியிலுள்ள அரசுப் பள்ளியில் இவ்விரு நாடோடிச் சிறுமியர் தாம் வாழும் நாட்டின் வரலாற்றையும பண்பாட்டையும் பற்றிக் கற்கின்றனர்.

ஒரு மக்கள் குழுமத்தின் தற்பண்புக்கு மொழி இன்றியமையாதது என்ற கருத்திற்குத் தலையாய சான்றாகத் திகழ்பவர்கள் நாடோடி மக்களாவர்.

பல நூற்றாண்டுகளில் உலகெங்கும் சிதறிப் பரவிய இந்த நாடோடிகள் ஒரு பொதுவான தோற்றத்தினாலேயேஒன்று பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மொழி மட்டுமே இதற்குச் சான்றாக இருக்கிறது. ஐந்து கண்டங்களிலும் வாழும் நாடோடிகளில் எத்தனை குழுமங்கள் இருக்கின்றனவோ அத்தனை கிளை மொழிகள் அவர்களிடையே வழங்குகின்றன. இவர்கள் பொது மொழியில் இவர்களுடைய பயணங்களின் முத்திரைகளைக் காணலாம். மேலும், இவர்களுடைய ஆதி தாயகமான இந்தியாவுடன் இவர்களை இம்மொழி பிணைகிறது.

நாடோடி மொழியின் இலக்கண வடிவங்கள், இன்றும் இந்தியாவில் வழங்கும் இந்தோ—ஐரோப்பிய மொழிகளுடன் பலவிதங்களில் ஒத்திருக்கின்றன. அத்துடன், அடிப்படைச் சொற்கள், சில ஒலியியல் மாற்றங்கள் இருந்தபோதிலும் இந்தி, பஞ்சாபி, தார்டிக் மொழிகளில் காணப்படும்* சொற்களை ஒத்திருக்கின்றன.

இது வியப்புக்குரியதன்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய நாடோடிகளின் ஆதி மூதாதையர்கள் மேற்கு நோக்கி நெடிய பயணம் சென்ற போது, பல்வேறு மொழிகளும் பழக்க வழக்கங்களும் கொண்ட மக்கள் குழுமங்களுக்கு அருகே அடிக்கடித் தங்கினார்கள். சில சமயம் அவர்கள் நீண்டகாலம் தங்கியிருந்தார்கள். அப்போது, அவர்கள் அந்த அண்டை மக்கள் குழுமங்களிடமிருந்து சில பண்பாட்டு, மொழியியல் மரபுகளை ஈர்த்துக்கொண்டார்கள். பொதுவாக, அந்த நாடுகளிலுள்ள மக்களுடன் இரண்டறக் கலந்து தங்கள் தற்பண்பினை இழந்துவிடும் அளவுக்கு அவர்கள் அங்கு நெடுங்காலம் தங்கிவிடவில்லை.

எனினும், அவர்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்த இடங்களில்கூட அவர்கள் நாடோடி வாழ்க்கையைத்தான் நடத்தினார்கள். மத்திய கிழக்கு நாடுகளில், அண்டை மக்கள் இந்த நாடோடிகளை பல்வேறு பெயர்களில் அழைத்தனர். உதாரணமாக, பாலஸ்தீனத்தில் இவர்கள் *“நாவார்”* எனப்பட்டனர்; ஆனால், இங்கு இவர்கள் தங்களை *“தோம்”* என்று கூறிக்கொண்டனர். ஆர்மேனியா சென்ற போது இப்பெயரை *“லோம்”* என மாற்றிக்கொண்டனர். சிறிது காலத்திற்குப் பின்பு, கிரீசில் இவர்கள் தங்களை *“ரோம்”* என அழைத்துக் கொண்டனர். இந்தப் பெயர்தான் இன்று ஐரோப்பாவிலும், உலகின் மற்றப்பகுதிகளிலும் நிலைத்திருக்கிறது.

இவர்களுடைய இனப்பெயரின் உருமலர்ச்சி, இன்றைய நாடோடி இனத்தவரின் வரலாற்றை ஆதியிலிருந்து ஆராய்ந்தறிய உதவுகிறது. இவ்வாறாக, ஐரோப்பாவில் வழங்கும் மொழியில் *“ரகரம்”* உள்ள பல சொற்கள் உள்ளன. இச்சொற்களை ஒத்த பல சொற்கள், நுனி நா ‘அண்ண’ ஒலியாகிய தகரம் உடைய இந்திய மொழிகளில் காணப்படுகின்றன. இந்தியாவிலுள்ள நாடோடி

---

* நாக்கின் நுனி உள் வாயின் மேல் பக்கத்தைத் தொடும்போது இம்மெய்யெழுத்து ஒலி எழுகின்றது.

களில் ஒரு குழுவினர் தங்களை 'தோம்' என்று கூறிக் கொள்கின்றனர்.

ஐரோப்பிய நாடோடிகள் எவ்வாறு தோன்றினார்கள் என்பதை இந்திய நாடோடிக் குழுமத்தினர் புலர் நினைவு கூர்கின்றார்கள் இக்குழுமத்தினரின் குறிப்பிடத்தக்கவர்கள் *'பஞ்சாரர்'' 'லாமானா'* ஆவர். இவர்கள் பேசும் மொழி ஐரோப்பிய நாடோடிகள் பேசும் மொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கிறது. அதே சமயம், இந்தி மொழிக்கு நெருக்கமாக உள்ளது. ஐரோப்பிய நாடோடிகள் ஆசியாவைக் கடந்து சென்றபோது, இந்திய ஈரானிய மொழிகளிடையே உறவு நிலவியபோதிலும், அவர்களுடைய மொழியில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை. எனினும், *''ரொமானி சிப்''* என்ற நாடோடி மொழியில் ஈரானிய, ஆர்மீனியச் சொற்கள் காணப்படுகின்றன,

எல்லாக் கிளைமொழிகளிலும் ஈரானிய மொழிச்சொற்கள் உள்ளன. அவற்றுள் சில: *பாக்ஸ்ட்* (நற்பேறு); *ஆரம்ரோல்* (பேரிக்காய்); *அங்குஸ்டிரி* (மோதிரம்); ரூவ் (ஓநாய்; *உர்தான்* (சகடம்). ஈரானிய அல்லது ஆர்மீனிய மொழிச்சொற்கள்: *ஜோர்* (வலிமை); *கிகாட்* (முகப்பு) ஆர்மீனிய மொழிச் சொற்கள்: *பாவ்* (அடுப்பு); *கிராஸ்ட்* (குதிரை).

மேற்குக் கோடியிலுள்ள நாடோடிகளின் மொழியில் கிரேக்க மொழியின் தாக்குறவுகளைக் காணலாம். இந்த மொழியின் இலக்கண வடிவங்களும், சொற்களும் பிற்காலத்திய ஐரோப்பிய நாடோடி மொழிகளில் இணைந்தன. கிரேக்க மொழிச் சொற்களுக்கு உதாரணம்: *திரோம்* (பாதை, சாலை); *கார்ஃபின்* (நகம்); *கிளிடி* (திறவுகோல்); *கோக்காலா* (எலும்பு); *ஐசோக்ஸ்* (பாவாடை) *ஜிமி* (சோப்பு); *வாமனி* (அடைகல்): *இஸ்வாரி* (சம்மட்டி).

பல நாடோடிக் கிளைமொழிகளில், கிரேக்க மொழிச் சொல்லிலக்கணக்கூறுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, முடிவெச்ச விகுதியாகிய ''மே''; *ராமோமே* (எழுதப்பட்ட); *பாஹாமே* (உறைந்துள்ள); வெஸ்லிமே (தைக்கப்பட்ட; வினைச் சொற்களிலிருந்து அல்லது உரிச்சொற்களிலிந்து பெறப்பட்ட பெயர்ச்சொல் வடிவங்களுக்குப் பயன்படும் *''மாஸ்''*: *பைமாஸ்* (பானம்); 'குடி' என்பதைக் குறிக்கும் *'பை'* என்ற வினையடியாகப் பிறந்தது. இந்திய மொழிகளில் *''மாஸ்'* என்பதற்குப் பதிலாக 'பே' என்ற விகுதி சேர்க்கப்படுகிறது. உதாரணம்: *நெவிமாஸ்* அல்லது *நெவிபே*; *நெவோ* என்ற வினையடியாகப் பிறந்த புதுமை அல்லது செய்தி; *டெர்னிமாஸ்* அல்லது *டெர்னிபே* (இளமை); *டெர்னோ* என்ற வினையடியாகப் பிறந்தது; பார்வாலிமாஸ் அல்லது *பார்வாலிபே* (செல்வம்); *பார்வாலோ* என்பதனடியாகப் பிறந்தது.

பதினான்காம் நூற்றாண்டு முதற்கொண்டு, நாடோடிகளின் மொழி, அவர்கள் சென்ற ஐரோப்பிய நாடுகளில் மாற்றம் பெற்றது. அந்த மொழி ஒரு வளமான, நெகிழ்ச்சியான மொழி; பெயர்ச் சொற்களுக்கும் வினை விகற்பங்களுக்கும் சிக்கலான வேற்றுமையுருபுகளையுடையது. இதனால் விரிவான செய்தித் தொடர்புக்கு இடமளிக்கிறது. பால்க்கன் கிளைமொழிகளில், வேற்றுமையுருபுகள் தொடர்ந்து நீடிக்குமிடத்து ஒருமையில் அல்லது பன்மையிலுள்ள ஆண்பால் அல்லது பெண்பாற்பெயர், எட்டு வேற்றுமைகளைக் கொள்கின்றது. *ஃபிரால்* (சகோதரன்) என்ற பன்மைப் பெயரை எடுத்துக் கொள்வோம்:

எழுவாய் வேற்றுமை : *ஃபிராலா* (சகோதரர்கள்)
இரண்டாம் வேற்றுமை : *ஃபிராலா* (சகோதரர்களை)
மூன்றாம் வேற்றுமை : *ஃபிராலண்ட்சா* (சகோதரர்களுடன்)
நான்காம் வேற்றுமை : *ஃபிராலங்கே* (சகோதரர்களுக்கு)
ஐந்தாம் வேற்றுமை : *ஃபிராலண்டர்* (சகோதரர்களால்)
ஆறாம் வேற்றுமை : *ஃபிராலங்கோ* (சகோதரர்களது)
ஏழாம் வேற்றுமை : *பிராலஸ்டே* (சகோதரர்களிடம்)

வினைகள் ஐந்து காலங்களைக் கொண்டுள்ளன:—

நிகழ்காலம்: கேரவ் (நான் செய்கிறேன்)
முடிவுறா இறந்தகாலம் : *கேரவாஸ்* (நான் செய்து கொண்டிருந்தேன்)
இறந்தகாலம் : *கெர்தம்* (நான் செய்தேன்)
செயல் முடிவுக்காலம் : கெர்திமாஸ் (நான் செய்துள்ளேன்)
எதிர்காலம் : *காம்—கரேவ்* (நான் செய்வேன்)

ஸ்லாவ் மொழியில் பெயர்ச்சொல் மூழுமையாக வேற்றுமையுருபுகளைக் கொண்டுள்ளது. எனவே அந்த மொழியின் செல்வாக்கினால், கிழக்கு ஐரோப்பாவில் பெயர்ச்சொற்களின் வேற்றுமையுருபுகள் எளிதாக நிலைபெற்றன. வேல்ஷ் நாடோடிகள் எனப்படும் இன்று அற்றுப்போன இனத்தவர்களின் மொழியினை போன்ற வேறு கிளை மொழிகளில், வேற்றுமையுருபுகள் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. எனினும் மேற்கு ஐரோப்பாவில், இந்த வேற்றுமையுருபு மறையும் போக்குக் காணப்படுகிறது; பெயர்ச்சொற்களில் முன்னிடைச் சொற்களைப் பயன்படுத்தி வேற்றுமையுருபுகள் சேர்க்கப்படுகின்றன. மத்திய ஐரோப்பாவிலுள்ள சில சிண்டோ கிளை மொழிகளில் ஜெர்மன் மொழியின் முன்னிடைச்சொற்கள்'பயன் படுத்தப்படுகின்றன

ஃபான் யூ ஃபிரால் (சகோதரர்களின்)
ஆன் யூ *ஃபிரால்* (சகோதரர்களுக்கு)
மிட் யூ ஃபிரால் (சகோதரர்களுடன்)

ஸ்லாவ் மொழிகளிலிருந்தும், ஹங்கேரியன், ருமேனியன், ஜெர்மன் மொழிகளிலிருந்தும், மற்ற ஐரோப்பிய மொழிகளிலிருந்தும் பல சொற்கள் கடன் வாங்கப்பட்டு நாடோடி மொழிக்கு வளம் சேர்க்கப்பட்டுள்ளது. இம்மொழி மிகவும் நெகிழ்ச்சியுடையதாக இருப்பதால், வெவ்வேறான வேர்ச்சொற்களைக் கொண்ட சொற்களை இணைத்துப் புதிய வடிவங்களை உருவாக்கும் திறனுடையதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, *'ஸ்விகார்டாஜ்'* (மாமியார்) என்னும் சொல்லையும், *ஸ்விகார்மட்டர்'* (மாமியார்) என்ற ஜெர்மன் சொல்லையும் இணைத்து உருவாக்கப்பட்டதாகும். தென் யூகோஸ்லாவியாவிலுள்ள முஸ்லிம் நாடோடிகள் என்ற குழுமத்தினரின் கிளைமொழியில் *'லெடோமே'* (உறைந்துள்ள) என்ற சொல் காணப்படுகிறது. இச்சொல், *'லெட்'* (பனிக்கட்டி) என்ற ஸ்லாவியச் சொல்லும், *'மே'* என்ற கிரேக்க மொழி விகுதியும் இணைந்ததாகும்.

இவ்வாறாக, நாடோடிகளின் மொழியானது, சீர்கேடுறுவதற்குப் பதிலாக, மற்ற மொழிகளைப்போலவே மாறுதலுக்குள்ளாகிறது. கால மாறுதல்களுக்கும், புதிய சூழ்நிலைகளுக்கும், புதிய தேவைகளுக்கும் ஏற்ப இந்த மொழியும் மாறுதலடைந்து சொல்வளம் பெறுகிறது. ஆனால், பல்வேறு கிளைமொழிகளுக்கிடையில் வேறுபாடுகள் பெருகி வருவதால்; பல்வேறு குழுமங்களிடையிலான செய்தித் தொடர்பு மேன்மேலும் கடினமாகிவருகிறது. இந்த கிளைமொழிகள் யாவை?

நிழற்படம் © மிஷேல் ப்ரீபோ, பாரிஸ்

பாரிஸ் புறநகர்ப் பகுதியான விலெப்பிந் குடியிருப்பிலுள்ள நாடோடிச் சிறுவர் தாம் பயிலும் 'ஊர்திப் பள்ளி' ஓட்டுநரை வரவேற்கின்றனர். நாடோடிகள் இன்றைய சமுதாயத்துடன் இணையும்போது தாம் வாழும் நாட்டு மொழியில் கல்வி கற்கின்றனர். அவர்கள் தம் பண்பாட்டுத் தனித்தன்மையை இழக்காவிடில், இதனால் அவர்கள் வாழ்வு வளம் பெறுகின்றது.

நிழற்படம் © ரோஜர் வியோல், பாரிஸ்

நாடோடிகள் பற்றி ஷேக்ஸ்பியர் கூறும் குறிப்புகளை வல்லுநர்கள் மேற்கோள் காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக 'டெம்பஸ்ட்', நாடகத்தில் துயர வடிவான காலிபனின் பெயர் 'வஞ்சகம்' எனப் பொருள்படும் 'காலிபென்' எனும் ரொமானியச் சொல்லைத் தழுவியது. 'ஒத்தெல்லோ' நாடகங்களில் நாடோடிகள் பற்றிய குறிப்புகளைக் காணலாம். ''வெனிஸ் மூர்' 'போலி மருத்துவரிடம் வாங்கிய வசிய மாயங்களால்' டெஸ்டிமோனாவின் அன்பைக் கவர்ந்ததாகக் குற்றம்சாட்டப்படுகிறான் ஒத்தெல்லோ தனது அன்புறுதியின் அடையாளமாக டெஸ்டிமோனாவுக்கு ஒரு கைக்குட்டை கொடுக்கிறான். அதை இழந்ததும் கேடு விளைகின்றது. அவன் அதை என் தாய்க்கு ஓர் எகிப்திய (நாடோடி) கொடுத்தாள். அவள் மக்களின் எண்ணங்களை அறியும் மந்திரவாதி' என்கிறான். மேலே: இன்கிரஸ் கலை மரபுப் ஃபிரெஞ்சு ஓவியர் தெயதோர் ஷசோரியோ தீட்டிய ஒத்தெல்லோ டெஸ்டிமோனா ஓவியம்.

உலகில் ஏறத்தாழ 30 இலட்சம் நாடோடிகள் வாழ்வதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இவர்களில் குறைந்தது மூன்றில் இரு பகுதியினர் ''*வ்ளாக்ஸ்*'' என்ற டானுபியக் கிளை மொழியைப் பேசுகின்றனர். சில குழுமங்கள், தங்கள் மொழியைக் கைவிட்டுவிட்டு, தங்கள் குடியமர்ந்த இடங்களில் வழங்கும் மொழிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். உதாரணமாக, '*ருடாரி*' என்ற நாடோடிகள் ருமேனிய மொழியைப் பேசுகின்றனர். மற்ற முக்கிய கிளை மொழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கிளைமொழிகள் அவற்றைப் பேசுபவர்களைப் போலவே, உலகெங்கும் பரவலாக வழங்குகின்றன. எனவே இந்த மொழிகள், வசதி காரணமாகவே புவியியல் அடிப்படையில் குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன:

(1) டானுபியன் குடும்பம் (கால்டர்ஷ் லோவரா, குரார முதலியன).

(2) மேற்குப் பால்கன் குடும்பம் (இஸ்டிரியன், ஸ்லோவன், ஹவாட்டிஸ் முதலியன).

(3) சின்டோ குடும்பம் (எஸ்டாவ கார்ஜா, கிரானரார்ஜா, கிராசார்ஜா, ஸ்லோவக் முதலியன).

(4) மைய மற்றும் தென் இத்தாலியைச் சேர்ந்த '*ரோம்*' குடும்பங்கள்.

5) பிரிட்டிஷ் குடும்பம் (வேல்ஷ் இன்று இல்லை; இன்று ஆங்கிலேய-*ரொமானி* மட்டுமே வாழ்கிறது; இது ஆங்கிலேய-*ரொமானி* மொழிகளின் கலவை).

(6) ஃபின்னிஷ் குடும்பம்

(7) கிரேக்கோ-துருக்கிக் குடும்பம்.

(8) ஐபீரியன் (கிட்டானோஸ் இனத்தவர் பேசும் ஹிஸ்பானோ - *ரொமானி* கிளை மொழியாகிய காலே).

நாடோடிகளின் மொழியின் அடிப்படையில், அவர்கள் மத்திய இந்தியாவில் தோன்றியிருக்க வேண்டும் என்பது ஆர். எல். டர்னர் கொள்கை. அவர்கள் வடமேற்கு இந்தியாவில் தோன்றியவர்களென மற்றவர்கள் கருதுகின்றனர். இவர்கள் தங்கள் தாயகத்திலிருந்து இடப் பெயர்ந்து குறைந்தது 10 நூற்றாண்டுகள் கழிந்து விட்டமையாலும், இவர்கள்

(தொடர்ச்சி III ஆம் பக்கம் பார்க்க)

கியூலியோ சோரவியா இத்தாலியர்; கட்டானியா பல்கலைக் கழகத்தில் மொழியியல் இணைப் பேராசிரியர்; மொழியியல் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார்; இப்போது நாடோடி மொழிகள் பற்றி சிறப்பாய்வு செய்து வருகின்றனர். '*வொக்கபுலாரியோ சின்டோ தெல் வெனீஸி*' (வெனிசியாவின் சின்டோ சொற்கள்) 1981, '*கிரமாந்திக்கா தெல் தியாலெத்தோ தேல் ரோம் ஸோராக்ஸானே*' (ஸோராக்ஸேன் நாடோடிகளின் இலக்கணம்) 1988 ஆகியவை இவரது நூல்களுள் சில.

நாஜி கொடுமைக்குப் பலியான ஐந்து இலட்சம் நாடோடிகள்

மிரியாம் நோவிட்ச்

ஜெர்மனியின் நாஜி ஆட்சியில், நாடோடி இன ஒழிப்பு முக்கியத் திட்டமாக இருந்தது. நாடோடிக்கு எதிரான அதிகாரபூர்வமான நடவடிக்கைகள் 1899இல் தொடங்கின. பவேரியாவின் காவலர் "நாடோடி நடவடிக்கைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி நாடோடிகள் மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கு, வழக்கு மன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களைச் சேகரித்து வைத்தது. 1929இல் இப்பகுதி தேசிய மையமாக ம்யூனிக்கில் இயங்கியது. அதன் பின்னர் அனுமதியின்றி நாடோடிகள் இடம் விட்டு இடம் செல்ல முடியாத நிலை உருவானது. பதினாறு வயதுக்கு மேற்பட்ட நாடோடி, தனக்கு வேலை உண்டு என நிரூபிக்காவிடில், சீர்திருத்த நிறுவனத்தில் இரண்டாண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

ஹிட்லர் ஆட்சிக்கு வந்த 1933ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலைமை கடுமையாயிற்று. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று நிரூபிக்க முடியாத நாடோடிகள் நாடு கடத்தப் பட்டனர். மற்றவர்கள் சமூக எதிர்ப்பாளர் என்று சிறை வைக்கப்பட்டனர். அவர்களது இனம் பற்றிய கருத்துக்கள் வளரத் தொடங்கின. 1936இல் டாக்டர் ஹான்ஸ் குளோக் (இவர் நியூரம்பர்க் சட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவர்). நாடோடிகள் அந்நிய மரபைச் சார்ந்தவர்கள் என்று அறிவித்தார். அவர்கள் ஆரிய பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பதை மறுக்கமுடியாத பேராசிரியர் ஹான்ஸ் எப். குந்தர், 'பல இனங்கள் இணைந்த, நிரணயிக்க இயலாத மரபினர்' என்று கூறினார்.

டாக்டர் பட்ட ஆய்வுக்காக நாடோடி இனம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. மக்கள் நலத்துறையின் இன ஆய்வுப்பிரிவின் தலைவரான டாக்டர். ரிட்டரின் உதவியாளரான எவா ஜஸ்டின் "நாடோடி இரத்தம் ஜெர்மானிய இனத் தூய்மைக்கு ஆபத்து விளைவிக்கும் தன்மையது" என்று தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டார்,

1937, டிசம்பர் 14 ஆம் நாள் கொண்டுவரப்பட்ட சட்டம் இவர்களின் நிலையை மிகவும் மோசமாக்கியது. இதன்படி இவர்கள் திருத்த முடியாத குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டனர். 1937, 38 ஆண்டுகளில் பலர் கைது செய்யப்பட்டனர். புசென்வ்ரீல்ட் குடியேற்றச் சிறைப் பகுதிகள் இவர்களுக்கென ஒதுக்கப் பட்டது. மாதாஸன், கூஷின். டாவுட் மெர்ஜென், நாட்ஸ்வீலர், பிளாசன்பர்க், போன்ற முகாம்களில் இறந்தோர் பட்டியலில் பல நாடோடிகளின் பெயர்களும் இடம்பெற்றன. ராவன்ஸ்பர்க்கில் பல நாஜி மருத்துவர்களின் கொடுமையான பரிசோதனைகளுக்கு பல நாடோடிப் பெண்டிர் இரையானார்கள். ஜெர்மானியக் குடியானவரின் இனத் தூய்மையைக் கெடுப்பதால், நாடோடிகளை உழைப்பு முகாம்களுக்கு அனுப்பி, அனைவருக்கும்பலவந்தமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று டாக்டர் போர்ட்சி என்பவர், ஹிட்லரிடம் பரிந்துரை செய்தார்.

1938இல் ஹிட்லர் தலையிட்டு நாடோடி விவகார மையத்தை ம்யூனிக்கிலிருந்து பெர்லினுக்கு மாற்றும்படி ஆணையிட்டார். அந்த ஆண்டு பண்ணைகளுக்கும் திராட்சைத் தோட்டங்களுக்கும் உரிமையாளராக இருந்த நாடோடி இனமக்கள் 300 பேர் மான் ஓர்த்கிராமத்தில் சிறை செய்யப்பட்டார்கள்.

ஹிட்லரின் ஆணைப்படி நாடோடிகள் பலவகையாகப் பட்டியல் படுத்தப்பட்டார்கள். கலப்பற்ற நாடோடிகள் (Z), கலப்பின நாடோடிகளில் பெரும்பாலும் நாடோடி இன இரத்தம் உடையவர்கள் (ZM+) ஆரிய இரத்தம் அதிகம் கலந்த, கலப்பின நாடோடிகள் (ZM—) பாதி நாடோடியின இரத்தம் பாதி ஆரிய இன இரத்தம் உடையவர்கள் (ZM).

ஜோஸப் பில்லிக் என்ற வரலாற்று ஆசிரியர் மக்களைக் கொன்று தீர்க்கும் மூன்று வழிகளை விவரிக்கிறார். அறுவை சிகிச்சை மூலம் பிறப்பினை அழித்தல், நாடுகடத்துதல், கொன்று அழித்தல் என்பவை.

வேறு இனத்தவரை மணம் புரிந்து கொண்ட, நாடோடிப் பெண்களுக்கு டுசெல்டார்ப்லீரன்பெல்ட் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. கருவுற்ற நிலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் பலர் இறந்தனர். ராவன்ஸ்பர்க் மருத்துவமனையில், S.S மருத்துவர்களால் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட 120 நாடோடிப் பெண்கள் இறந்துவிட்டனர்.

ஜெர்மனியிலிருந்து 5000 நாடோடி இனத்தவர், போலந்தில் உள்ள லொட்ஸ் ஒதுக்குப்புறப் பகுதிக்கு நாடு கடத்தப் பட்டனர். அங்கே வாழ்க்கை மோசமானதாக இருந்தது. யாருமே உயிர் வாழ முடியவில்லை.

நாஜிகளின் முக்கியமான முறை கூட்டம் கூட்டமாகக் கொன்று குவிப்பது. 1941இல் நாடோடி இனத்தாரை அடியோடு ஒழித்துக்கட்டுவது என்ற முடிவு எடுக்கப் பட்டது. இதற்கென எனீஸா குரூப்பன் என்ற கொலைப்படை அமைக்கப்பட்டது. எல்லா நாடோடிகளும் சிறை செய்யப்பட்டனர். 1938 டிசம்பர் 8ஆம் தேதி ஹிட்லர் பிறப்பித்த ஆணைப்படி எல்லா நாடோடிகளின் முகவரியும் காவலருக்குத் தெரிந்திருந்தது. 1939—நவம்பர் 17ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி அவர்கள் வெளியேற வேண்டியதாற்று.

போலந்துக்கு நாடுகடத்தப்பட்ட 30,000 நாடோடிகள் பெல்ஜெக், ட்ரெப்ளிங்கா, சோபிபார், மஜ்டானெக் மரண முகாம்களில் மரணமடைந்தனர். பெல்ஜியம், நெதர்லண்ட், ஃபிரான்ஸ் நாடுகளிலிருந்து கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கானவர், ஆஸ்விட்ஜ் முகாமில் உயிரிழந்தனர்.

ஆஸ்விட்ச் முகாமின் பொறுப்பாளராக இருந்த ஹாஸ் என்பவர் தனது நினைவுக் குறிப்புகளில் கூறியுள்ளபடி முகாமிற்குக் கொண்டுவரப்பட்டவர்களில் பலர் நூறு வயதுடைய முதியவர், கருவுற்ற பெண்டிர் எண்ணற்ற சிறுவர்கள் இருந்தனர். அம் முகாமிலிருந்து தப்பித்து உயிர்வாழ்ந்த குல்கா, கிராஸ் போன்றோர் தமது "மரணத்தொழிற்சாலை" என்ற நூலில், 1944 ஜூலை 31ஆம்தேதி இரவு ஏராளமான நாடோடிகள் கொல்லப்பட்ட கொடுமையை விவரிக்கிறார்கள்.

போலந்திலும், சோவியத் யூனியனிலும் கொலை முகாம்களிலும், கிராமப் புறங்களிலும் நாடோடிகள் கொல்லப் பட்டனர். ஜெர்மனிக்கும் சோவியந் யூனியனுக்குமிடையே 1941 ஜூன் 22ஆம் தேதி போர் மூண்டது. வான் லீர், வான் பாக் வான் ருண்ட்ஸ்டட் ஆகியோரின் படைகளுக்குப் பின்னால் எஸ்எஸ் கொலைப் படைகளும் சென்றன. பால்டிக் நாடுகள், உக்ரெயின், கிரிமீயா ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கல்லறைகளாயினர். 1941 டிசம்பர் 24ஆம் தேதி சிம்விரோபோல் என்ற இடத்தில் 800 ஆண், பெண், குழந்தைகள் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். நாஜிகள் சென்ற இடமெல்லாம், நாடோடிகள் சிறைப்படுத்தப்பட்டு, நாடு கடத்தப்பட்டனர். கொல்லப்பட்டனர். யுகோஸ்லோவியாவில், ஜாய்னிஸ் காடுகளில் 1941 அக்டோபர் மாதம் யூதர்களும், நாடோடிகளும் கொல்லப் படத் தொடங்கினர். கொலைக்கள வண்டிகளில் கொண்டு செல்லப்பட்ட குழந்தைகளின் ஓலம் இன்னமும் குடியானவர்களின் செவிகளில் ஒலிக்கின்றது.

இரண்டாவது உலகப் போருக்கு முன்னர் எத்தனை நாடோடிகள் ஐரோப்பாவில் வாழ்ந்தனர் என்பதையும், அதன் பின்னர் பிழைத்தவர் எண்ணிக்கையையும் மதிப்பிடுவது கடினம். ராவோர் ஹில்பர்க் என்ற வரலாற்று ஆசிரியர் ஜெர்மனியில் 34,000 நாடோடிகள் இருந்ததாகக் கூறுகிறார். ஆனால் அதன் பின்னர் உயிர் பிழைத்திருந்தோரின் எண்ணிக்கை தெரியவில்லை. சோவியத் ரஷ்யாவில் இப் படுகொலைக்கும் பொறு

(தொடர்ச்சி III ஆம் பக்கம் பார்க்க)

மிரியாம் நோவிட்ச் இஸ்ரேல் நாட்டவர்; வார்சாவிலிருந்து தப்பி வந்த யூதர்கள் லோஹாமல் ஹேஜ்டாட் குடியிருப்பில் நிறுவிய யூத் வீரர் அருங்காட்சியகத்தின் இயக்குநர். இவ்வம்மையார் யூதரையும் நாடோடிகளையும் நாஜிகள் இனக்கொலை செய்தது பற்றி 30 ஆண்டுகளாக ஆராய்ந்து வருகிறார்.

நிழற்படங்கள் © மிரியாம் நோவிட்ச், இஸ்ரேல்

இரண்டாம் உலகப் போரின் போது நாஸிகளின் கொலை இயக்கத்திற்குப் பலியானவருள் நாடோடிகளும் ஒரு கூட்டமாவார். மேலே: கைதி முகாமிற்குப் புதிதாக வந்துள்ள நாடோடிக் கைதிகள் இன்னும் சாதாரண உடையிலிருக்கின்றனர். வலப்புறம்: இருண்ட வரிகளும், நாடோடிகளைக் குறிக்கும் கவிழ்ந்த முக்கோணமும் உள்ள சிறையுடை அணிந்த இக்கைதிகள் கொடிய ஆஷ்விட்ஸ் கைதி முகாமில் படமெடுக்கப்பட்டனர், ஜெர்மனி, பெல்ஜியம் நெதர்லாந்து, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து நாடோடிகள் இம்முகாமிற்கு அனுப்பப்பட்டனர்

டிசம்பர் 8, 1942 நாளிட்ட இக்கடிதம் நாடோடிக் கைதிகளை ஆஷ்விட்ஸுக்கு அனுப்பியதைக் குறிப்பிடுகின்றது. செக்கோஸ்லாவியாவை நாஸிகள் பிடித்த பின் ப்ரன் (ப்ருனோ) நகர நாஸி குற்றவியல் காவல் அதிகாரி எழுதிய இக்கடிதம் ப்ராக் நகர அதிகாரிக்கு அனுப்பப்பட்டது.

முகாம் கைதிகளைத் தமது பயங்கரப் பரிசோதனைகளுக்குப் பயன்படுத்திய கொடிய அவசர கால மருத்துவர் டாக்டர் மெங்கெல், ஆஷ்விட்ஸ் முகாமில் சிறைபட்ட டினா கோட்லியவை நாடோடிக் கைதிகளின் உருவங்களை வரையுமாறு வற்புறுத்தினார். இவ்வம்மையார் தீட்டிய 12 நீர்வண்ணப் படங்களுள் 7 மட்டுமே கிடைத்துள்ளன. நாடோடிப் பெண்ணின் இப்படம் அவற்றுள் ஒன்று. டினா கோட்லியப் சிறைமீட்கப்பட்டு இப்போது அமெரிக்காவில் வாழ்கின்றார்.



Konzept.

PROTEKTORATSKRIMINALPOLIZEI
KRIMINALDIREKTION BRÜNN.

Tgb.Nr. 123.834/Krim.42. Den 8.Dezember 1942.

An die

Protektoratskriminalpolizei
Kriminaldirektion

in Prag.

I.

Betrifft: Transport der Zigeuner-Vorbeugungshäftlinge ins Anhaltelager in Auschwitz.

Anlagen: 3.

In der Anlage werden die Verzeichnisse der Zigeuner, welche am 7.Dezember 1942 ins Anhaltelager in Auschwitz bei Kattowitz eingeliefert wurden, vorgelegt.

Die Vorbeugungshäftlinge wurden in Mährisch-Ostrau am 7.XII.1942 um 13.30 Uhr der Deutschen Gendarmerie übergeben.

II. I.A.

Nach Austragung zurück dem Referenten

8.12.42.

-8.XII.42

கூடாரக் களியாட்டத்திலிருந்து நாடக மேடைக்கு

[redacted]

நிக்கோலாய் ஸ்லிச்செங்கோ

"உண்மையை உணர வேண்டுமானால், ஒருவன் தன் எல்லைகளைக் கடந்து செல்ல வேண்டும்" என்று கீழை நாட்டு முனிவர் ஒருவர் கூறுகிறார். எங்கள் நாட்டின் எல்லையைக் கடந்து ரொமான் என்ற எங்கள் ரொமானி நாடகக் குழுவுடன் முதன் முறையாக வெளிநாடு சென்றபோதுதான் இக்கூற்றின உண்மையை உணர்ந்தோம். எங்களுடைய பதினைந்து நாடகங்க்ளில் ஒன்றான 'நாங்கள் நாடோடிகள்' என்ற நாடகத்தை 1982இல் தொலைவில் உள்ள ஜப்பான் நாட்டில் நடத்தச் சென்றோம். ஆறு வாரங்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் முன்ன்னியில் நிரம்பிய அரங்குகளில் நாடகம் நடித்த பின்னரே, எங்கள் உரையாடலுக்கும் பாடல்களுக்கும் மொழிபெயர்ப்பு தேவையில்லை என்பதை உணர்ந்தோம். மீண்டும் மீண்டும் நிகழ்ச்சி நடத்த மேடைகளில் எங்களை அழைத்தனர். புகழ் பெற்ற ஜப்பானியப் பாடகர் இவர்களது பாடல்கள் நமது பழைய பாரம்பரியப் பாடல்களைப் போல இருக்கின்றன. ஆனால் அவற்றைவிட, ஆழ்ந்த உணர்ச்சிப் பெருக்குடன் திகழ்கின்றன என்றார்.

என் இன்மக்கள் எப்பொழுதும், எங்கேயும், தாங்களாகவே இருப்பதை நான் மதிக்கிறேன். தங்கள் வாழ்க்கையை வரலாற்றின் பல்வேறு பாதைகளிலும் தொடர்வது; ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறை ஆற்றலையும் ஊக்கத்தையும் பெறுவது; தங்களது உயிர்நிலையைப் பாதுகாக்கப் போராடுவது; அவர்களது கற்பனை உணர்வுகள் தங்கள் முன்னோரை நினைவு கொள்ள அவர்கள் நினைவு கூறும் கவிதைகள், இவற்றையெல்லாம் கண்டு வியக்கிறேன்,

நெடுங்காலத்திற்கு முன்னர் கங்கை நதிக்கரையில் ஆற்றல் மிக்க அழகான மனித இனம் ஒன்று வாழ்ந்தது. பாடல்கள் மூலம் இன்பமூட்டவும், சிரிப்பையும் கண்ணீரையும், இன்னும் எத்தனையோ உணர்வுகளையும் எழுப்பக்கூடிய திறன்மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் பாடல்கள் இனியவை, அவர்களது நடனம் மென்மையானதாக, தாளத்திற்கேற்றதாக அமைந்திருந்தது. வளமான வாழ்வைத் தேடி அலையச் செய்யும் தவிர்க்க முடியாத உணர்வுக்கு

நாடோடி வாழ்க்கையைக் காட்டும் ''ஊர்தி வாழ்க்கை'' எனும் 3 அங்க இசை நாடகத்தில் ஒரு காட்சி. இந் நாடகத்தை 50 ஆண்டுகளுக்கு முன் மாஸ்கோவில் ரொமான் நாடோடி அரங்குக் குழுவினர் நடித்தனர்.

உணவாக அவர்களது கலைத்திறன் இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனரோ?

பிராஸ்பெர் மெரிமீயின் உற்சாகமிக்க கவலையற்ற கார்மென், விக்டர் ஹ்யூகோவின் பாத்திரமான எழில்மிக்க எமரால்டா, புஷ்கினின் எழுச்சி மிக்க ஜெம்பிரா, டால்ஸ்டாயின் கவர்ச்சிமிக்க மாஷா என்ற நாடோடி, லெஸ்கோவின் நாயகி க்ருசெங்கா என்ற அழகின் மறுபிறப்பு, இவர்களெல்லாம் வெறும் கற்பனைப் படைப்புகளல்ல, உயிரூட்டமுள்ள உண்மை மனிதர்கள்—தங்கள் முகாம்களிலிருந்தும் கூட்டத்திலிருந்தும் நேரடியாக இலக்கியத்தில் புகுந்தவர்கள்.

முதல் நாடோடி பாடற்குழுக்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் மாஸ்கோவில் உருவானது. எனினும் நெடுங்காலம் வரை நாடோடிகளின் கிராமியக் கலை யாவும் அறியாததாகவே இருந்து வந்திருக்கிறது. 1920 வரை நாடக அரங்குகளும், உணவு விடுதிகளும், நடன அரங்குகளும் நாடோடி பாடல், நடனம் என்ற பெயரில் வண்ணமயமான நிகழ்ச்சிகளை நடத்திவந்தன. இப்பொய்யான கலை ''சிகான்ட்சினா'' என்று அழைக்கப்பட்டது. நாடோடி கலைக்கு இது இழுக்கானதாக இருந்தது. இதனால் அக் கலைக்குத் தீங்கு ஏற்பட்டது.

இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதென முடிவு செய்யப்பட்டது. நாடோடி நாடகக் குழு அமைத்து, அதனைக் கலையுலகின் மையமாகவும், கல்வி முறையாகவும், புதிய வாழ்வுக்கு ஊக்கமாகவும் திகழச் செய்வதென முடிவெடுக்கப்பட்டது.

இக்குழு பரிசோதனை முறையில் 1931 ஜனவரி 24ஆம் நாள் துவக்கப்பட்டது. நடிகர்களில் பாதிக்குமேல் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். எனவே பாத்திரங்களின் வசனங்களை வாய்வழியாகத் திரும்பத் திரும்பச் சொல்லியே நினைவில் கொள்ள வேண்டியிருந்தது. நாடகக்கலை—அங்கே இல்லை. நாடகங்களை உருவாக்குவது கடினமாக இருந்தது.

''இன்றும் நாளையும்'' என்ற பல்சுவை நிகழ்ச்சியும், அலெக்ஸாண்டர் குர்மானோ என்பவரின் நூலின் அடிப்படையில் உருவான ''சக்கர வாழ்க்கை'' என்ற இசைநாடகமும்-முதலில் உருவாயின. ஓரிடத்தில் நிலைத்து வாழவேண்டும் என்ற கருத்து இந்நாடகத்தில் வலியுறுத்தப்பட்டது. ஓரிடத்தில் வாழ்வதால், சமுதாயத்தில் புதிய வாழ்க்கை, கல்வி, உலகக் கலாசாரத்தில் பங்கு—இவை போன்ற நன்மைகள் ஏற்படும் என்று வலியுறுத்தப்பட்டது. நாடோடியின் வாழ்க்கை வரலாற்றிலேயே முதல் முறையாக, அவர்கள் தம் தாய்மொழியில் மேடையில் தங்களது வாழ்க்கைக்கு முக்கியமான ஒன்றைப் பற்றி விளக்கினார்கள்.

கலைத்திறனிலும், சமுதாய வாழ்க்கைக்குப் பயனுள்ளது என்ற முறையிலும் முக்கியமான பெரும் நாடகப் படைப்பு ''போடாஸ் டி சாங்க்ரே' (இரத்த உறவு திருமணம்) என்பது. இதனை எழுதிய பெடரிகோ கார்சியா லார்கா மக்களைப் பற்றிய ஒவ்வொன்றையும் கவியுணர்வுடன் நோக்குபவர். மாஸ்கோ கலைக் கூடத்தின் தலைசிறந்த நடிகர் மிகாயில் யான்சின் என்பவர் இந்நாடகத்தை இயக்கினார். இவரது ஆசிரியர் ரொமான் நாடகக் குழுவை ஐந்து ஆண்டு காலம் இயக்கிய ஸ்டானிஸ்லாவ்ஸ்கி, இவரது தலைமையில் இனம், நாடு ஆகியவை பற்றிய கருத்துக்களை விட்டு, அறிவு பூர்வமான படைப்புகளில் நாடகக் குழுக் கருத்து செலுத்தத் தொடங்குகிறது.

உயர்ந்த இலட்சியங்களின் மீது உருவான 'போடாஸ் டி சாங்க்ரே' ஒவ்வொரு தனி, மனிதனின் வாழ்க்கையும் முக்கியமானது. எனவே அவன் சாகும் வரை தனது நிலையினின்றும் மாறாது இருக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்துகிறது. இதன் பின்னர் தோன்றிய நாடகங்களுக்கு இது முன்னோடியாக இருந்தது. பின்னர் வந்த படைப்பு ஒன்றில் லியாலியா சேர்னாலியா அற்புதமாக நடித்திருந்தாள். திருமணம் உறுதிப்படுத்தப்பட்ட காதலியாகத் தோன்றி, காதலனை இழக்கும் பாத்திரம்; கிராம மக்களின் கருத்தான 'இதயத்தின் செய்தியை ஏற்க மறுப்பதை விட இரத்தம் வடித்து இறப்பதே உயர்ந்தது' என்ற தத்துவத்தை விளக்கிய பாத்திரம். ஸ்பெயின் நாட்டுக் கவிஞர் வடித்த இந்த உயர்ந்த காவியத்துக்கு நாடோடிகளின் உலகியல் கண்ணோட்டம் உயிரூட்டியது. கலை அரங்கின் நண்பர்களின் உதவியுடன், நடிகர்கள் பாத்திரங்களின் தன்மையை — உளவியல் பூர்வமான நோக்கத்தை உணர்ந்து கொண்டார்

ஸோட்டா டோபோல்கின் எழுதிய ''தி பிரதர்ஸ்'' எனும் நாடகம் நல்ல மாட்வி, தீய எஃபிம் ஆகிய இரு நாடோடி சகோதரர்களைப்பற்றியது. ரொமான் அரங்கு தயாரித்த இந்நாடகக் காட்சியில் நாடோடிகளுக்கு எழுத்தறிவிக்க வந்த மாஷாவை எஃபிம் கொல்ல முயல்கிறான்.

நிழற்படம் © ரொமேன் திரையரங்குக் காட்சியகம், மாஸ்கோ

கள். கார்சியாலார்காவின் படைப்பில் மக்களின் உண்மையான தன்மை. வரலாற்றின் ஆழத்திலிருந்து வெளிக் கொணரப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரஷ்யகாவியங்களும், மற்றப்டைப்புகளும் வெளிவரத் தொடங்கின. வெஸ்கோவின் ''பரவசமுற்ற நாடோடி'' என்பதைத் தழுவிய ''க்ரூஷெங்கா'', கார்கியின் ''மகார் சூத்ரா', குப்ரினின் ''ஒலெஸ்ஸியா'', உக்ரெயின் எழுத்தாளர் முகாயில் ஸ்டாரிடிஸ் எழுதிய ''ஆஜா என்ற நாடோடி'', மெரிமீ எழுதிய கார்மென், செர்வான்டேவைத் தழுவி எழுதப்பட்ட ''சிறிய நாடோடி'', விக்டர் ஹ்யூகோவின் ''எமரால்டா'' மற்றும் பல நாடகங்கள் மேடையேறின.

இத்நாடகங்களால் தேசிய அறிஞர் குழு தோன்றியது. அவர்களது முதல் பல்கலைக்கழகம் நாடோடி நாடகக்குழு எனலாம். இக்குழு பல நாடக ஆசிரியர்களுக்கும், கவிஞர்களுக்கும் பயிற்சிகளனாக அமைத்தது.

எங்கள் நாடகப் படைப்புகளில் எங்கள் இனத்தவரின் தோற்றம், வாழ்க்கை நோக்கம் ஆகியவற்றின் மர்மமும், மனிதாபிமானமும், நல்லெண்ணமும் நிரம்பியிருந்தன. நாங்கள் அனைத்துலக நோக்குடன், மனிதனின் தொழில் இந்த அழகிய, ஆனால் பல மற்ற உலகம் சீர்கெடாமல் இருக்க அவன் ஆற்றவேண்டிய பணி, நன்மை, தீமைகள், நியாயமான மற்றவை, இவற்றையெல்லாம் எங்கள் படைப்புகளில் காணலாம். எந்த ''நாடகக் கருத்தும்'' இவற்றைவே வலியுறுத்துகின்றன.

எங்களது நாடோடி நாடகக்குழுவிற்கென்று சிறப்புப்பணி உண்டு. உலக முழுவதிலும் வாழ்கின்ற கோடிக்கணக்கான நாடோடி இனத்தவரில், சோவியத் நாடோடிகளான 200,000 பேருக்கு மட்டுமே தொழில்முறை நாடகமேடை இருந்தது. எனவே மனித இனத்தின் ஒரு பகுதியாக எங்கள் இனம் இருப்பதை நினைவிலிருத்தி, எங்களது கலைகளையும் பண்பாட்டின் தனித்தன்மையை பேணிக் காக்கும் பொறுப்பு எங்களைச் சார்ந்ததே.

நாடோடி நாடகக்குழுவின் பணி நாடகங்களை மேடையேற்றுவது மட்டுமல்ல. மக்களின் உள்ளத்து உணர்வுகளைத் தட்டி எழுப்பவும் வேண்டும். இவ்வுணர்வுகளால், நாடோடி தனது வாழ்க்கை, தான் இசைக்கும் கிடார் இவற்றைப் பற்றி மட்டும் ஆராயாமல், ஹாம்லெட்டைப் போல 'வாழ்வதா வேண்டாமா' என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறான்.

கடந்த காலத்தின் கட்டுப்பாடற்ற உணர்ச்சிகளையும், நவீன கலைப் பாணியின் சிக்கனத்தையும், இணைக்க நாங்கள் முயல்கிறோம். ஒரு நடிகன், இயக்குநர் என்ற முறையில் நான் வரலாற்று வேகத்தில் அடித்து வரப்பட்ட தனிப்பட்ட ஒரு முடிவுக்காகப் பாடுபடவில்லை. எங்கள் காலம், தீரமிக்க கவிதைகளிலும் மனித இனத்தின் இலட்சியங்களிலும் நிரம்பியுள்ளது. நாங்கள் அடைந்தவற்றையும், இழந்தவற்றையும்

(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

நிக்கோலாய் அலெக்ஸேய்விச் ஸ்விச்செங்கோ ரஷ்ய நடிகரும் பாடகரும் ஆவார். ரொமென் நாடோடி அரங்கில் 60-க்கு மேற்பட்ட பாத்திரங்களில் நடித்துள்ளார். 1967 முதல் அவ்வரங்கின் தலைமை இயக்குநர். லெஸ்கோவின் ''தி என்சாட்டெட் ட்ராவலர்' ஐத் தழுவிய 'குருசெங்கா', ரோம் லெபதேவுடன் இணைந்து எழுதி இசையமைத்த 'வி தி ஜிப்ஸீஸ்' எனும் இசை நாடகம் இவர் தயாரித்தவற்றுள் சிலவாகும். 1980இல் 'பார்ன் பை தி கேம்ப்ஃபயர்' எனும் தன் வரலாற்றை மாஸ்கோவில் வெளியிட்டார். இதில் ரொமென் அரங்கை நிறுவியவர்களின் வாழ்க்கையையும் ஆன்ம விழைவையும் விளக்குகிறார்.

ரஷ்ய அரங்கில் புகழ்மிகு பாத்திரமான வையாலியா செர்னாயா, 1930களில் ரொமான் அரங்கினர் நடித்த ப்ராஸ்பெர் மெரிமீயின் கதைத் தழுவலில் நடித்த முதல் நடிகை.

நிழற்படம் © ரொமேன் திரையரங்குக் காட்சியகம். மாஸ்கோ

ஃப்ளாமெங்கோ பாடல்கள், ஆஃப்ரிக்க, காஸ்டிலிய இயல்புகள் கலந்த ஸ்பானிய நாட்டுப் பாடல்களின் தழுவலாகும். இசைக்கருவிகள் பயன்படுத்தப்படாத முற்காலப் பாடல்கள் நாட்டுப் பாடல்களைவிட உணர்ச்சி மிகுந்திருந்தன. 19ஆம் நூற்றாண்டில்தான் யாழ் சில பாடல்களில் பயன்படுத்தப்பட்டது. இதனால் மகிழ்ச்சி, துயரம், பெருமிதம் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பல்வேறு இசைநயங்கள் ஃப்ளாமெங்கோவில் தோன்றின. வலப்புறம்: காமரோன் தெல்லா இஸ்லா இசை பாட, டோமாடிட்டோ யாழ் இசைக்கிறார். இருவரும் அண்டலூசியா நாடோடிகள்.

ஃப்ளாமெங்கோ

'... வாயில் குருதிச் சுவை'

ஃபெலிக்ஸ கிராந்த்

ஸ்பானிய நாடோடிகளின் வரலாறு, ஐந்நூறு ஆண்டுகால இடையறா விழிப்பு நிலையின் வரலாறாகும். அது பரம்பரை நாடோடிகளுக்கும், அவர்களை ஐயுற்ற நிலையான சமுதாயத்திற்குமிடையிலான முரண்பாட்டின் கதையுமாகும். அண்டலூசியாவின் பண்டைய இசை மரபிலிருந்து தோன்றி, அதுவரைக் கண்டுபிடிக்கப்பட்டிராத சோகத்தையும் ஆறுதலையும், மனிதனின் வேதனையையும், நிறைவையும், முழுமையாக உள்ளடக்கிய மிக இனிய இசைமரபாக் வளர்ச்சியடைந்த ''ஃப்ளாமெங்கோ'' என்ற ஸ்பானிய நாடோடி இசை வாயிலாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளியிடப்பட்ட ஓர் ஆழ்துயரின் வரலாறும் இதுவாகும். ஃப்ளாமெங்கோ பாடலில், ஃப்ளாமெங்கோ கிடார் இசையில், ஃப்ளர்மெங்கோ நடனங்களின் துல்லியமான மெய்ப்பாட்டுச் சந்தங்களில், கலையாகப் படைக்கப்பட்டுள்ள

மெய்ப்படம் © [illegible]ஜேக் போர்செல், ஃபெலிக்ஸ் கிராந்தின் தனித்திரட்டு.

உலகப் புகழ்மிகு ஒரு நாடோடிச் சமுதாயம் ஸ்பெயினில் கிரனடாவிலுள்ள சாக்ரமாந்த் குகைகளில் வாழ்கின்றது. கடந்த காலத்தில் கிரனடா நாடோடிகள் அராபியச் சிறுபான்மையினருடன் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட உணர்வுடன் வாழ்ந்தனர். அவர்களைப் பார்த்து ஸ்பானியக் கவிஞரான ஃபெடரிக்கோ கார்சியா லோர்கா தமது அரும் படைப்புகளை 'ரொமான்செரோ கித்தானோ' (நாடோடிப் பாடல்கள்) 1928, 'போயமாஸ் தெல் காந்த் ஜோந்தோ' (ஜோந்தோ பாடல்களிலிருந்து கவிதைகள்) 1931, ஆகிய கவிதைகளை இயற்றினார். வலப்புறம்: இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் நிழற்படமெடுக்கப்பட்ட சாக்ரமாந்த் நாடோடிகள்.

இன்றைய அவல வாழ்வின் வேதனையிலும் பெருமையிலும் நெடிய தொன்மையின் சோகக் குரல் எதிரொலிக்கக் காண்கின்றோம்.

உலகின் மற்றப் பகுதியைப் போலவே ஸ்பெயினிலும் நாடோடிகள் அமைதியாக வாழ முடியவில்லை. ஐரோப்பா முழுவதிலும் 15ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே நாடோடி மக்கள் அடக்கியொடுக்கப்பட்டு வந்தனர். ஜெர்மனியில் நாஜிகளால் இனப்படுகொலை செய்யப்பட்ட யூதர்களை விட நாடோடிகளின் எண்ணிக்கையே அதிகம். இத்தகைய அடக்குமுறையும், வறுமையும் இம்மக்களின் நினைவில் நீங்காத சோக முத்திரையைப் பதித்து, இன்றைய ஐரோப்பிய இசைப்பாரம்பரியத்தின் பகுதியாக அமைந்துள்ள இசைவடிவங்களையும் நடனங்களையும் உருவாக்கத் தூண்டின. விறுவிறுப்பான ரஷிய நடனங்களும், ருமேனிய வயலின் இசையின் அவலத் தொனியும், மாகியார்களின் இன்னிசையும். தங்களுடைய சீர்மைக்கு நாடோடிச் சமுதாயங்களின் சந்த நயத்திற்கும், எல்லையற்ற மனத்துயருக்கும் கடமைப்பட்டுள்ளன. மனிதனின் கூர்மதி, எப்போதுமே துன்பத்திற்குக் கடமைப்பட்டுள்ளது. ஸ்பெயினுக்கும் ஆண்டலூசியாவுக்கும் உலகப்புகழ் தேடித் தந்துள்ள ஃப்ளாமெங்கோ இசையானது, நாடோடிகளின் துன்பங்களுடன் தொடர்புடைய பண்டைய ஸ்பானிய இசை மரபின் விளைவாகத் தோன்றியதாகும்.

இந்தத் துன்பம் எப்போது தோன்றியதெனத் திட்டமாகத் தெரியவில்லை. நாடோடிகள் 5000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் இந்துக்களின் மத்தியில் வாழ்ந்து வந்தார்கள். அப்போது அவர்களின் பண்பாடு முன்னேறியதாக இருந்தது. அங்கு ஏற்கெனவே சாதி முறையின் காரணமாக இவர்கள் சொந்த நாட்டிலேயே நாடோடிகளாக வாழ்ந்து வந்தனர். ஆரியர்களின் படையெடுப்பாலும், பின்னர் முஸ்லிம்களின் படையெடுப்பாலும்இவர்கள் தாயகத்திலிருந்து வெளியேறலானார்கள். இந்த வெளியேற்றம் பல நூற்றாண்டுகள் நீடித்தது.

திக்கு திசை தெரியாமல் அலைந்து வறுமையிலும் அச்சத்திலும் உழன்ற பிறகு, முதலாவது நாடோடி மரபினர் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐபீரியத் தீபகற்பம் வழியாக ஸ்பெயினுக்குள் நுழைந்தனர். ஆரகான் அரசன் ஐந்தாம் அல்ஃபோன்சோ 1425 ஜனவரியில் சிறிய எகிப்தின் ஜானும் அவரது மக்களும் தம் நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கும்படி தம் அதிகாரிகளுக்கு ஆணையிட்டான். ஸ்பெயினுக்குள் நாடோடிகள் நுழைவதற்கு அனுமதித்த முதலாவது அரசு ஆவணம் இதுவாகும். இதற்கு நான்கு மாதங்களுக்குப் பிறகு, 1425 மே மாதத்தில், எகிப்தின் தாமசும் அவரது மக்களும் பத்திரமாகத் தமது நாட்டுக்குள் வருவதற்கு அனுமதிக்கும் மற்றொரு ஆணையை அல்ஃபோன்சோ பிறப்பித்தான்.

சிறிய எகிப்தின் கோமகன் ஆண்ட்ரூ, பீட்டர், மார்ட்டின், தாமஸ் ஆகிய எகிப்தியக் 'கோமான்கள்' ஆகியோர் ஸ்பெயினுக்குள் நுழையவும், நாட்டில் எங்கும் செல்லவும் அதிகாரமளிக்கிற ஆணையொன்றை தம் கணவன் ஐந்தாம் அல்ஃபோன்சோவின் சார்பில் அரசி டோனா மாரியாடா காஸ்டில்லா 1447 ஜூன் 19இல் பிறப்பித்தாள். இதைத் தொடர்ந்து மேலும் பல குழுமங்கள் இங்கு வந்தன. சிறிது காலம் இந்த நாடோடிகள் ஆட்சியாளர்களின் ஆதரவுடன் ஐபீரியப் பகுதிகளில் அலைந்து கொண்டிருந்தார்கள். சிலர் தங்கள் ரோமுக்கும், சாண்டியாகோ-டி-கம்போஸ்டெலாவுக்கு யாத்திரை சென்று வந்ததாகக் கூறிக்கொண்டார்கள். இது அவர்கள் மீது அதிகாரிகளுக்குப் பரிவுணர்வை ஏற்படுத்தியது. மக்களும் அவர்களிடம் சகிப்புணர்வுடன் நடந்து கொண்டார்கள். ஆனால், நாடோடிகள் கையாண்ட தந்திரம் நெடுங்காலம் நீடிக்கவில்லை.

நாடோடிகள் புனைந்துகொண்ட 'கோமகன்' பட்டங்கள் எல்லாம் போலியானவை அல்லது விலைக்கு வாங்கப்பட்டவை, என்பது அம்பலமாகியது. புனித யாத்திரை சென்றதாகச் சொன்னதெல்லாம் மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காகவே என்பதும் தெரிய வந்தது. புனித யாத்திரை நோன்பிருத்தல், பெரிய பட்டங்கள், போப்பாண்டவரைப் புகழ்தல் ஆகியவை அன்றைய ஐரோப்பாவில், குறிப்பாக ஸ்பெயினில் மதிப்புக்குரிய அம்சங்களாக விளங்கின. எனவே, நெடுஞ்சாலைகளில் பயணஞ் செய்வதற்கும், நகரங்கள், கிராமங்கள் வழியாக மறைந்து செல்வதற்கும் ஒருசாதனமாக இவற்றை நாடோடிகள் பயன்படுத்திக் கொண்டனர்.

எனினும், நாடோடிகளின் உண்மை இயல்புகள் அம்பலமானதும், அவர்களை மக்கள் வெறுக்கத் தொடங்கினர். நாடோடிகள் என எப்பொழுதும் இடம் பெயர்ந்து கொண்டேயிருக்கிறார்கள் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. நாடோடிகளின் பணிவு வெறும் நடிப்பு எனக் கருதப்பட்டது. அவர்களுடைய மொழி புரியாததாக இருந்தது. அவர்களின் ஆடைகள் நூதனமாக இருந்தன. அவர்களுடைய நடவடிக்கைகள் ஐயத்திற்கிடமாயும், அச்சுறுத்துபவையாயும் இருந்தன. அக்காலத்துப் பிடிவாத கிறித்துவர்களால், இவர்களின் மந்திர சூனியங்களைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தட்பவெப்பக் கொடுமையைப் பொருட்படுத்தாத இந்த நாடோடிகளின் பழக்க வழக்கங்கள், இயற்கையின் கோபதாபங்களை நம்பி வாழும் உழவர்களுக்கு அச்சமூட்டின. இவர்களின் கரடி வித்தையும் நடனமாடும் ஆடுகளும் இவர்கள் சோதிடம் கூறுவதும் நகர மக்களுக்கும், கிராம மக்களுக்கும் வேடிக்கையாக இருந்தபோதிலும், நாடோடிகளை அவர்கள் பூதங்களாகக் கருதினார்கள். ஆண்டு முழுவதும் அரும்பாடுபட்டு உழைத்து, மிகுந்த வரி செலுத்தும் மக்களுக்கு, கோழியையும், துப்பட்டியையும், கழுதையையும் திருடிச்செல்லும் நாடோடிகளின் செய்கைகள் அநாகரிகமாகத் தோன்றின.

ஒன்று நாடோடிப் பண்பாடாகவும், இன்னொன்று நிலைத்த பண்பாடாகவும் இருந்த முற்றிலும் வேறுபட்ட இரு பண்பாடுகளுக்கிடையிலான நல்லுறவு முறிவுற்றது. ஒரு தரப்பினர், வலிமையைக் கையாண்டனர். இன்னொரு தரப்பினர் தந்திரத்தைக் கையாண்டனர். நாடோடிகள் கையாண்ட சூழ்ச்சிதான், நிலைபெற்ற பெரும்பான்மைச் சமுதாயத்தின் பண்பாடு அவர்களை ஒதுக்கித் தள்ளும்படி செய்தது. இந்த வெறுப்பு, நாடோடிகளின் ஆத்திரத்தைத் தூண்டியது. இரு தரப்பினருக்குமிடையிலான இடைவெளி விரிவடைந்தது. ஸ்பெயினிலிருந்து நாடோடிகளை வெளியேற்றுவதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டன. நாடோடிகள் நாடோடி வாழ்க்கை நடத்துவதைத் தடைசெய்து 1499 ஜனவரியில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையை மீறுபவர்களுக்கு நாடு கடத்

தல், சவுக்கடி, காதுகளை அறுத்தல், ஆயுட்கால அடிமைத்தனம் போன்ற கடுந் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

இந்த ஆணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முன்னூறு ஆண்டு காலம் நடைமுறையிலிருந்த நாடோடிகள் எதிர்ப்புச் சட்டங்களில் இது முதலாவதாகும். இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது முதல் 1783 செப்டெம்பர் 19இல் "நாடோடிகள் ஊர் சுற்றுவதைத் தடுத்துத்தண்டிப்பதற்காக' மூன்றாம் சார்லஸ் ஓர் ஆணை பிறப்பித்தது வரையில், ஸ்பானிய நாடோடிகளுக்குக் கடுந் தண்டனைகள் விதிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. நாடோடிகள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதற்காகவோ கால்நடைகளைத் திருடியதற்காகவோ, பிற சட்ட விரோத நடவடிக்கைகளுக்காகவோ இந்தத் தண்டனைகள் எப்பொழுதும் விதிக்கப்படவில்லை. பல சமயங்களில், கீழ்ப்படியாமைக்காகவும், கிராமங்களில் நுழைந்ததற்காகவும், நகரங்களை விட்டு ஓடியதற்காகவும். ஒதுக்குப் புறங்களிலும் சாலையோரங்களிலும் குடியமர்ந்ததற்காகவும், தங்கள் சொந்த மொழியில் பேசியதற் காகவும், சொந்த ஆடைகளை அணிந்தத்ற்காகவும், சோதிடம் கூறியதற்காகவும் மனித இறைச்சி உண்டதாகப் பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரிலும் இந்தத் தண்டனைகள் விதிக்கப்பட்டன. இவ்வாறு நாடோடிகளைத் தண்டித்ததற்கான காரணங்கள் பல சமயங்களில் தெளிவற்றவையாகவும், சில சமயங்களில் பொய்யானவையாகவும் இருந்தன. நாடோடிகளின் வாழ்க்கை முறையானது அவர்கள் கீழ்ப்படியாதவர்கள் என்ற எண்

நிழற்படம் © ஃபெலிக்ஸ் கிராந்தின் தனித்திரட்டு

நிழற்படம் © ஃபெலிக்ஸ் கிராந்தின் தனித்திரட்டு

இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் எடுக்கப்பெற்ற அண்டலூசிய நாடோடிப் பெண்ணின் நிழற்படம்.

19ஆம் நூற்றாண்டில் அண்டலூசிய நாடோடிகளின் ஃப்ளாமெங்கோ கலை குரலும், யாழும், உடல் அசைவும் சமநிலையாகக் கலந்த கலையாக ஆனது. சொற்கள், இசை, நடனம், கலந்து வீறார்ந்த, மறைவான உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஓர் உயர் கலை பிறந்தது. கீழே: ஸ்பெயினில் கிரனடாவிலுள்ள விடுதியில் நாடோடி நடன மாது.

ணத்தைத் தோற்றுவித்ததால் ஏற்பட்ட வெறுப்புணர்வால் அவர்களுக்கு இத் தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் தண்டனைக்குரிய குற்றங்கள் தெளிவாகவே கூறப்பட்டுள்ளன. நாடோடிகள் நாடோடி வாழ்க்கை நடத்துவதற்காகவும், அவர்களுடைய மொழியைப் பேசுவதற்காகவும், தங்கள் பழக்க வழக்கங்களைப் பயிலுவதற்காகவும், ஊர் ஊராகச் சென்று கைவினை புரிவதற்காகவும், சுருங்கக்கூறின் அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்திற்காகவும் தண்டிக்கப்பட்டனர். அவர்கள் சவுக்கடிபட்டனர். துடுப்பு வலிக்கும் அடிமைகளாக அவதியுற்று மாண்டனர். இவர்கள் சிறு நகரங்களில் குடியிருக்க வேண்டுமென ஒரு சட்டம் கட்டாயப்படுத்தியது. இன்னொரு சட்டம், இவர்கள் சிறு நகரங்களில் குடியிருப்பதைத்

(தொடர்ச்சி IIஆம் பக்கம் பார்க்க)

ஃபெலிக்ஸ் கிராந்த் ஸ்பானிய கவிஞர் எழுத்தாளர்; கட்டுரையாளர், காட்ரிடில் வெளியாகும் 'குவாடெர்னாஸ் ஹிஸ்பானோ அமெரிக்கானோஸ்' (ஹிஸ்பானோ அமெரிக்கக் குறிப்புகள்) எனும் இதழின் ஆசிரியர். ஸ்பானிய தேசிய கவிதைப் பரிசு, கியூபாவின் 'காசா தெ லாஸ் அமெரிக்காஸ் பரிசு உட்பட பல இலக்கியப் பரிசுகள் பெற்றுள்ளார். 'லூகார் சினியெஸ்த்ரோ எஸ்த் மோந்தோ, கபாலெரோஸ் (என் தலைவர்களே, உலகம் கொடிய இடம்), 'மெமோரியா தெல் ஃப்ளாமெங்கோ' (ஃப்ளாமெங்கோ நினைவுகள்) 1980 எனும் தலைப்பில் இரு கட்டுரைத் தொகுதிகள் உட்பட, ஸ்பானிய நாடோடிகளின் நாடகங்கள், பண்பாடு பற்றிய பல நூல்கள் எழுதியுள்ளார்.

நிழற்படம்: எச். டபிள்யூ சில்வெஸ்டர் ... ஃபோ பாரிஸ்

நிழற்படம் © ஓ பாப்புலர், பிரேசில்

பிரேசில் நாடோடிகள்

ஆத்திக்கோ விலாஸ்–போஸ் தா மோத்தா

16ஆம் நூற்றாண்டு முதலே பிரேசில் நாட்டில் நாடோடிகள் இருந்துவந்துள்ள போதிலும், அவர்களைப்பற்றிய விரிவான ஆராய்ச்சி நடைபெறவில்லை. ஆயினும் தொடக்க கால அறிஞர்களின் நூல்களின் வாயிலாக அவர்களின் வரலாற்றை அறியலாம். பிரேசில் நாட்டு வளர்ச்சியின் முக்கிய நிலைகளின்போது அவர்கள் அங்கிருந்ததாக அந்நூல்கள் காட்டுகின்றன. சில நாடோடிகள் சாவ் பாவ்லோ பகுதியிலிருந்து வந்த "பாண்டெய்ராக்கள்" எனும் ஆய்வு அல்லது வீரப் பயணிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிகின்றது. இவர்கள் தங்கம், விலையுயர்ந்த மணிக்கற்கள் ஆகியவற்றை நாடி உள்நாட்டிற்குள் பயணம் செய்தனர். நீக்ரோ அடிமை வாணிபத்திலும் நாடோடிகள் ஈடுபட்டனர். பிரேசில் பேரரசர் முதலாம் பெட்ரோவின் அரசவை ஓவியரான ஃபிரஞ்சு கலைஞர் ஷான் பாப்திஸ்த் தெப்ர் தீட்டிய 19ஆம் நூற்றாண்டு ஓவியம் ரயோடி ஜெனீரோவிலிருந்த நாடோடி அடிமை வாணிகச் செல்வரின் வீட்டைக் காட்டுகிறது.

1808இல் போர்ச்சுக்கல் மன்னர் 6ஆம் ஜானும் அவருடைய குடும்பத்தினரும் ஃபிரெஞ்சுப் படையெடுப்பிலிருந்து தப்பியோடி பிரேசிலில் குடியேறியபோது பாஹியோ, பெர்னாம்புக்கோ, ரயோடி ஜெனீரோ, மினாஸ் ஜெராய்ஸ் பகுதிகளில் ஏற்கெனவே நாடோடிச் சமூகங்கள் வாழ்ந்துவந்தன.

சமய நீதிமன்றத் தண்டனையின் பயனாக நாடோடிகள் தொடக்கத்தில் பிரேசிலுக்குச் சென்றனர். அந்நீதிமன்றம் அவர்களைச் சமூக விரோதமான மறுப்புச் சமயவாதிகளாகவும் மந்திரவாதிகளாகவும் கருதியது. பிரேசிலுக்கு நாடுகடத்தியது அவர்களுக்கு வழங்கப்பட்ட கடுந்தண்டனைகளுள் ஒன்றாகும். அவ்வாறு பிரேசிலுக்கு நாடுகடத்தப்பட்ட முதல் நாடோடியான அன்டோனியோ டி டாரஸ் 1574இல் அங்கு போய்ச் சேர்ந்தார். அந்நிய ஆட்சிக் கால முழுவதும் நாடோடிகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு வந்தன. அவர்களுடைய வாழ்க்கையும் கட்டுப்படுத்தப்பட்டு வந்தன. அவர்களுடைய மொழி, உடை சார்ந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பெற்றன.

16,18ஆம் நூற்றாண்டுகளுக்கிடையே பிரேசிலில் குடியேறிய நாடோடிகள் இரு வகைப்படுவர் என வல்லுநர்கள் கருதுகின்றனர். போர்ச்சுக்களிலிருந்து வந்த பிரேசில் நாடோடிகளெனும் 'கலோன்கள்' ஒரு வகையினர். ஐபீரிய தீபகற்பத்தைத் தவிர வேறு இடங்களிலிருந்து வந்து, 1822இல் போர்ச்சுக்கல் விடுதலைபெற்ற பிறகுஅங்கு குடியேறிய 'ரோம்கள்' இரண்டாம் வகையினர். 20-ஆம் நூற்றாண்டில் பிரேசிலில் குடியேறிய நாடோடிகள் பெரும்பாலும் பால்கன் தீபகற்பம் அல்லது மத்திய ஐரோப்பாவிலிருந்து வந்தனர். பலர் மெக்ஸிக்கோ வழியாக வந்தனர். பிறர் பிரேசிலுக்கும் அண்டை நாடுகளுக்கும் பரவுமுன் ரயோடிலா ப்ளாட்டா பகுதியை அடைந்தனர். மற்றும் பிறர் பிரேசில் துறைமுகங்களில் நேராக வந்து இறங்கினர்.

'கலோன்கள்' தம் வழக்கங்கள் சிலவற்றைப் பேணிவந்துள்ளனர். ஆயினும் இவற்றை ஆராய்வது அரிது. ஏனெனில் 'கலோன்கள்' பெரும்பாலும் தாம் நாடோடிகள் என்பதை மறைக்க முனைகின்றனர். ரயோடி ஜெனீரோவில் அவர்கள் தம்மைப் போர்ச்சுகளிலிருந்து வந்தவர்களாகக் காட்டிக்கொள்கின்றனர். அவர்களில் பலர் சிறு, அல்லது பெரும் வணிகர்களாகவும், மது அருந்தும் மனைகளிலும், கடைகளிலும், உணவகங்களிலும், பணிபுரிவோராகவும், வாடகை உந்து ஓட்டிகளாகவும் இருக்கின்றனர். 'ரோம்கள்' படுக்கைவிரிப்புகள், கம்பளங்கள், துணி, பழைய உந்துவண்டிகள் போன்றவற்றை விற்போராகவும், மருத்துவமனை, உணவகம், போர்வீரர் குடியிருப்பு ஆகிய இடங்களில் சமையல் கலங்களைப் பழுதுபார்ப்போராகவும்

குதிரை சவாரி செய்யும் நாடோடிக் குடும்பங்கள் பிரேசிலின் உட்பகுதியில் உள்ளன. இவர்கள் குதிரை சவாரி யையே எப்போதும் பயன்படுத்தினரா, நிலத்தின் இயல்புக்கேற்ப அல்லது ஆய்வுப் பணிகளுடன் சேர்ந்ததினால் தமது மரபான வண்டிகளை விட்டு விட் டனரா என்று தெரியவில்லை.

கால்டொரஷ், மக்வாயா ஆகிய இரு முக்கிய நாடோடிக் கூட்டத்தினர் இரு வருக்கு மத்திய பிரேசிலில் திருமணக் கொண்டாட்டம். கால்டெராஷ் தாம் நாடோடிகளின் தனித்தன்மையைக் காத்து வருவதாகக் கருதுகின்றனர். மக்வாயாக்கள் நாடோடி வாழ்வை விட்டுவிட்டனர்.

நிழற்படம் © ஓ பாப்புலர், பிரேசில்

போர்ச்சுக்கீசியரும், ஸ்பானியரும் முதலில் தென் அமெரிக்காவுக்கு வந்த போதே நாடோடிகளும் அங்கு வந்தனர். பிறகு அந்நிய ஆட்சிக்காலத்தில் மெக்ஸிக்கோவும் லீமாவும் எருதுச் சண்டை மையங்களாயின. அவை எருதுச் சண்டை வீரரையும நாடோடி இசை வாணரையும் நடனமாடுவோரையும் ஈர்த்தன. இவர்கள் பிறகு அண்மை நாடுகளுக்குச் சென்றனர். 1918இல் ஹவானாவில் எடுத்த இந்நிழற்படத்தில் கியூபா நடன மாதருடன் காணப்படும் நாடோடிகள் மெக்ஸிக்கோவிலிருந்து வந்திருக்கலாம்.

19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடோடிகள் தாமாகவே அட்லாண்டிக் கைக் கடந்து செல்லத் தொடங்கினர், பெரும்பாலும் அவர்கள் மத்திய, தென் அமெரிக்காவுக்குச் சென்றனர். ஆனால் சில கூட்டத்தினர் கனடாவிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும், அலாஸ்காவிலும் குடியேறி. அங்கே தங்கி வாழத் தொடங்கினர். கனடாவிலுள்ள போப்ரே புனித அன்னாள் ஆலயத்திற்கு யாத்திரை செல்லும் வழியில் ஓர் அமெரிக்க நாடோடிக் குடும்பம் தங்கியிருப்பதைக் கீழே வலப்புறப் படத்தில் காணலாம்.

இருக்கின்றனர். அவர்கள் புகழ்மிகு செம்புக் கொல்லராகவும் விளங்குகின்றனர்.

பிரேசில் நாடோடிகள் பெரும்பாலும் கீழ்க்கண்டவகைகளைச்சேர்ந்தவர்கள்: 'கால்டெராஷ்' என்போர் தம்மை உயர் குடியினராகவும், நாடோடிகளின் பண்பாட்டைக் காப்போராகவும் கருதுகின்றனர். 'மாட்சுவையா' என்போர் அலைந்து திரிவதை விட்டுவிட்டு, மறைமுக நாடோடி வாழ்க்கை வாழ்வதால் தம் தனித்தன்மையை இழந்து வருகின்றனர். பெரும்பாலும் ருமேனியாவிலிருந்து வந்த 'ருடாரி'கள் சாவ் பாவ்லோவிலும், ரயோடி ஜெனீரோவிலும் செழிப்பாக வாழ்கின்றனர். கீரிஸிலும் துருக்கியிலுமிருந்து வந்த 'ஹோராஹானே'க்கள் தெருவில் விற்றுத்திரிவோராக இருக்கின்றனர். நலிந்துவரும் பண்பாடுடைய 'லோவாரா'க்கள் இத்தாலியிலிருந்து வந்து குடியேறியவராகக் காட்டிக்கொள்கின்றனர்.

பிரேசிலில் வாழும் நாடோடிகளின் எண்ணிக்கை திட்டமாகத் தெரியவில்லை. 60,000 என மதிப்பிடப்பட்ட போதிலும், சிலர் அது 1,00,000 அடி இருக்கலாமென நம்புகின்றனர். பிரேசில் புவியியல், புள்ளியியல் நிலையத்தில் திட்டவட்டமான புள்ளி விவரங்கள் இல்லை. ஏனெனில் குடிக்கணக்கின் போது நாடோடிகள் பொதுவாகத் தம்மை பிரேசில் நாட்டவரென்றோ, பிற நாட்டினத்தவரென்றோ கூறுகின்றனர். அவர்கள் அனைவரும் தம் சொந்த மொழியான ரொமானி (அதை அவர்கள் 'ரொமானெஸ்' என்பர்), போர்ச்சுக்கீசிய, ஸ்பானிய மொழிகள் மூன்றும் பேசுகின்றனர்.

தம் பண்பாட்டு இயல்புகளை முற்றிலும் பின்பற்றுவோர் எழுத்தறிவற்றோராகவே இருக்கின்றனர். அதற்கு மாறாக "மறைமுக நாடோடிகள்" எழுத்தறிவு பெறுவதுபற்றியும், தொழில் நுட்பம் சாரா வாழக்கைத் தொழிலில் ஈடுபடுவது பற்றியும் பெருமைப்படுகின்றனர். அவர்களுள் சட்டம் பயின்றோரும், மருத்துவரும், பல் மருத்துவரும், விளையாட்டு வீரரும், வானொலிப் பாடகரும், தொலைக்காட்சியில் பங்கு பெறுவோரும், கால்பந்து வீரரும் உள்ளனர். பெரும்பாலும் இவர்கள் தாம் யாரென்பதைத் தெரிவிப்பதில்லை.

"காயோ'க்கள் (நாடோடி அல்லாதார்) நாடோடி வாழ்க்கைப்பற்றியும், அவர்களின் உலக நோக்குபற்றியும் அறிவதில்லை. நாடோடிகளுக்கும் நாடோடி அல்லாதாருக்குமிடையே ஒருவரொருவர் புரிந்துகொள்வதைத்

(தொடர்ச்சி III ஆம் பக்கம் பார்க்க)

ஆத்திக்கோ வியாஸ் - போஸ் தா மோத்தா பிரேசில் நாட்டவர்; கோயாஸ் கூட்டாட்சிப் பல்கலைக் கழகத்தில் வாய்மொழி இலக்கிய, ஐபெரோ-அமெரிக்க கிராமிய இலக்கியப் பேராசிரியர். பொதுமக்கள் பண்பாடு, நாடோடிகள், பிற சிறுபான்மையினரின் பிரச்சினைகள் ஆகியவற்றில் வல்லுநர். பாரிஸிலுள்ள நாடோடி இயல் நிலைய உறுப்பினர். 'பிரேசிலில் நாடோடி இயல் வரலாற்றுக்குத் தொண்டு' எனும் நூலின் ஆசிரியர்.

நிழற்படம் ரோஜர் வியோலே, பாரிஸ்

நிழற்படம் எச். டபிள்யூ. சில்வெஸ்டர், © ரா ஃபோ, பாரிஸ்

நாடோடிகள்பற்றி மேலும் படிக்கவேண்டியவை

பார்டல்ஸ், இ. எத் ப்ரன், ஜி. ''ஜிப்ஸீஸ் இன் டென்மார்க்'', கோபன்ஹேகன், 1943.

பார்த்தேலெமி, ஏ 'ரூத் தே கித்தானி' லே செந்தூரியோன், பாரிஸ் 1962.

பெலோன், பி. லே ஒப்செர்வாசியோன் தெ ப்ளூசியர் சிங்கு லாரித்தே எ ஷோஸ் மெமோரரபிள் த்ருவே ஆள் குரேஸ், ஆசி, இயூதே, எகிப்த், அராபி எ ஓத்ர் பே அஸ்த்ரான்ஷ்'', பாரிஸ், 1553.

பெர்னாதக், ஷ் ''லோ ஹோலோகாஸ்த் ஊப்லியே. லே மாசாக்ர் தெ சிகான்'' 1979.

புவாசார்டு, எஃப் ''நோத்தீஸ் சூர் லே சிகானி தெ ஹோங்ரி, கேன்'', 1816.

பாரோ, ஜி. ''தி ஸிங்காலி, ஆர் அன் அக்கவுன்ட் ஆஃப் தி ஜிப்ஸீஸ் ஆஃப் ஸ்பெயின்'', லண்டன், 1841.

கோயல்ஹோ, ஏ. ''ஒஸ் சிகானோஸ் தெ போர்த்துகல்'', லிஸ்பன், 1892.

கோலினோன், எம், ''லே கித்தான், வோர்க்டிலோ, த்ரதிசியோவ் எ இமாஷ், நூவெல் சொசியேத்தே மோரெல், ஃபோர் கால்கியர்'', 1975.

கோலோக்கி, ஏ. ''சிஙி ஸிங்காரி, ஸ்டோரியா த்யூன் போப்-போலோ எராந்தே'', தூரின் 1883.

கொஸான், எஃப்; ''மித் எ கூத்யூம் ரெலிஷியஸ் தெ சிகான்'' பேயோ, பாரிஸ், 1973.

ஃபிக்கோவ்ஸ்கி, ஜே. ''சிகாஉ போல்ஸ்கி ஸ்கியா ஹிஸ்தோ -ரிஸ்னோ—ஒபிஸாஷா,'' பான்ஸ்தவுனி இஸ்திதியூத், வார்சா 1953.

கோபின், ஏ. ''லே ஃப்ளாமெங்கோ'', ஃபிரெஞ்சு பல்கலைக் கழக அச்சகம், பாரிஸ், 1975.

கிராந்த், எஃப் ''மெமோரியா தெல் ஃப்ளாமெங்கோ'', எஸ்பாசா கால்ப், மாட்ரிட் 1980.

க்ரூப் ஏ.ஆர்.சி.ஏ 'லா மானோ அலோ சிங்காரோ—லா மாஜியா தி ஊனா குல்தூரா, இகிஸ், மிலான், 1978.

ஷோன்காக், ஐ. ''ப்ராப்ளம்ஸ் இன் தி கிரியேஷன் ஆஃப் எ ஸ்டேண்டர்ட் டையலக்ட் ஆஃப் ரோ-மான்ஸ்'', ஆஸ்டின், 1975.

ஹாய்லண்டு, ஜே. ''எ ஹிஸ்டாரிக்கல் சர்வே ஆஃப் தி கஸ்டம்ஸ், ஹேபிட்ஸ் அண்டு ப்ரெசன்ட் ஸ்டேட் ஆஃப் தி ஜிப்ஸீஸ்'', யார்க், 1916.

கென்ரிக், டி. அண்ட் புக்ஸான், ஜி. ''டெஸ்டினி ஆஃப் யூரப்ஸ் ஜிப்ஸீஸ்'', ஹைன்மன், லண்டன், 1973.

லா ஃபேந்த், ஆர். ''லோஸ் கித்தானோஸ், எல் ஃப்ளாமெங் -கோ இ லோஸ் ஃப்ளாமெங்கோ'', பார்னா, பார்சிலோனா, 1955.

லியேஷ்வா, ஜே. பி. ''ப்யூத்தாசியோன் சிகான், லா ரெவல்யூசியோன் பொஹேமியென்'', காம்ப்லெக்ஸ், ப்ரஸல்ஸ், 1975.

லோப்பெஸ் தெ மெனசஸ், ஏ. நோவதாத்ஸ் சோபர் லா இன்மிகிராசியோன் கித்தானா ஆ எஸ்பானா பார்சிலோனா, 1971

மக்டாவல், பி. ''ஜிப்ஸீஸ், வாண்டரர்ஸ் ஆஃப் தி வோர்ல்டு'' தேசிய புவியியல் சங்கம், வாஷிங்டன், 1970.

மக்ரிட்சி, டி. ''அக்கவுன்ட்ஸ் ஆஃப் தி ஜிப்ஸீஸ் ஆப் இண்டியா'' லண்டன், 1881.

மொரேய்ஸ், எம். ''ஒஸ்சிகானோஸ் நோ ப்ரேசில்'', ரயோ டி ஜெனீரோ, 1896.

நியூன்ஸ், ஓ. ஓ போவோ சிகானோ ''லிவ்ராரியா அட்போஸ் தோல்தா தா இம்ப்ரெசா'', ஒப்போர்ட்டோ, 1981.

போத்ரா, ஜி. ''கான்ட்ரிப்யூசியேரனி லா இஸ்தோரிக்கால் சிகானிலோர் தின் ரோமானியர்'', ஃபுத்தாசியா ரெகோல் கரோல், புக்காரஸ்ட், 1939.

போட், ஏ.எஃப் ''டீ ஸிகூனர் இன் யூரப் அண்டு ஏஷியன்'' ஹால், 1884—1885.

ராமிரெஸ் ஹெர்தியா ஜே.தெ.டி. ''நோஸோத்ரோஸ் லோஸ் கித்தானோஸ்'', மாந்ரிட், பார்சிலோனா, 1972.

ரேஹ்ஃபிஷ், எஃப் ''ஜிப்ஸீஸ், டிங்கர்ஸ் அண்டு அதா ட்ராவலர்ஸ்'', அகாடெமிக் அச்சகம், லண்டன், நியூயார்க், சான் ஃபிரான்சிஸ்கோ, 1975.

சங்கன், ஜே.சி. ''உய்ன் இக்கோல் ஷே லே சிகான்'', த்ருவா எ லிபெர்த், பாரிஸ், 1974.

ஸ்டாக்கி, டபிள்யூ. ''தி ரோடு டு சன்டியாகோ,'' ஜான்மரே, லண்டன், 1857.

நாடோடி சிறுவருக்குக் கல்வி

''நாடோடி சிறுவருக்காக ஆசிரியருக்குப் பயிற்சி'' அளிக்கும் கருத்தரங்கை பண்பாட்டுக் கூட்டுறவு அவை (ஐரோப்பிய அவை) ஜெர்மானியக் கூட்டாட்சி குடியரசிலுள்ள டோனோ ஷிங்களில் ஜூன் 20-25, 1983இல் நடத்தியது.

நாடோடி சிறுவரின் கல்விப் பிரச்சினைகளையும், அவர்களது பண்பாட்டையும் வரலாற்றைப் பற்றி மேற்கு ஐரோப்பிய ஆசிரியர்கள் அறிய வேண்டிய இயல்புகளையும் ஆய்வதே அக்கருத்தரங்கின் நோக்கம்.

நாடோடி மக்களின் தனி இயல்புகளை இக்கருத்தரங்கின் அறிக்கை வலியுறுத்தியது. நாடோடி சிறுவரின் கல்வி பற்றி ஆயும்போது இவ்வியல்புகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

''நாடோடிகளுக்கு எல்லா நாடுகளும் சொந்த நாடாகும். திரும்பிச் செல்லத்தக்க தாயகம் அவர்களுக்கு இல்லை. பெயரளவில் உதவி நாடக்கூடிய நாடும் அவர்களுக்கு இல்லை......... நாடோடியின் நாடு அவனது உள்ளமே: அதன் எல்லைகளும் உள்ளத்தால் வகுக்கப்படும்...... அவர்களது வாழ்க்கை நிலையும், தமது பண்பாட்டையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க விரும்பும் விழைவும், இதுவரை அவர்களுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள கல்வி முறையும், நாடோடிப் பெற்றோர் கட்டாய முறை எனக் கருதக்கூடிய அளவிலேயே இருந்து வந்துள்ளன. ஓரளவு இருந்தும் வருகின்றன. சூழ இருக்கும் மக்கள் நாடோடிகளைப் பற்றித் தவறான எண்ணங்களை விட்டுவிடுமாறு சொல்வோமானால் அவர்களுக்கு நாம் உதவி செய்வோர் ஆவோம். அவர்களுடைய கல்வி நிலையும் மாறும். அவர்களைத் தாழ்த்தி வந்த இன்றும் தாழ்த்தி வரும் அதே சாதனங்களைக் கொண்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும்... நாடோடிகளின் எதிர்காலமும் மறுவாழ்வும் பள்ளிப் பாடத்திட்டத்தையும் கல்வி நடைமுறையையும் பொறுத்துள்ளது எனலாம்.

இவ்வாண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் பண்பாட்டுக் கூட்டுறவு அவை, ஆசிரியர்களின் பண்பாட்டுறவுப் பயிற்சிக்காக 'சிகான் எ வோயார்ஷ் எனும் ஏட்டை வெளியிட இருக்கின்றது.

'யுனெஸ்கோ கூரியர்', மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் 'யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது' என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள்வேண்டுவோருக்குஅனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

துணை தலைமை ஆசிரியர்: ஓல்கா ரோடல்
நிர்வாக ஆசிரியர்: கில்லியன் ஒய்ட்கோம்ப்
ஆங்கிலம்: ஹோவார்ட்ப்ராபின் (பாரிஸ்)
ஃபிரெஞ்சு: அலெய்ன் லீவ்க் (பாரிஸ்)
ஸ்பானிஷ்: ஃபெர்னாண்டெஸ்-ஸாண்டோஸ் (பாரிஸ்)
ரஷ்யன்: நிகோலாய் குஸனெட்சோவ்
அராபிக்: சையத் உஸ்மான் (பாரிஸ்)
ஜெர்மன்: வெர்னர் மெர்க்ளி (பெர்ன்)
ஜப்பானிஸ்: சில்சிரோ கொஜிமா (டோக்கியோ)
இத்தாலியன்: மரியோ கெய்டோட்டி (ரோம்)
ஹிந்தி: ராஜ்மணி திவாரி (டெல்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் ப்ரோய்டோ (டெல்-அவிவ்)
பெர்சியன்: ஹுசைன் ரசம்ஜோ (டெஹ்ரான்)
டச்சு: பால் மோரென் (ஆண்ட்வெர்ப்)
போர்த்துக்கீஸ்: பெனெடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)
துர்க்கிஸ்: மெஃப்ரா இல்காசர் (இஸ்தாம்புல்)
உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)
கட்டலான்: ஜோர்ன் கார்ரெராஸ மார்ட்டி (பார்சிலோனா)
மலேசியா: அஸீஸா ஹம்சா (கோலாலம்பூர்)
கொரியன்: லைபக் சியங்-ஜில் (சியோல்)
சுவாஹிலி: டொமினோ ருத்தாயேபெசிப்வா (தார்-எஸ் ஸலாம்)
ஃபிரய்லி: ஃப்ரெடிரிக் பேர்ட்டூர் (பாரிஸ்)
கிரேட்டோ-செர்ப், மாசிடோனியன், செர்போகிராட்
ஸ்லோவேன் விட்டோமீர் சுதர்ஸ்கி (பெல்கிரேட்)
சீனம்: ஷென் குவாஃபென் (பீகிங்)
பல்கேரியன்: குரேன் குட்டேவ் (சோஃபியா)
கிரீக்: நிகோலஸ் பாபா ஜியார்ஜியோ (ஏதென்ஸ்)
அமைப்பு வடிவம்: ஜியார்ஜஸ் செர்வாட்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியருக்கே எழுதப்பட வேண்டும்.

Edited and Published by M. Mohammed Mustafa for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras - 600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras - 600 026.

(28ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சி மிக்க அன்னா அக்மபோவாவின் கவிதைகளிலும், பேசர்சீ எஸ்ஸெனின் பாடல்களிலும், மிகெயில் ஸ்வெட்லோவின் காவிய நயத்திலும் காணலாம். நிகழ்ச்சிகளைக் கவிஞர்கள் வர்ணிக்கிறார்கள். நாடோடிகளின் பொங்கிவரும் உணர்ச்சி வெள்ளம் அதற்குக் குறியீடான பேரெழிலைத் தருகிறது.

எங்கள் நாடகங்கள் பல்வேறு நாட்டினரிடையே நிகழும் உரையாடலாக அமைகிறது. கடந்த காலச் சொற்கள் நிகழ்கால மொழி என இரண்டு நாடோடி மொழிகளைக் கொண்டு உரையாடல்கள் அமைக்கப்படுகின்றன. ''நாங்கள் நாடோடிகள்'' என்ற நாடகத்தில் நாங்கள் மக்களைப் பற்றிக் கூறுகிறோம் கிராமிய விழா போன்று அமைத்து, மக்கள் முன்னிலையில் நாடக உத்திகளைக் கொண்டு மேடையேற்றுகிறோம். கிராமக் கதைகளை மிக அதிக ஊக்கத்துடன் பாடலும், நடனமும் கலந்து மக்களுக்கு அளிக்க விரும்பினோம்.

இந்த இனத்தின் உயிர்நாடி சுற்றித் திரிவதில்தான் உள்ளது. ஒரு கர்ண பரம்பரைக் கதைப்படி இவர்கள் முதலில் இந்தியாவில் நிலையாக இருந்தனர். ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் கடவுளரின் கோபத்திற்கு (அவர்கள் கலை பார்ப்போரின் உள்ளத்தில் ஏற்படுத்திய விளைவுகளாலோ, என்றும் அடிபணியாத அவர்களது புரட்சி மனப்போக்கினாலோ) ஆளாயினர். கடவுள் அவர்களுக்கு எதிராக அனுப்பிய பலத்த புயல் காற்றில் மனிதர்களையும் குதிரைகளையும், வண்டிகளையும் சிதற அடித்தது. புயல் ஓய்ந்த பிறகு, மனிதர்கள் முன்பின் அறியாத மக்களிடையே இருப்பதை உணர்ந்தனர். தங்கள் நாடு எது என்பதையே மறந்துவிட்டனர்.

அன்று முதல் முடிவில்லாத பயணம் தொடங்கியது. அவர்களுடைய வெறும் [illegible]ல்களை முதிர்ச்சியை நோக்கி ஆன்மிகப் புத்துணர்வை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்தன. எமெரால்டாவின் வாழ்க்கையைப் போன்றே சிறிய, உணர்ச்சிமிக்க நடனத்தை எங்களுடன் இணைந்து ஆட, பாரிஸில் மக்களை அழைக்கிறோம். தவிர்க்க முடியாத காதல் வேகம்பற்றி நாங்கள் அறிந்ததை —கார்மென் விவரித்ததை பார்வையாளருக்கும் உணர்த்த விரும்புகிறோம். 'டால்ஸ்டாயின் ''வாழும் பிணம்'' என்ற படைப்பில் ஃபெடியா புரோடசாவின் இதயத்தைத் துளைத்த ரஷ்ய நாடோடிப் பெண் மரஷா, திரும்பத் திரும்ப பாடல் நேர்த்தி பெறும் வரை பாடுவாள்.

எண்ணத்தின் உறுதிப்பாட்டினை நாடகம் மூலம் ஓரளவு பெற்ற நாங்கள் டால்ஸ்டாயின் எழுத்தினை மேடையேற்றி ஃபெடியா பிரோடஸ்ஸோவ் மூலம், வாழ்க்கையின் பொருள் என்ன என்பதை எங்களிடமே கேட்டுக் கொள்கிறோம். குப்ரினின் நாயகி ஒலெஸ்ஸியாவின் தூய்மையான அழிவற்ற காதலை மீண்டும் கொண்டுவருகிறோம். ஹெமிங்வேயின் தலைசிறந்த படைப்பான 'யாருக்காக மணி அடிக்கிறது' என்ற நூலின் ஆற்றமுடியாத சோகத்தை வெளிக்கொண்டு வருகிறோம்.

எங்களது மொழியின் கலைத்தன்மை அதிகமாக ஆக, எங்கள் படைப்புகளின் மனிதத் தன்மை மிகுதியாக ஆக மனிதரிடையே உள்ள உறவினைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஷேக்ஸ்பியர் 'காலங்களின் தொடர்ச்சி', என்று அழைத்ததைப் பொய்யாக்கும் நிலைக்கு நாம் சென்றுகொண்டிருக்கும் இன்றைய உலகில் இது மிக மிக அவசியம்.

தமிழில்; எஸ். சம்பத்குமார்

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிக்கடி இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாலும், இவர்கள் பஞ்சாபில் தோன்றியவர்களா, இல்லையா என்பதை உறுதியாகக் கூற இயலவில்லை. ஆனாள், இந்த ''ஐரோப்பியர்'' மக்களின் மொழியில் ஏராளமான இந்திய மொழிச் சொற்கள் கலந்துள்ளன என்பது மட்டும் உண்மை. எடுத்துக்காட்டு:

வீடு : *கெர்* (இந்தி—கர்)
மரம் : *ரூக்* (இந்தி—ரூக்)
உப்பு : *லோன்* (இந்தி—லோன்)
நிலம் : *பூவ்* (இந்தி—பூ)
மனிதன் : *மனுஸ* (இந்தி—மனுஸ்)
கரண்டி : *ரோஜ்* (இந்தி—டோஜ்)
கறுப்பு : *காலோ* (பஞ்சாபி— காலா)
வெள்ளை : *பார்னோ* (தார்டிக்—பானர் பரானர்
இளம் : *டெர்னோ* (இந்தி—டருண்)
நட : *கா* (இந்தி—ஜா)
உறங்கு : *சோவ்* (இந்தி—சோ)
வெளியே : *ஆவ்ரி* (இந்தி—பாகிர்)

அண்மை ஆண்டுகளில், பல்வேறு நாடுகளிலுள்ள நாடோடிகளிடையே ஒருங்கிணைவதற்கான ஆர்வம் தோன்றியுள்ளது. அரசியல் ஒருமைப்பாட்டையோ, ஆட்சி மண்டல ஒருங்கிணைப்பையோ இவர்கள் விழையவில்லை; மாறாக தங்களுடைய பொதுத் தோற்றங்கள் மற்றும் நெறிமுறைகள் அடிப்படையில் பண்பாட்டு ஒருமைப்பாட்டை விரும்புகின்றார்கள். இந்த இயக்கம், குறிப்பிட்ட அறிவறிந்தவர்களின் வட்டத்திற்குள் தோன்றியுள்ளபோதிலும், இது மேன்மேலும் வளர்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

பாரிஸ், ரோம், ஜெனீவா, காட்டிங்கன் ஆகிய நகரங்களில் நடந்த பல்வேறு நாடோடிகள் மாநாடுகளில், நாடோடி (ரொமானி) மொழியை ஒருங்கிணைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. இப்போதைக்கு, இந்த ஆர்வம், நடைமுறையில் நிறைவேறுமெனத் தோன்றவில்லை. ஏனெனில், ஒரு மொழியின் ஒருங்கிணைப்பை ஓர் அலுவலகத்தில் செய்துவிட இயலாது. இந்தச் சிக்கலின் கொள்கை நிலைகளை மட்டும் விவாதிப்பதால் பயனேதுமில்லை.

இப்பொழுது இதுகாறும் வாய்மொழியாகவே இருந்து வந்த ரொமானி மொழியில் எழுதுவதற்கான ஆர்வம் பெருகி வருகிறது. நாடோடிக் கதைகளும், பாடல்களும் மட்டுமின்றி, ''தனியார்'' ஆவணங்களும், இலக்கியங்களும் இம்மொழியில் எழுதப்பட்டுவருகின்றன. சில பருவ இதழ்களும் இம்மொழியில் வெளியிடப்படுகின்றன. யூகோஸ்லாவியாவில், ரொமானி மொழியில் எழுதப்பட்ட ரொமானி இலக்கணம் வெளியிடப்பட்டுள்ளது. ரொமானி மொழியில் இலக்கியங்களை வெளியிடுவதும், எழுத்து வடிவில் இம்மொழியைப் பரப்புவதும் ரொமானி மொழியின் ஒருங்கிணைப்புக்கு முதற்படியாக அமையும். மேலும், நாடோடிகளை, இன்றைய நவீன சமுதாயத்தின் ஓர் அங்கமாக ஆக்குவதற்கு இந்த இயக்கம் உறுதுணை செய்யும்.

தமிழில்; இரா, நடராசன்

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக இருந்த என் சாக்ருபனின் அறிக்கையின்படி ரஷ்யா, உக்ரெயின், கிரிமியா பகுதிகளில் 300,000பேர் உயிரிழந்தனர். யுகோஸ்லாவிய கணக்குப்படி செர்பியாவில் மட்டும் 28,000 நாடோடிகள் கொல்லப்பட்டனர். போலந்தில் உயிரிழந்வெர் எண்ணிக்கையை அறிவது கடினம். ஜோசப் டெனன்பாம் என்ற வல்லுநரின் கணக்குப்படி 500.000 நாடோடிகள் இங்கே உயிரிழந்தனர்.

தீரமும், அறிவும் மிக்க மிகப் பழமையான இனத்தவரான நாடோடிகள் சாவினை எதிர்த்துப் போராடினர். எனினும் எதிரிகள் கொடுமையாலும் பலத்தாலும் தோற்றனர். பட்டினியாலும் நோயாலும் அவதியுற்ற நிலையிலும் ஆஸ்விட்ஸ் குடியிருப்புகளுக்கு முன்னர் பாடியும் நடனமாடியும் குழந்தைகளை உற்சாகப்படுத்தி நடனமாடச் செய்தனர். சில இளைஞர்கள் தப்பியோட முயன்றனர். டானுடா செக் என்பவர் குறிப்பேட்டிலிருந்து, தப்பிச் சென்று மீண்டும் பிடிபட்டு பெரிய சுவர் அருகே சுட்டுத் தள்ளப்பட்டவர்களின் பெயர்களையும் கொல்லப்பட்ட தேதியையும் அறியலாம். போலந்தின் நீஸ்வீஸ் பகுதியில் போரிட்ட நாடோடிகளின் வீரத்தைக் கண்டவர்கள் அவர்களது மாவீரத்தை விவரித்துள்ளார்கள். அவர்கள் கத்தியை மட்டுமே கருவியாகக் கொண்டு, மிகப் பெரிய ஆயுதம் ஏத்திய எதிரிகளிடையே பாய்ந்த வீரத்தைப் புகழ்கிறார்கள்.

நாடோடிகள் கூட்டமாகக் கொல்லப்பட்டு, 40 ஆண்டுகளாகிவிட்டன. மனித இனத்தின் ஒரு பகுதிக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமையை நினைவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்கும் அறியாமைச் சுவர் உள்ளது.

''நாடோடிகளின் சட்டம்'' எனும் கருத்தைப் பரப்புவதற்காகச் செய்தித்தாள்கள் முயன்று வருகின்றன. பன்னாட்டு நிறுவனங்களும் அணுகப்பட்டுள்ளன. அச்சட்டம் கீழ்க்கண்ட மூன்று அடிப்படைகளைத் தழுவியுள்ளது. (1) பிரேசிலின் நகராட்சி ஒவ்வொன்றிலும் முகாமிடும் உரிமை. இதனால் நாடோடிகள் நகராண்மை அதிகாரிகளுடன் பிணங்காமலிருக்கலாம். (2) மருத்துவ உதவி பெறும், குறிப்பாக அம்மை குத்தப்படும் உரிமை, (3) 'ரொமானி', போர்ச்சுக்கீசிய மொழிகளில் எழுத்தறிவு பெறும் வாய்ப்பு. இதனால் தம் மொழியைப் பாதுகாத்துப் பண்பாட்டைப் பேண முடியும். பருவகாலப் பள்ளியே நாடோடிகளுக்குச் சிறந்த கல்வி முறை என்பது இப்போது தெளிவாகின்றது.

இவ்வாறாக, பிரேசிலின் வரலாற்று, பண்பாட்டு வளர்ச்சிக் காலம் முழுவதும் நாடோடிகள் அங்கு இருந்து வந்துள்ளனர். நாடோடிகளின் கலை, இலக்கியம், இடப்பெயர் ஆய்வு, வழக்கங்கள் ஆகியவைபற்றி ஓரளவு ஆராய்ச்சி நடைபெற்றுள்ளபோதிலும், பிரேசில் நாட்டின் மரபான வாழ்க்கைக்கு இவை ஆற்றியுள்ள தொண்டைக் கருதாமல், பிரேசிலின் பண்பாடு முழுவதையும் நம்மால் அறிந்துகொள்ள முடியாது.

தமிழில்: வள்ளுவன் கிளாரன்ஸ்

வாசகர் எண்ணங்கள்

சொல்லாக்கச் சுடர்

ஐயா,

'கூரியர்' இதழின் நீண்ட நாளைய வாசகன் நான். மிக நுணுக்கமாக அறிவியல் செய்திகளைக் கொடுக்கும் ஏடு இது என்பது உலகறிந்த செய்தி. என் போன்ற, அறிவியல் ஞானம் குறைந்த வாசகர்களும் கூட அரிய பெரிய அறிவியல் நுட்பங்களை எளிதாகப் புரிந்து கொள்ள இதழில் கையாளப்படும் புதிய கலைச் சொற்கள் பெருந்துணை புரிகின்றன. அதிலும் குறிப்பாக நவம்பர் '84 ''அண்டங்களின் தோற்றம்'' இதழில் கலைச் சொல் விளக்கப் பகுதியையும், கலைச் சொல்லாக்கப் பட்டியலையும் தனியே தந்தது சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல் இருந்தது. அண்டவியல் நுட்பங்களை அறிந்து கொள்ள வாசகர்களுக்கு வழிகாட்டும் சுடராக அப் பகுதிகள் அமைந்திருந்தன என்பது உண்மையிலும் உண்மை. இதழ்தோறும் தமிழுக்கு புதுப்புது சொல் வளம் சேர்க்கும் 'கூரியர்' இதழையும் உங்கள் முயற்சியையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மோ. க. முருகேசன்
இராசிபுரம்

இரகசியச் சுரங்கம்

ஐயா,

'அண்டங்களின் தோற்றம்' பற்றிய நவம்பர் '84 இதழ் கண்டு களிமிகக் கொண்டேன். பிரபஞ்ச இரகசியங்கள் மிகவும் நுட்பமாக விளக்கப்பட்டிருந்தது. கருத்து. விளக்கப்படங்களும் அதற்கான விளக்கங்களும் சிறப்பாக இருந்தன. விஞ்ஞானம் பயிலாதவர்களும்கூட நுணுக்கமான விஞ்ஞான உண்மைகளை புரிந்து கொள்ள வசதியாக விஞ்ஞான கலை நுட்பச் சொற்களைக்கொடுத்திருக்கிறீர்கள். அதிலும் தமிழுக்கு ஆங்கில விளக்கம் பெறும் வகையில் அமைந்திருந்தது அருமை.

கார்ல் சாகன் எழுதிய 'உயிரின் ரகசியம்' என்ற ஆய்வுக் கட்டுரை பிரபஞ்ச மெங்கெனும் உள்ள உயிரினங்களைப் பற்றி ஆய்ந்து கூறுவது ஆற்புதமாக இருந்தது. அதேபோன்று 'தமிழரின் அண்டகோளச் சிந்தனை' என்ற அன்னி தாமஸ் எழுதிய சிறப்புத் தமிழ்க் கட்டுரை, பிரபஞ்சம் பற்றித் தமிழரின் அறிவியல் நுட்பச் சிந்தனைகளை அழகாகத் தொகுத்துக் கூறியுள்ளதன் மூலம் நம் பெருமை மேலும் உயர்த்தியுள்ளது.

வித்துவான் மு. அருணாசலம்,
செங்கற்பட்டு

நம்ப முடியவில்லை!

ஐயா,

எதிர்பாராமல் 'யுனெஸ்கோ கூரியர்' நவம்பர் '84 இதழை மாவட்ட மைய நூலகத்தில் காண நேர்ந்தது. 'அண்டங்களின் தோற்றம்' பற்றிய அந்த இதழின் கட்டுரைகளும் படங்களும், படவிளக்கங்களும், வண்ணப்படங்களும் என்னை. மலைக்க வைத்து விட்டன. இவ்வளவு அதிநுட்ப அறிவியல் செய்திகளையும், எளிதாகவும் இனிமையாகவும் தமிழில் சொல்ல முடியும் என்பதை இவ்விதழ் மூலம் அறிந்து வியப்பில் மூழ்கினேன். என்றே கூறலாம்.

தமிழரின் தனிப் பெரும் ஆற்றலை செயல் வடிவில் உலகத்தின் முன் நிலை நாட்டும் இதழ் 'கூரியர்' என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அர. திருமாறன்
மதுரை

வெளிநாட்டில் கல்வி

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு

(மேற்கு ஜெர்மனி)

கல்வி ஆண்டு: அக்டோபர் முதல் செப்டம்பர் வரை.

பல்கலைக் கழக நுழைவு: அயல் நாட்டு மாணவர்கள் சொந்த நாட்டில் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்குரியதாகவும், ஜெர்மன் உயர்நிலைப்பள்ளிச் சான்றிதழுக்கு இணையானதுமான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மற்றவர்கள் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வு எழுதியோ அல்லது ஒரு பல்கலைக் கழகத்தில் ஓராண்டுச் சிறப்பு ஆயத்த வகுப்பு படித்தோ தகுதி பெறலாம். ஆக்கன், பெர்லின், பான், பிரிமன், தர்ம்ஸ்டாட். பிராங்பர்ட், ஹாம்பர்க், ஹனோவர், ஹைடல்பர்க், கார்ல்ஸ்ரூகி, கோலன், மைன்ஸ், மூன்ஷன், மூன்ஸ்டர். சார்புரூக்கன் ஆகிய பல்கலைக் கழகங்களில் இந்த ஆயத்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மருந்தியல், வேளாண்மை, வன இயல், தோட்டக்கலை, உணவு வேதியியல், மருத்துவம் போன்ற சில துறைகளிலும் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களிலும். உயர்கல்விக் கல்லூரிகளிலும் கல்வி பெறச் செய்முறைப் பயிற்சியும் தேவை. அனுமதிக்கான விண்ணப்பம் குறைந்தது ஓராண்டுக்கு முன்னர் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

அயல்நாட்டு மாணவர்கள் தங்கள் நாட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசுத் தூதரகத்திடமிருந்து குடியிருப்பு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். ஜெர்மன் உயர்கல்வி நிலையம் ஒன்றிடமிருந்து அனுமதிக் கடிதம் நிதிநிலை குறித்த சான்று ஆகியவற்றுடன் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மொழி: கல்வி பயில ஜெர்மன் மொழியில் சிறந்த அறிவு இன்றியமையாதது. எனவே, உயர்கல்வி பயில விரும்பும் அயல்நாட்டு மாணவர்கள் ஜெர்மன் மொழியில் சிறப்பு நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். பெரும்பாலான நாடுகளில் ஜெர்மன் மொழி கற்பதற்கு வசதிகள் உள்ளன. ஜெர்மனியிலும் பெரும்பாலான பல்கலைக் கழகங்கள், அயல்நாட்டு மாணவர்களுக்கு ஜெர்மன் மொழி வகுப்புகளை நடத்துகின்றன

ஒரு கல்வி ஆண்டுக்கான செலவு (1982இல்). பண அலகு: ஜெர்மன் மார்க். வாடகை, புத்தகங்கள் உட்பட வாழ்க்கைச் செலவு மாதத்திற்கு 800 மார்க் ஜெர்மன் கட்டாய மருத்துவக் காப்பீட்டுக்காக மாதத் தவணைத் தொகை 30 மார்க். பதிவு செய்தல், கற்பித்தல் ஆகியவை இலவசம். அயல் நாட்டு மாணவர்கள், பகுதி நேரப் பணிகளில் ஈடுபடாமல் தங்கள் செலவுகளைச் சமாளிப்பதற்குப் போதிய நிதி வசதிக்கு ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

தகவல் நிலையங்கள்:

- Deutcher Akademischer Austauschdienst (German Academic Exchange Service) (DAAD), Headquarters, Kennedyallee, 50, D - 53 Born 2; Branch Offices: இந்தியாவில் (176, Golf Links, New Delhi).
- Atademische Auslandsamter (அயல் நாட்டு மாணவர்கள் உதவிப்பணி) அல்லது பல்கலைக் கழகங்களின் தலைமை அலுவலகங்கள் (பொதுவான கல்வித் தகவல்கள், ஆயத்த மற்றும் மொழி வகுப்புகள், தங்கும் வசதி ஆகியவற்றுக்காக).
- Allgemeiner Studentenausschluss (ASTA) அல்லது ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலுமுள்ள மாணவர் மன்றங்கள் (இரயில் பயணம், நூல்கள் வாங்குதல், அரங்கு நுழைவுச் சீட்டுக்கள் முதலியவற்றுக்கு மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பற்றிய தகவலுக்காக).
- World University Service, Catholic and Pratestant Student councils, கல்வி நிறுவனங்களிலுள்ள மாணவர் நலச் சார்பாளர்கள்.

யுனெஸ்கோ கூரியர் - மாத இதழ்

சந்தா விபரங்கள்

ஆண்டுச் சந்தா ரூ 21/—

கல்வி நிலையங்கள், நூலகங்களுக்கு சலுகை சந்தா ரூ 19/-

விபரங்கட்கு எழுதுக :

யுனெஸ்கோ கூரியர்

தென்மொழிகள் புத்தக நிறுவனம்

18 கிழக்கு ஸ்பார்டாங்க் சாலை, சென்னை-6000 031

(பத்தாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களிடமிருந்து புதிய உத்திகளைக் கற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் இவர்கள் தங்களுடைய கைவினைப் பொருள்களின் உற்பத்தியளவைப் பெருக்கி, அதனால் ஏற்படும் பொருளாதார நலன்களைத் துய்த்து வருகின்றார்கள். இதனால் இவர்களுடைய வாழ்க்கை முறையிலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. உதாரணமாக, பெண்களின் ஆடைகள் புதிய சூழலுக்கேற்ப மாறுதலடைந்துள்ளன. ஆடவர்களும் தங்கள் சிகையலங்காரத்தைச் சிறிது மாற்றிக் கொண்டு புதிய தோற்றத்துடனிருக்கிறார்கள்.

மரபு மார்க்கங்களில் பிடிவாதமாகச் செல்லும் குழுமங்கள் தங்கள் உயிர் வாழ்க்கைக்கே போராட வேண்டியி ப்பதால், தங்களுடைய மரபுகள் அனைத்தையும் பாதுகாக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். தங்கள் வண்டிகளின் அலங்காரங்களையோ, விருந்துகளையோ, சடங்குகளையோ, மரபு நாட்கீட்டியையோ அவர்கள் கையாள முடியவில்லை. இந்த அவல நிலை, காடுலியா லோகார்களுக்கு மட்டும் ஏற்படவில்லை. தங்கள் மரபுகளைக் கைவிடாமலிருந்து இனமற்றுப் போவதா, அல்லது மரபுகளைக் கைவிட்டு விட்டு, புதிய பண்பாடுகளை ஏற்றுக்கொண்டு, புதிய பொருளாதார நலன்களை அனுபவிப்பதா என்ற இக்கட்டான நிலையிலுள்ள எல்லாக் குழுமத்திற்குமே இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது.

காடுலியா லோகார்களாகவே இருந்து மாள்வது அல்லது காடுலியா லோகார்களாக இல்லாமல் வாழ்வது—இந்த இரு வழிகளில் எதைத் தேர்ந்தெடுத்தாலும் இச்சிக்கலுக்குத் தீர்வு ஏற்பட்டுவிடாது. இந்த நேர் மாறான இரு வழிகளுக்கிடையே, காடுலியா லோகார்களின் பண்பாட்டுத் தற்பண்பினைப் பாதுகாப்பதற்கு வாய்ப்பளிக்கும் பெரு வழியும் உள்ளது. அந்த வழியை ஆராய்ந்து, பயன்படுத்த வேண்டும். ஏற்படும் நன்மை அவர்களுக்கு மட்டுமல்ல. ஒரு சமூகக் குழுமம், வளம்பெற்று செயலாக்கத்துடன் வாழ்கிறதென்றால் அதனால், சமுதாயம் முழுவதற்குமே நன்மைகள் விளையும்.

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

வனங்கள் உருவாகியுள்ளன. இவையெல்லாம், நாடோடிகளிடையே மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதற்கான சான்றுகள்.

பன்னாட்டு நாடோடிக் குழு போன்ற அரசியல் சங்கங்களும் ஏற்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாக, இவர்கள் தங்களுக்கு ஒரு பன்னாட்டுத் தகுநிலையைத் தேடிக்கொள்ள முயலலாம். இவர்களுடைய இடம்பெயரும் இயல்புதான், இவர்களுக்கெனத் தேசியச் சட்டங்களை இயற்ற முடியாத நிலையை உருவாக்கியுள்ளது. ஒரு பன்னாட்டுக் கட்டமைப்பின் கீழ்தான் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ளவும், ஒர வஞ்சனைகளை ஒழிக்கவும் முடியும் என்பதை இவர்கள் உணர்ந்து வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளில் பல நாடோடிகள் மாநாடுகள் நடந்துள்ளன. இம்மாநாடுகளில், நாடோடிகளின் தற்பண்பு வலியுறுத்தப்பட்டது. நாடோடிகளின் தாயகம் இந்தியா என்பது நினைவு கூறப்பட்டது. சமூக முன்னேற்றத்தின் எல்லா நலன்களும் நாடோடிகளுக்கும் நீட்டிக்கப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டது. நாடோடிகளின் சமூக அமைப்பு குறித்து 1978இல் ஐரோப்பியப் பேரவை ஏற்றுக்கொண்ட பரிந்துரையில் நாடோடிகளின் கோரிக்கைகளுக்கு ஒரு சட்ட அடிப்படை வகுத்துரைக்கப்பட்டிருக்கிறது. நாடோடி மக்களின் சமூகப் பண்பாட்டுச் சிக்கல்களில் ஐக்கிய நாடுகள் அமைவனமும், யுனெஸ்கோவும் மேன்மேலும் ஆர்வம் காட்டி வருகின்றன.

நாடோடிகளும் தனிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். சிலர், தங்களுடைய பண்பாட்டை வெளிப்படுத்த முயன்று வருகின்றனர்; பெரும்பான்மைச் சமுதாயத்தினரின் ஆதிக்கத்தை எதிர்த்து, சமத்துவமும் நீதியும் கோரி வருகின்றனர். வேறு சிலர், தங்களுடைய ஆதி வரலாற்றை ஆராய்ந்து வருகின்றனர். நாஜி அடக்குமுறையில் உயிர்த்தியாகம் செய்த நாடோடிகளுக்கு நினைவுச்சின்னங்கள் எழுப்பவும் முயன்று வருகின்றார்கள். நாடோடிகளைப் பொறுத்தவரையில், நிகழ் காலத்தில்தான் கடந்த காலம் வாழ்கிறது.

தமிழில்: இரா. நடராசன்

அண்மை வெளியீடு !



''சோஷியல் சைன்ஸ் ரிசர்ச் அண்டு விமன் இன் தி அராப் வோர்ல்டு'' எனும் நூல், ''அராபிய உலகில் மகளிர் பற்றிப் பல்துறை ஆய்வு'' என்பதுபற்றி 12 அராபிய நாடுகளின்பெண்சமூகவியலார் ஆராய்ந்த யுனெஸ்கோ கூட்டத்திற்கென தயாரிக்கப்பட்டஏழு ஆய்வுகளைத் தருகின்றது. இதில் எழுத்தாளர் -கள், கொள்கையியல், ஆய்வியல் பற்றியும், வருங்கால ஆய்வின் நோக்கம், முக்கியத்துவம் பற்றியும் கூறுகின்றனர். இதில் அப்பகுதிப் பெண்கள்பற்றிய இன்றைய ஆய்வு விளக்கமும் அராபிய, ஆங்கில ஃபிரெஞ்சு மூலநூல்களின் பட்டியலும் உள்ளன.

175 பக். ஐ. எஸ். பி. என். 92-3-102140-0, 75 ஃபிரெஞ்சு ஃபிராங். இணை பதிப்பு யுனெஸ்கோ: ஃபிரான்ஸ் பின்டெர் (பதிப்பகம்), 5 டிரைடன் தெரு, லண்டன் டபிள்யூ சி. 2. இ. 9 வ. மே., பிரிட்டன். பிரிட்டனில் அட்டைப் பதிப்பை விற்கும் உரிமை இவர்களுக்கு மட்டுமே உண்டு.

INTERDIT AUX GITANS